


# ஈழத்தில் சிறுவர் இலக்கியம்

## ஆய்வு இலக்கியம்

கலாபூஷணம்
கேணிப்பித்தன் ச.அருளானந்தம் B.A.M.Lit, PhD, SLEAS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09/03/2024

# ஈழத்தில் சிறுவர் இலக்கியம்

A. KUGAN
72, 2nd LANE
ANANDAPURI
TRINCO
0471960960

## ஆய்வு இலக்கியம்

கலாபூஷணம்
கேணிப்பித்தன் ச.அருளானந்தம் B.A.M.Lit, PhD, SLEAS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஈழத்தில் சிறுவர் இலக்கியம் |
| ஆசிரியர் | : | கேணிப்பித்தன் ச. அருளானந்தம் |
| வகை | : | ஆய்வு நூல் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| அட்டைப் படம் | : | அ. அ. அருள்சுலக்ஷிகா |
| படங்கள் | : | ச. அ. அருள்பாஸ்கரன் |
| முதற்பதிப்பு | : | 30 - 07 - 2019 |
| வெளியீடு | : | அருள் வெளியீட்டகம்<br>37 / 7, மத்திய வீதி,<br>உவர்மலை - திருகோணமலை.<br>தொலைபேசி இல: 026-2221507. |
| கிடைக்குமிடம் | : | லங்கா புத்தகசாலை.<br>F.L. 14.1. டயஸ் பிளேஸ்.<br>குணசிங்கபுரம்.<br>கொழும்பு-12.<br>தொ.பே. இல: 011- 2341942 |
| ISBN | : | 978-955-51451-0-7 |
| விலை | : | ரூபாய் 350/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



சிறுவர்களை சித்திரக் கலையில் ஈடுபடவைப்பதையே தவமாகக் கொண்டு திருகோணமலையில் "சிறுவர் சித்திரக் கலைக்கூடத்தை" அமைத்து, சிறுவர் இலக்கியத்தில் கதை, நாடகம், நாவல், சித்திரம் என ஈடுபட்டு உழைத்தவர். நேற்றுவரை இருந்து விட்டு இன்று ஓவியமாகிவிட்ட ஆசிரியர் ஓவியர் எனது மகன் அ.அருள்பாஸ்கரன் அவர்களுக்கு "ஈழத்தில் சிறுவர் இலக்கியம்" நூல் சமர்ப்பணம். – ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கேணிப்பித்தன் ச.அருளானந்தம் அவர்களின் ஈழத்தில் சிறுவர் இலக்கியம் என்ற நூலுக்கு அணிந்துரை எழுதுவதை ஒரு பேறாகக் கருதுகிறேன். ஈழத்தில் சிறுவர் இலக்கியம் பற்றி எழுதுவதற்குப் பல தேடல்களைச் செய்து அரிய விடயங்களை இந்நூலில் தந்துள்ளார்.

சிறுவர் என்போர் யார்? எவ்வகையான இலக்கியங்கள் எவ்வகை வயதுடைய சிறார்களுக்குப் பொருத்தமானவை? சிறுவர் இலக்கியஙகள் எவ்வாறு அமைய வேண்டும்.? சிறுவர் இலக்கியங்கள் எழுதுவோர் அறிந்திருக்க வேண்டிய திறன்கள் எவை? என்பனவற்றை அழகாக விளக்கியுள்ளார். நமக்குத் தெரியாத இந்திர காளியம், வச்சிரணந்தி, பன்னிரு பாட்டியல் போன்ற நூல்களை எமக்குத் தெளிவுபடுத்துவதை எடுத்துரைத்துள்ளார்..

சிறுவர் இலக்கியங்களில் முக்கியமானதான பாடல்களின் முன்னோடிகளை அறிமுகம் செய்கிறார். இத்தகைய செய்திகளை நம்மவர்கள் மனதிருத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக விபரமாகத் தந்துள்ளார். நமக்கு தெரியாத சிறுவர் இலக்கிய கர்த்தாக்களை அறிமுகம் செய்துள்ளார். பேராசிரியர் கலாநிதி செ.யோகராஜா சிறுவர் இலக்கியத்துக்காக செய்யும் அர்ப்பணிப்புக்களை கேணிப்பித்தனின் ஈழத்துச் சிறுவர் இலக்கியம் நூல் புடம்போடுகிறது.

சிலரின் பாடல்களை நாம் அறிவதற்காக அறிமுகம் செய்கிறார். இப்பாடல்கள் வரண்முறைகளுக்குள் வருகின்றனவா என்பதை பரிசீலிக்கும்படி ஆசிரியர் கூறுகிறார். அழ.வள்ளியப்பாவின் பாடல்களை விஞ்சிய பாடல்கள் நமது ஈழத்துக் கவிஞர்களால் எழுதப்பட்டுள்ளன என நம்மை ஊகிகக வைக்கிறார்.

ஈழத்தில் தமிழ் மொழித்தினம் யாரால் அறிமுகம் செய்யப்பட்டது? எதனால் தமிழ் மொழித்தினம் கொண்டாடப் படுகிறது? இன்று அந்த நிகழ்ச்சி கண்ட விளைவு என்ன? என்பதைக் குறிப்பிட்டு எச்சரிக்கின்றார். இந்நூலாசிரியரின் சிந்தனை நம்மை சிந்திக்க வைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடத்திட்டமும் இலவசப் பாடநூல் நினியோகமும் ஈழநாட்டின் கல்வி முறையில் மகத்தான திருப்பத்தை ஏற்படுத்தியது. பாடநூல்களில உள்ள விடயங்களை மாணவர்கள் விரும்பிக் கற்கும் முறை தமிழ்மொழித் தினத்தினால் அதிகரித்தது. பாடசாலைகள் இயந்திரத்தன்மை வாய்ந்த புதிய சமூகத்தினரை உருவாக்கி வருகிறது். நமது சமூகம் எவ்வாறு பொருள் சம்பாதிக்கலாம். அதற்குரிய வழிவகைகள் யாவை? என்பவற்றைத் தேடும் களமாகப் பாடசாலைகள் மாறிவிட்டன.

இந்த நிலையை விரைந்து மாற்றியமைக்க வேண்டியது நமது கடமையாகும் ஈழத்தில் சிறுவர் இலக்கியம் என்ற இந்நூல்பல விடயங்களை நமக்குச் சுட்டிக் காட்டுகிறது. விழிப்புணர்வினைத் தருகிறது. இந்நூலாசிரியருக்கு நன்றி கூறும் அதே வேளை அவரது பணி தொடரவும் வாழ்த்துகிறேன்.

க.அன்பழகன்
கலாசார அலுவலர்
44 / 21, கண்டி வீதி, கிருஷ்ணபுரம்
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகுமுகவுரை

நான் அரிவரி என்னும் அன்றையக் கல்வி முறையில் கற்றுக் கொண்டிருந்த வேளையில் எனக்கு ஆடிப்பாடி கற்பித்த ஆசிரியர்களை மதிக்கிறேன். பொருள் தெரியாதவிடத்திலும் அவர்கள் கற்பித்த முறை என்னைக் கவர்ந்தது. சிறப்பாக 'குண்டுடிக்கி குடுகிடுக்கி கூடை கையில் ஏந்தி குனிந்து நின்று பழம்பொறுக்கும் குறத்தி ஏடி அம்மே' என்று எனது ஆசிரியர் ஆடிப்பாடி அபிநயத்தோடு கற்பித்த பாங்கும், அவரோடு சேர்ந்து ஆடிப்பாடியதும் இன்றும் என் மனக்கண்முன் நிழலாடுகிறது.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று

என்றும், ஆத்திசூடியைப் பாடமாக்கவும் சொல்லித்தந்த அந்த ஆசிரியப் பெருந்தகைகளை இன்றும் என்மனம் போற்றுகிறது.

அறஞ்செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
எண் எழுத்து இகழேல்
ஏற்பது இகழ்ச்சி
ஐயம் இட்டுண்
ஒப்புரவு ஒழுகு.
ஓதுவது ஒழியேல்.
ஔவியம் பேசேல்
அஃகம் சுருக்கேல்

எனக்கு அப்போது அவற்றின் பொருள் தெரியாது. ஆனால் பெரியவனாகியதும் அவற்றின் பொருளை விளங்கிக் கொண்டேன். நமது இலக்கிய வரலாற்றைப் படிக்கும்போது கிராமியப் பாடல்களும். தாலாட்டு, விளையாட்டுப் பாடல்களும் என்னைக் கவர்ந்தன. அவர்களைப் போன்று நானும் ஆசிரியராக வந்து கற்பிக்க வேண்டும் என்ற பேராசையை மனதில் வளர்த்துக் கொண்டேன்.

எனது கிராமப் பாடசாலையில் ஐந்தாம் தரம் சித்தியடைந்ததும் அப்பாடசாலையை விட்டு நீங்கி ஆங்கிலக் கல்வி கற்கச் சேர்க்கப்பட்டேன். ஆங்கிலப் பாடசாலையில் மூன்றாம் வகுப்பில் சேர்க்கப்பட்டேன். பாடங்கள் எல்லாம் ஆங்கிலத்தில் நடந்தன. திணறிவிட்டேன். எனினும் எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களின் உந்துதலால் உசாரடைந்தேன். அதனால் விருப்புடன் வகுப்பு மாணவர்களோடு சேர்ந்து ஓடினேன். ஆசிரியர்கள், கொள்வோன் கொள்வகை அறிந்து மனதிருக்குப்படி கற்பித்தர்கள். **'Nursery Rhymes'** கற்பிக்கும்போதும், **'Fairy tales'**என்ற **'Nursery Stories'**கற்பிக்கும்போதும் அந்த ஆசிரியர்கள் கற்பித்தல் முறையில் காட்டிய ஆர்வம் என்னைப் பெரிதும் கவர்ந்தன. எனக்கு அவை பின்னர் பெருந்தீனியாகின. ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலப் பாடத்துக்காக எனக்கொரு பரிசு கிடைத்தது. **'Alice in Wonderland'**என்ற நூல் பரிசாகக் கிடைத்தது. அந்நூலினை **Louis Carroll** எழுதியிருந்தார். அது சிறுவர்களுக்கான அருமையான நூலாகும்.

எனது ஆசிரியர்கள் **Nursery Rhymes** பலவற்றைக் கற்பித்தார்கள். சில பாடல்களைப் புரிந்து கற்றோம். அன்று கற்றுக்கொண்ட

**'Little drops of water**
**Little grains of sand**
**Make the mighty ocean**
**And the pleasant land'**

**'Twinkle Twinkle little star**
**How I wonder what you are**
**Up above the world so high**
**Like a diamond in the sky'**

இவ்வாறான பல பாடல்களை பல முறைகளில் பாடிக் காட்டி எங்களை மெய்சிலிர்க்க வைத்த ஆசிரிய திலகங்களை மனதிருத்திக் கொள்வேன். 'ருவிங்கிள் ருவிங்கிள்' என்ற பாடலை கர்நாடக இசையிலும் பாடி அசத்தினார்கள். பல புரியாதுவிட்டன. மேல்வகுப்பு கற்கும்போது அவற்றின் பொருள் விளங்கியது.

எல்லா மொழிகளிலும் தாலாட்டுப் பாடல்களும், விளையாட்டுப் பாடல்களும் உண்டு. மொழிதான் மனித நாகரிகத்துக்கு வித்திட்டது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

பின்னர் ஆசிரியராகிக் கிராமப்புறப் பாடசாலைகளில் கற்பிக்க அனுப்பப்பட்டேன். ஆசிரியர்கள் கீழ் வகுப்புக்களில் கற்பிப்பதில் ஆர்வம் காட்டப் பின்னிழுத்தார்கள். ஆனால் நான் கீழ்வகுப்புக்களில் விரும்பிச் சென்று கற்பித்தேன். ஆடலும் பாடலும் அபிநயத்தலும் எனது வகுப்புக்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொனிப் பொருளாக இருக்கும். பாடங்களை முன்னாயத்தம் செய்து பாடல்களாகவும், கதைகளாகவும், நாடகங்களாகவும், விளையாட்டுக்களாகவும் தயாரித்துப் பிள்ளைகளுக்குக் கற்பித்தேன். அவர்களைச் சிற்றில் கட்டி அதில் விளையாட்டு அடுக்களைகளைச் செய்யவிட்டுச் சமைக்கும்படி செய்வேன். விளையாட்டு பிள்ளைகளைக் கவர்வன.

ஒவ்வொரு விடயத்துக்கும் பொருத்தமான பாடல்களைக் கிராமிய இசையில் பாடி ஆடச்செய்தேன். பாடசாலைகக்கு வராதிருந்த பிள்ளைகளும் வரத்தொடங்கினார்கள். நான் எப்போது வகுப்பினுள் நுழைவேன் என்று பிள்ளைகள் காத்திருப்பார்கள். மாணவ மன்றங்களை இயங்க வைத்து அனைவரையும் பங்கு கொள்ளச் செய்தேன்.

நானாகவே பாடல்களையும், கதைகளையும், நாடகங்களையும் எழுதி கற்பித்தேன்.ஆசிரியர் சேவையே அற்புதமானதும் மனநிறைவைத் தருவதுமாகும். அதனாலேயே ஆசிரிய சேவையை விரும்பி ஏற்றேன். இவ்வாறுதான் சிறுவர் இலக்கியம் என்னுள் புகுந்தது. சிறுவர் இலக்கியத்துக்கு முன்னோடிகளாக நமது ஆன்றோர்களே சிறப்பாகத் தாய்மார்களே இருந்துள்ளனர்.

அவர்களைத் தொடர்ந்து நாம் வாழும் சூழலும். அங்கு வாழும் சமூகமும்தான்.இதனைத் தொடர்ந்து வீடும், சமூக நிறுனங்களும், பின் நண்பரகள் என இது விரிந்து செல்லும்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்குக் குழந்தை உளவியல், கற்பித்தல் முறையியல், கல்வித் தத்துவம், மொழி, கணிதம், ஒருங்கிணைந்த கற்றல் போன்ற விடயங்களை முன்பள்ளி ஆசிரியர்களுக்குக் கற்பித்தேன்.

நான் கல்வி நிர்வாக சேவைக்கு பரீட்சை மூலம் தெரிவாகிக் கல்வி அதிகாரியாக வவுனியாவிலுமன் பின்னர் திருகோணமலையில் மாகாணக் அமைச்சின் மாகாணக் கல்வித் திணைக்களத்தில் மேலதிகக் கல்விப் பணிப்பாளராகச் சேவைசெய்து வந்தேன்.

வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் செயலாளராக இருந்த திரு.சுந்தரம் திவகலாலா முன்பள்ளி அபிவிருத்திக்காக 1997ல் ஒரு அலகினைத் திறக்க முன்வந்தார். வடகிழக்கு மாகாணத்தில் முன்பள்ளிகளைப் பதிந்தும், தரமான பாடத்திட்டத்தை உருவாக்கவும், ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கவும் என அந்த அலகு செயற்பட்டது. அதற்குப் பொறுப்பாக என்னைப் பணிப்பாளராக நியமித்தார்.

எனது ஆரம்பக் கல்விச் செயற்திட்டங்களையும், சிறுவர் இலக்கியங்களில் உள்ள பரீட்சையங்களையும், முன்பள்ளிக் கல்வியில் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபாட்டையும் அறிந்து முன்பள்ளி அலகினை என்னிடம் ஒப்படைத்தார். அதனை நன்கு உணர்ந்து செயற்பட்டேன். அத்துடன் சிறுவர் இலக்கியத்திலும் கவனம் செலுத்தினேன். இன்று சிறுவருக்காகப் பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளேன். சிறுவர்களுக்காக எழுதுவது ஒரு வரம் என்றே கருதுகிறேன். முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வளவாளராகவும் வழிகாட்டியாகவும் சேவையாற்றுகிறேன். அதனால் சிறுவர் இலக்கியம் பற்றிய சிந்தனை பொறியாக மூளையில் தட்டியது.

நண்பர் கலாநிதி செ.யோகராசா அவர்கள்'கவிஞர் கருணை யோகன்' என்னும் புனைபெயர் மூலம் இலக்கிய உலகில் காலடி பதித்தவர். நாங்கள் சிந்தாமணி ஊடாக இலக்கிய உலகினுக்கு அறிமுகமானவர்கள். அவர்இன்று இலக்கிய ஆய்வாளனாக,கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக அரிய சேவைகள் செய்துவருபவர். சிறுவர் இலக்கியத்தில் அதீத கரிசனையுடையவர். அவர்'ஈழத்தில் சிறுவர் இலக்கியம்' பற்றிய ஒரு நூலை எழுதும்படி அன்புக் கட்டளையிட்டார். அதனையிட்டுச் சிந்தத்துக் கொண்டிருந்த போது ஒரு தீவிபத்தில் சிக்கினேன். நான் மருத்துவ மனையில் இருந்தேன். "நீ விசா இல்லாமல் யமலோகம் வரப்பார்க்கிறாய். யமலோகத்துக்கு நீ லாயக்கில்லை" என்று யமதர்மன் திருப்பி அனுப்பி விட்டான். வந்து விட்டேன். தீயும் என்னுடலைத் தீய்க்கவில்லை. ஒவ்வொன்றும் ஏதோ காரணம் கருதியே நடக்குமாம். அப்படியென்றால் நான் உயிர் பிழைத்ததும் ஒரு காரணம் கருதியா?

இந்த நூலை எழுதி முடிக்கிக வேண்டும் உடல் நலம் குன்றிவிட்டதால் எழுதவது பெரும் சிரமமாக இருந்தது. எனினும் எனது கனவு இப்பிறவியில் நூறு நூல்களையாவது எழுதி முடிக்க வேண்டும் என்பதே.அதன் விளைவும், தேடலுமே இந்நூலாகும். இந்நூலுக்கான தேடல்களைப் பல நூல்கில் இருந்து பெற்றுக் கொண்டேன்.

நான் தேடிய கருப்பொருட்களை இந்நூலில் கண்டுகொண்டால் நான் நன்றி தெரிவிப்பது மானசீகமாகப் புரியும்.

நன்றியுடன்
கேணிப்பித்தன் ச.அருளானந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் சிறுவர் இலக்கியம்

சிறுவர் இலக்கியம் பற்றிச் சிந்திப்போர், சிறுவர் என்பவர் யார்? சிறுவர் இலக்கியம் என்பதென்ன? சிறுவர் இலக்கியம் என்று தோற்றம் பெற்றது? ,அதன் வகைகள் யாவை? அவ்விலக்கியங்கள் எவ்வகை வயதுடையோருக்கானவை, அதனை வளர்த்தெடுத்தோர் யார்? சிறுவர் இலக்கியத்தின் முன்னோடிகள் யார்? ஈழத்தில் சிறுவர் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டோர் யார்? இன்றுவரை ஈடுபட்டுழைப்போர் யார்? என்பனவற்றை அறிந்திருக்க வேண்டும். அப்படி அறிந்திருந்தால்தான் அவர்களைப் பின் பற்றிச். சிறுவர் இலக்கியங்களைப் படைக்கலாம்.அவை பற்றி விமர்சனம் செய்யலாம். பின்னர் ஈழத்தில் சிறுவர் இலக்கியம் பற்றிய வளர்ச்சியைச் சிதறவிடலாம்.

## சிறுவர் என்போர் யார்?

இவ்வினா அறிஞர்களிடையே பல்வேறு கருத்துக்களைத் தோற்றுவிக்கக் காரணமாக உள்ளது. பலரும் பல்வேறு விதமாகக் கூறுவார்கள்.

ஆங்கிலத்தில் **'children'** என்ற சொல்லைப் பொதுவாகச் சிறுவர் என்று அழைக்கிறார்கள். குழந்தை, மழலை, பாலர், தவ்வல், பச்சைமண் எனத்தமிழில் உள்ள அத்தனை சொற்களையும் சிறுவர் என்ற பதத்தினுள் அடக்கியுள்ளதை அவதானிக்கலாம். சிறுவர் என்ற பதம் பன்மைப்பொருளில் பயன்படுத்தப் படுவதையும் நோக்கலாம்.

இங்கு பால்நிலைச் சமத்துவத்தைக் காண்கிறோம். ஆண். பெண் எனப்பாகுபாடு செய்யப்படவில்லை. ஆனால் கீழைத்தேசச் சான்றோர்கள் பெண்பிள்ளைகள் பூப்பெய்தும் வரை பால்நிலைச் சமத்துவத்தைக் காட்டுவர். பூப்பெய்துவது குறிப்பாக முன்குமரப் பருவத்திலேயே (12 – 15 வயது)இடம் பெறுகிறது. ஆதலால் சிறுவர் என்ற பொதுச் சொல்லையே நாம் சிறுவர் இலக்கிய ஆய்வுக்காக எடுத்துக் கொள்வோம்.

நமது ஆன்றோர்கள் நமக்கு 'வளர்ப்புக் கலை' வடிவங்களைத் தந்துள்ளனர். வளர்ப்பு என்பது வளர்த்தல் எனும் தொழிலைக் குறிப்பது. இது ஒரு தாய் தன் பிள்ளையை வளர்க்கும் முறையின் சிறப்பைக் கூறுவது. அன்புடன் பிள்ளையை வளர்க்கும் பாங்கில் பாடப்பெறும் வளர்ப்புக்கலை வடிவங்களையே 'பிள்ளைத் தமிழ்' என்கிறார்கள்.

நம் முன்னோர்கள் வளர்ப்புக் கலை பற்றிக் கூறும் 'பிள்ளைத்தமிழ்'ஆண்பாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் எனப் பாகுபாடு செய்து பிள்ளைத் தமிழ் பாடினர். பாலியற் சமத்துவம் பேணப்படவில்லை. பெண்பாற் பிள்ளைத் தமிழ் 14-15 வயது வரையும், ஆண்பாற் பிள்ளைத் தமிழ் 16 வயது வரையும் பாடியுள்ளனர.

"காப்பு முதல் ஆகிய யாப்புவகை யெல்லாம்
பூப்பு நிகழ்வளவும் பெண்பாற்குரிய"
எனவும்,

"தோற்ற முதல் யாண்டு ஈரெட்டளவும்
ஆற்றல் சான்ற ஆண்பாற் குரிய".

எனவும் 'இந்திர காளியம்' என்னும் நூல் கூறுகிறது.

இவற்றை ஒத்ததாக மேல்நாட்டுச் சிறுவவர் இலக்கிய எழுத்தாளரும் ஆய்வாளருமான ஜெனற் அடம்ஸிமித் என்பார் 3 – 15 வயதுவரை உள்ளோர் சிறுவர்கள் என்ற வரையறையினுள் அடங்குவர் என்றார்.

நவீன கல்வியியலாளர்கள் பிறந்தது முதல் 15 - 18 வயது வரை உள்ளோர் சிறுவர்களாகக் கொள்வார்கள்.

அவற்றை கீழ் கண்டவாறு வகுத்துப் பருவங்களாகக் குறிப்பிடுவர்.
00 – 03 வயதினர் குழந்தைப் பருவம்
03 - 05 வயதினர் முன்பிள்ளைப் பருவம்
05 - 11 வயதினர் பிள்ளைப் பருவம
11 - 15 வயதினர் முன்குமரப் பருவம்
15 – 18 வயதினர் குமரப் பருவம்

இதேபோல் ஐக்கிய நாடுகள் சபை சிறுவர்கள் பற்றி
கூறுகிறது.

'ஐக்கிய நாடுகள் சபையின் கூற்று'
ஐக்கிய நாடுகபள் சபை 00– 18 வயதுவரை உள்ளோரை சிறுவர்களாக ஏற்றுள்ளது.

'பிறந்தது முதல் பதினெட்டு வயது வரையான ஆண். பெண் இருசாராரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் என்ற வரையறைக்குள் அடங்குவர்' என ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவருக்கான உரிமைப்பட்டயம் கூறுகிறது. ஆதலால் இந்த வரையறைக்குள் நின்று சிறுவர் இலக்கியத்தினை ஆராயலாம்.

ஆக சிறுவர் இலக்கியம் 00 – 18 வயதினரை உள்ளடக்கியதாக எழுதப் படலாம். அதே வேளை ஒவ்வொரு பருவத்துக்கும் பொருந்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

## சிறுவர் இலக்கியம் என்பதென்ன?

ஒரு மொழி தொடர்ந்து வாழவேண்டுமானால் அது அடுத்த தலைமுறைக்குச் சென்று சேரவேண்டும். அடுத்த தலைமுறையான நமது சிறார்களுக்கு நமது தமிழ் மொழியை அவர்கள் கற்பதற்கு எந்தளவு கரிசனை காட்டுகிறோம்? நாம் இந்த வகையில் படுதோல்வி அடைந்து வருகிறோம்.

ஒரு மொழியின் அடிப்படை வடிவமே அதன் எழுத்து வடிவமே. எழுத்து வடிவத்தில் சிறார்களிடம் கொண்டு சேர்ப்பதில் பாடத்திட்டத்துக்கு அடுத்து முதன்மை வகிப்பது சிறுவர் இலக்கியமாகும். அதனைப் புரிந்து கொண்டு சிறுவர் இலக்கியங்களைப் படைக்க வேண்டும். அப்படிப் படைத்து சிறுவர்களைச் சிறுவர் இலக்கியங்கள்பால் ஈர்த்தெடுத்தல் நமது பொறுப்பாகும்.

"சிறுவருக்காக, சிறுவர் உளத்தோடு, சிறுவர் மொழியில் உலக அனுபவத்தை விளக்க உருவாகும் படைப்பே சிறுவர் இலக்கியம் ஆகும்". என டாக்டர் பூவண்ணன் கூறுவார்.

'சிறுவர் இலக்கியம் பற்றிச் சிந்திப்பவர்கள் சிறுவர்களை நன்கு அறிந்திருக்க வேண்டும்' என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறுவார்.

மேலும் அவர் 'சிறுவரின் உளநிலை, ஒழுக்கநிலை, ஆளுமை ஆகியவற்றை வளர்த்தெடுக்கும் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். சிறுவர்களது வயது, விருப்புக்கள், குணாம்சங்கள், தேவைகள், நாட்டங்கள், ஆர்வங்கள், மனப்பாங்கு, சூழல், நுண்மதி, சமூகநடத்தைக் கோலங்கள், மொழித்திறன்,அறிவு ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும்'. என்பார்.

சிறுவர் இலக்கியம் பற்றிப் பேசப்புகுமுன் பெரியோர் இலக்கியத்தையும் சற்றுப் பார்த்தல் நலம். இலக்கியம் என்பது மனிதன் வையத்துள் வாழ்வாங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வதற்கான வழிமுறைகளை வகுத்துக் காட்டுவதாகும். அவ்வகை இலக்கியங்கள் மனிதம் பற்றிய விழிப்புணர்ச்சிகளையும், பண்பாட்டுக் கோலங்களையும், மனித விழுமியங்களையும் விபரித்துக் காட்டுவன. உதாரணமாக நமது இதிகாசங்கள் இவற்றை அடிநாதமாகக் கொண்டே கட்டி எழுப்பட்டுள்ளன. இராமாயணம் போன்றன இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். திருக்குறள் வாழ்வியலை வளப்படுத்த எழுந்த இலக்கியமாகும்.

இவ்வாறு வாழ்ந்தால் மனிதப் பிறவியின் பேற்றை வளப்படுத்தி வாழலாம் எனக் கூறுகிறது. இவ்வாறே சிறுவர் இலக்கியங்களும் வழிவகுக்க வேண்டும். அப்போதுதான் அது சிறுவர் இலக்கியமாகக் கருதமுடியும். சிறுவர் இலக்கியம் படைப்பவர்கள் சூழற் சித்தரிப்பு, சொற்பயன்பாடு, சந்த ஓட்டம், சிறுவரது உளநிலை, மொழிவளம், வயது, போன்றவற்றைக் கவனத்தில் கொள்ளுதல் நலம் என அறிஞர்கள் வற்புறுத்துவர்.

## சிறுவர் இலக்கியம் என்று தோற்றம் பெற்றது?

சிறுவர் இலக்கியம் எப்போது தோன்றியது? இவ்வினா கேட்கப் படவேண்டியதே. இதற்குப் பலர் பல்வேறு விடைகளை முன்வைப்பர். மனிதன்தான் மொழியைக் கண்டு கொண்டவன். அதன் பயன்பாட்டை உணர்ந்து எழுத்துருக்களையும், எழுதும் முறைகளையும் கண்டு வளர்த்தெடுத்தான். அதன் பயன் மாபெரும் இலக்கியங்கள் தோன்றின. உலகில் எங்கெல்லாம் மனித இனம் உண்டோ, அங்கெல்லாம் சிறுவர் இலக்கியங்களும் இருக்கத்தான் செய்யும்.

ஐரோப்பியர் வந்தபின்னரே கீழைத் தேச நாடுகளில் சிறுவர் இலக்கியம் பிறந்ததாகச் சிலர் கருதுவர். ஆனால் அது அப்படியல்ல. என்று மனிதஇனம் தோன்றியதோ, என்று உணர்வுகளும் மொழியும் தோன்றினவோ அன்றே சிறுவர் இலக்கியங்களும் தோன்றி விட்டன. அவை ஒழுங்கமைக்கப்பட்ட

ஆவணங்களாக இருக்க வில்லை. நாடோடி இலக்கியங்களாக உலா வந்தன. ஐரோப்பியரின் வருகையால் அச்சியந்திரம் வந்தது. வாய் மொழியாக வந்தவை அச்சு வாகனம் ஏறி பின்னர் நூல்களாக மாற்றம் பெற்று வருகின்றன

'பழந்தமிழ் இலக்கியங்களில் குழந்தை இலக்கியம் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை. ஆனால் குழந்தைகள் பற்றிய செய்திகள் உள்ளன' என பேராசிரியர் சிவத்தம்பி கூறுவார். தொல்காப்பியம் தமிழில் கிடைக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழந்தமிழ் நூல். அந்நூலில் உள்ள 185 வது சூத்திரம் தமிழில் குழந்தை இலக்கியம் வழங்கி வந்ததற்கான சான்றாக உள்ளது எனக் குறிப்பிடுவர்.

## சிறுவர் இலக்கிய வகைகள்.

பேராசிரியரும் சிறுவர் இலக்கிய ஆய்வாளருமான எனதருமை நண்பர் கலாநிதி.செ.யோகராஜா அவர்கள் சிறுவர் இலக்கியத்தைப் பின்வருமாறு வகைப்படுத்துவர். அதுதான் வரன்முறையுமாகும். ஏனெனில் சிறுவர் இலக்கியமும் ஏனைய இலக்கிய வகைபோன்று பரந்து விரிந்ததே.

- சிறுவர் பாடல்கள்
- சிறுவர் கதைகள்
- சிறுவர் புதிர்கள்
- சிறுவர் நெடுங்கதை
- சிறுவர் நாவல்
- சிறுவர் நாடகங்கள்.
- சிறுவர் சித்திரக் கதைகள்
- சிறுவர் அறிவுசார் நூல்கள்
- மொழிபெயர்ப்புக்கள்
- சிறுவர் சஞ்சிகைகள்.
- சிறுவர் காட்டூன் படங்கள்

சிறுவர் இலக்கியங்கள் என்பதனை நமது அறிஞர்கள் குழந்தை இலக்கியம் என்றனர். சிலர் மழலையர் பாடல் என்பர். வெறுமனே பாடல்கள்தான் சிறுவர் இலக்கியங்களா? இல்லவே இல்லை.

மேலே பேராசிரியர் தந்துள்ள சிறுவர் இலக்கிய வகைகளை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நம்மவர்களிற் பலர் மழலையர் பாடல்களைப் பற்றிக் கூறினார்களேதவிர சிறுவர் இலக்கியங்கள் பற்றி விரிவாக எவரும் கவனத்திற் கொள்ளவில்லை. இதிலிருந்தே சிறுவர் இலக்கியம் என்பது வெறுமனே மழலையர் பாடல்கள் மட்டுந்தான் என்று கருதுகின்ற நிலை உருவாகியுள்ளது. ஆனால் இன்று அந்நிலை மாறிவிட்டது.

சிறுவர் இலக்கியங்கள், பாடல்கள், கதைகள், நாவல், நாடகம், புதிர்கள், சஞ்சிகைகள், என விரிந்து செல்வதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது தாய்மாரும், பாட்டிகளும், சிறுவரை உற்சாகப் படுத்தி உலவிவரக் கதைகளைப் புனைந்து கூறினார்களே. அவற்றை மறந்து விட்டோமோ? சிறார்களைச் சிந்திக்கத் தூண்டும் புதிர்களைக் கேட்டு இரசித்தார்களே. சிறார்களின் விளையாட்டுக்களைக் கண்டு மெய்மறந்தார்களே. அவர்களது ஆடல் பாடல்களைப் பார்த்தும், கேட்டும் இன்புற்றார்களே. அவற்றை மறந்து விட்டோமா? அவர்கள் வளர்த்துவிட்ட இலக்கிய வகைதானே சிறுவர் இலக்கியங்கள்.

ஒரு மொழி தொடர்ந்து வாழவேண்டுமானால் அது அடுத்த தலைமுறைக்குச் சென்று சேரவேண்டும். அடுத்த தலைமுறையான சிறார்களுக்கு நமது தமிழ் மொழியை அவர்கள் கற்பதற்கு எந்தளவு கரிசனை காட்டுகிறோம்? ஆனால் நமது சான்றோர்களான நம் முன்னோர்கள் தங்கள் வழித்தோன்றல்களுக்காகப் பாதுகாத்த செல்வங்கள்தான் இச் சிறுவர் இலக்கியங்கள். இதனை மனங்கொண்டு நாமும் நமது சிறார்களுக்காக பாதுகாக்க வேண்டிய முதுசங்களைத் தேடியறிந்து பாதுகாக்க வேண்டும்.

## சிறுவர் இலக்கியங்களின் முன்னோடிகள்

உலகிலுள்ள அனைத்து மொழிகளிலும் சிறுவருக்கான இலக்கியங்கள் உள்ளன. அவை எழுத்தில் இல்லாதிருக்கலாம். வாய் மொழியாகவும் உலா வரலாம். சிறுவர்களது இலக்கியம் அவர்களது வளர்ச்சிக்கும், திறன்விருத்திக்கும் உந்து சக்திகளாகின்றன. சிறுவர் இலக்கியங்கள் எங்கெங்கு செழுமை உடையனவாக இருக்கின்றனவோ அங்கெல்லாம் சிறந்த சமூக அமைப்புகளைக் காணலாம் என அறிஞர்கள் கருதுவர்.

சிறுவர் இலக்கியங்கள். வயதுக்கேற்பவும், அவர்களின் உளநிலை, மொழிவளம், போன்றவற்றைக் கவனத்தில் கொண்டும் படைக்கப் படவேண்டும். சிறுவர் இலக்கியத்தின் ஊற்றுக்கண் நமது கிராமியப் பாடல்களும், கிராமிய கதைகளுமே ஆகும்.நமது கிராமங்களில் ஆடும் விளையாட்டுக்களைப் பாருங்கள். அவை ஆட்டமும், பாட்டமும் நிறைந்ததாக இருக்கும். சில விளையாட்டுக்களில் பாடல்களும் இடம்பெறும்.. கிராமங்களில் எங்கும் ஆடலும் பாடல்களாகவுமே இருக்கும். தாய்மார்களே சிறுவர் இலக்கியங்களான கதைகள், பாடல்கள் போன்ற அனைத்துக்கும் வித்திட்டவர்கள் எனலாம். சங்ககாலப் பாடல்கள் அமைந்தமாதிரியே இப்பாடல்களும் அமைந்துள்ளன.

சிறுவர்களை மகிழ்விப்பதற்காக பெற்றோரும், சமவயதினரும் போலச்செய்து மகிழ்வதுதானே நாடகம்? ஆதிகாலத்தில் நமது முன்னோர்கள் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை முறையாகத் தம் அனுபவங்களை மற்றவர்களுக்கும் பகிரும் முறையாக அவற்றைச் செய்து காட்டினர். இந்தச் செய்து காட்டலே பின்னர் நாடகமாகப் போற்றப் பட்டது. இன்றும் நமது சிறுவர் போலச் செய்து மகிழ்கின்றனர்.

இவற்றைநன்கு புரிந்து கொள்வோர் சிறுவர் இலக்கியம் பரந்து பட்டது என்பதைப் புரிந்து கொள்வர்.சிறுவர்கள் ஆண்,பெண் இருபாலரும் சேர்ந்து விளையாடும் விளையாட்டுக்களில் அதிகமாகப் பாட்டும் கலந்திருக்கும். சிலவற்றில் நாடகம்போன்று உரையாடல்களும் இருக்கும். பூசினிக்காய் இழுத்தல் இவ்வகையைச் சார்ந்தது.

## சிறுவர் இலக்கியம் எவ்வாறு அமையவேண்டும்?

டாக்டர் மு.வரதராசன் அவர்கள் குழந்தைப் பாடல்கள் பற்றியே பேசுகிறார். கா.நமசிவாய முதலியாரும் மணி திருநாவுக்கரசு முதலியாரும் பாடல்களும், கதைகளும் எழுதிப் பாடநூல்களிலும் சேர்த்தார்கள். அவர்கள் காட்டிய வழிகளைப் பின்பற்றிப் பலர் இன்றுவரையில் எழுதித் தொண்டு செய்து வருகிறார்கள். பழந்தமிழ் பாடல்களும், அவ்வை, பாரதி, வள்ளுவர், கா.நமசிவாய முதலியாரும் மணி திருநாவுக்கரசு போன்றோரும் தொடக்க காலத்தில் சிறுவர்களுக்கான பாடல்களை எழுதித் தந்தனர். அவர்களை முன்னோடிகளாக ஏற்க வேண்டும்.

அன்று அவர்கள் செய்த தொண்டினைப் பின்பற்றியே நாம் இன்று தொடர்கிறோம். நாளை நம்மைப் பின்பற்றிப் பலர் தொடர்வார்கள்.அவர்களை வழிகாட்டிகளாகக் கொண்டே நாம் சிறுவர் இலக்கியங்களை மீளாய்வு செய்து எழுதுகிறோம்.

பலநாடுகளிலும் சிறுவர்களுக்கான பாடல்கள் வழக்கிலுள்ளன. அவை குடும்பப் பாடல்களாக வழங்கிவந்தன. எடுத்துக் காட்டாகக் குழந்தை அழும்போது தாயின் தாலாட்டு ஒலி குழந்தையின் செவிவழி நுழைந்து மூளையில் பதிந்து கிரகிக்கச் செய்கிறது. அக்குழந்தை தாயின் ஒலியைச் செவிமடுத்துப் பழக்கப் படுத்திக் கொள்கிறது.

தாயின் குரலையும், அயலவர்களின் குரலையும் வேறுபடுத்தி உணர்கிறது. தாய்மார் பாடக்கூடிய பாடல்கள் 0 – 2 வயதுவரையான குழந்தைகளுக்குப் பொருத்த முடையதாக இருக்கும். ஓசைநயமுடைய பாடல்கள் இன்பமூட்டுவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தாய் தன் மழலைக்கு இன்பமூட்டவும், அதனைச் சந்தோசிக்கச் செய்யவும். குழந்தைகளின் உடல்வளர்ச்சியில் கவனம் செலுத்தச் செய்வதைக் குறிக்கோளாகவும் கொண்டு இயங்குவதை அவதானிக் கலாம். தாய் குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டும்போது தனது கனவுகளை தாலாட்டில் புகுத்திப் பாடுவாள். ஒவ்வொரு மொழி பேசுபவர்களும் தம்மொழியில் தாலாட்டுப் பாடுவதைக் காணலாம். ஆங்கிலமொழீல் பல தாலாட்டுப் பாடல்களைக் கண்டேன். இப்பாடலிலும் தாய் தனது உள்ளக் கிடக்கையையும், சூழலையும் எடுத்து விளக்குவதை உணரலாம்.

**'Sleep baby sleep**
**Our cotage vele is deep**
**The little lamb is on the green**
**With wooly flease so soft and clean**
**sleep baby sleep**

**sleep baby sleep**
**Dawn where the woodbines creep**
**Be always like the so mild**
**A kind and sweet and gentle child**
**sleep baby sleep**

இதையே நாம் மொழி மாற்றம் செய்து கேட்டால் எப்படி இருக்கும்.

'கண்மணியே கண்ணுறங்கு
கண்ணுறங்கு கண்மணியே

வீட்டு முற்றம் பரந்திருக்கு
விரிந்து பசுமை போர்த்திருக்கு
ஆட்டுக் குட்டி சடைபோர்த்தி
ஆடுது அமைதி தனைச்சேர்த்து
('கண்மணியே கண்ணுறங்கு
கண்ணுறங்கு கண்மணியே)

வீசு தென்றல் தாலாட்ட
விடியல் கோழி நடமாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் தெய்வம் விழிமூடி
போய யர்ந்து துயில்கொள்ளு
(கண்மணியே கண்ணுறங்கு
கண்ணுறங்கு கண்மணியே)

அனுபவம் பேசுகிறது.
தாய் தனது குழந்தையின் முகத்தை நோக்கி, பிஞ்சுக் கைகளைப் பற்றி ஒவ்வொரு விரலாகப் பிடித்து நீவி நெட்டிமுறித்து 'இது சோறாம்', 'இது பொரியலாம், ''இது கறியாம்'. என ஒவ்வொன்றாகக் கூறிக் கொஞ்சி குழந்தையின் கையை விரித்து அதன் உள்ளங்கையில் சோற்றைப் போடுவதுபோல் பாவனை செய்து ஒவ்வொரு விரலையும் பிடித்து, கறிவகைகளையும் சொல்லுவாள். பின் தனது கையை மடக்கி முளங்கையால் குழந்தையின் உள்ளங்கையில் ஆடைகடை, கீரைகடை என்று மத்தினால் வெண்ணெய் கடைவதுபோல் பாசாங்கு செய்வாள்.

அச்செயல் முடிந்ததும் தம் உள்ளங்கையில் இருந்து உணவை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து இது அப்பாவுக்காம், இது அம்மாவுக்காம், இது காகத்துக்காம், இது கோழிக்காம், இது குருவிக்காம், இது நம்ம பசுவுக்காம். இது எங்கட பிள்ளைக்காம்,என்று பங்கு வைப்பாள். தான் சாப்பிடுவதுபோல் பாசாங்கு செய்தபின் பிள்ளையின் கையைப் பற்றியவாறே "நண்டு ஊருது, நரி ஊருது"என மணிக்கட்டிலிருந்து கமக்கட்டுவரை தனது விரல்களை நகர்த்தி கெக்கிளம் காட்டுவாள். குழந்தை சிரித்து மகிழும்.தாய் சிரிக்கச் சேயும் சிரிக்க அந்தச் சிரிப்பில் அத்தாயின் உள்ளம் சொர்க்கத்தையே காணும்.

அது நடக்கக் காலடி எடுத்து வைக்கத் தொடங்கும். குழந்தைக்கு ஏற்ற வகையில் அழகிய தள்ளு வண்டிபிள்ளையிடம் ஒப்படைக்கப் படும். அக்குழந்தை தள்ளு வண்டியைக் கைகளால் பற்றியதும் வண்டி அசையும். அந்த அசைவில் பிள்ளை எடுத்தடி வைக்கும். வண்டி நகரப் பிள்ளையும் தள்ளிக் கொண்டு நடக்கும். தாயும் தந்தையும் தமது கைகளால் தாளம் தட்டித்தட்டிப் பாடுவார்கள். பார்த்த சேய் மகிழ்ந்து கைகால்களை அசைத்து எடுத்தடி வைக்கும். அக்குழந்தை தள்ளுவண்டியைத் தள்ளிக் கொண்டு நடக்க முயற்சிக்கும். தாய் தந்தையரின் உள்ளம் துள்ளும். ஆனாலும் அக்குழந்தை விழுந்து விடாதிருக்க மனம் கடவுளை வேண்டிக் கொள்ளும். பிள்ளையை உற்சாகப் படுத்த வாய்கள் பாடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நடந்து வாறான் குழந்தை வேலன்
நடக்கும் அழகைவந்து பாருங்கடி
தத்தக்க புத்தக்க தாளம் போடுங்கடி
தாந்திமி திமியெனக் கூத்துமாடுங்கடி"

இப்படிப் பாடியாடி மகிழ்விப்பர். அவர்களது நோக்கம் பிள்ளையின் சந்தோசமே. இச்செயல்களினால் தாய் நமது பண்பாட்டையும் உணர்வுபூர்வமாக ஊட்டிவிடுகிறார். அதேவேளை பிள்ளை தனக்குப் பாது காப்புக் கிடைப்பதை உணர்ந்து கொள்கிறது.

பிள்ளை எழுந்து எடுத்தடி வைத்து நடக்கும் அழகைப் பார்த்து ஆனந்திப்பர். அதற்கேற்ற பாடல்களைப்பாடி மகிழ்ச்சியை மேம்படுத்துவர். அவர்களது கைகளை வீசிக்காட்டித் தாளம் போட்டுப் பாடுவார்கள். பிள்ளை அதற்கேற்ப நடந்து விளையாடும்.அந்தப் பிள்ளை விளையாட்டில் தம்மை மறப்பர். பிள்ளைக் கலி தீர்க்க வந்த செல்வமாய்ப் போற்றுவர். விளையாட்டோடு பலவற்றையும் கற்றுக் கொள்கிறது.

"கை வீசம்மா கை வீசு
கடைக்குப் போகலாம் கை வீசு
மிட்டாய் வாங்கலாம் கைவீசு"

என்று தாய் பாடிக் கைகளை ஆட்டி அதற்கேற்பத் தாளம் போடும்போதும் குழந்தை தானும் அவ்வாறே சந்தோசித்துக் கைகளை வீசி ஆட்டும்.இந்தப் பாடல் குழந்தைப் பருவத்துக்கும், முன்பிள்ளைப் பருவத்துக்கும் பொருத்தமான பாடலாகும்.

ஒரு பிள்ளை வெறுமனே சும்மா இருக்காது. அதன் கைகால்கள் அசைந்தபடியே இருக்கும். கைகளை வீசும். அது முடிந்ததும் பிள்ளை அசைந்தாடும். இதனைப் பார்த்த பெற்ற மனம் சந்தோசத்தால் துள்ளும். உணர்வுகள் பொங்கிப் பாடலாகி வெளிவரும். பாடலுடன் ஆடலும் வெளிப்படும்.

"சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சாத்துக்கும் சோத்துக்கும் சாய்ந்தாடு"

என்று தாய் பாடியாடும் போது குழந்தையும் முன்னும் பின்னும் ஆடியசைந்து மகிழும். அதனால்தான் டாக்டர் மு.வ. உயர்ந்த கருத்துக்கள் அப்பருவத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையற்றது என்றார். ஆனால் கருத்துள்ள பாடல்கள் தேவையில்லை என்று யாரும் ஒதுக்கிவிடமாட்டார்கள். அந்ததப் பருவத்துக்கேற்ற பாடல்கள் கட்டாயம் தேவை. அதற்கான பாடல்களை நமது முதுசமான 'நாட்டுப்புற இலக்கியங்களில் உள்ளன. குழந்தை கருவறையில் உருவாகும் தருணம் தொடக்கம் அது பிறந்து வாழ்ந்து மண்ணுள் மறையும் போதும் பாடல்களாகவே உள்ளன.

'ஆனை ஆடுமாம் எங்கட பிள்ளை
என்னானை அது பொன்னானை
எங்கள் குலத்து மதயானை'

என்றும் பாடுவார்கள். பிள்ளை ஓசைநயத்துக்கு ஏற்ப அசைந்தாடும்.

அப்பாடல்கள் ஓசையுடையதாகவும், ஒலிநயம் மிக்கதாகவும் இருந்தால் நலம் என்பார்கள். அந்தப்பருவத்தில் பிள்ளையின் மனதில் பதியும் பாடல் பின்னர் ஒரு பருவத்தில் அப்பாடலில் உள்ள கருத்துக்கள் அப்பிள்ளையின் வாழ்க்கைக்கு உதவும். அதேநேரத்தில் வழிகாட்டியாகவும் அமையும். இவ்வகைப் பாடல்கள் முன்பிள்ளைப் பருவத்துக்கும், பிள்ளைப் பருவத்துக்கும் பொருத்தமுடையதாக இருப்பதை அவதானிக்கலாம்.

பாரதியாரும், கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையும் குழந்தைகளுக்காகப் பாடல்கள் எழுதி உயர்ந்த உணர்ச்சிகளை இலக்கியமாக்கி வாழவைத்தார்கள். பாரதியின் பாடல்கள் இலகுவானதாகவும் உயர்ந்த உணர்சிகளைக் கொண்டனவாகவும் அமைந்தன. அவை பிள்ளைப் பருவத்தினருக்கும், முன் குமரப்பருவத்தினருக்கும், குமரப்பருவத்தினருக்கும் பொருத்தம் உடையனவாக இருப்பதை அவதானிக்கலாம்.

'ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா

கூடி விளையாடு பாப்பா – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா'

இவை போன்ற அழகிய பாடல்களைப் பாடினார். உயிரினங்கள் தோன்றிய காலத்தில் இருந்தே இனப்பெருக்கமும் தொடங்கி விட்டது. உயிரினங்களில் தாவரங்களின் இனப் பெருக்கம் ஒருவிதமாக அமைந்துள்ளது. தாவரங்கள் ஓரிடத்தில் நிற்கும் தன்மை கொண்டவை. அவற்றிடையேயும் ஆண், பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வெவ்வேறாக இருப்பினும், அவற்றின் இனப்பெருக்கத்துக்கு சில வெளி முகவர்களான காற்று, வண்டு, மற்றும் பல்வேறு பூச்சிகள் உதவி புரிகின்றன.

விலங்கினத்தின் இனப்பெருக்கம் வித்தியாசமானது. ஆண் பெண் சேர்க்கையினால்தான் இனப்பெருக்கம் நடைபெறும். அவ்வுயிரினங்கள் தமது சந்ததியினரை அன்போடும், அரவணைப்போடும் போற்றி வளர்த்துள்ளதை நாம் உணரலாம். இவற்றிலும் மனித இனம் ஒரு படி உயர்ந்ததாக இருப்பதை அவதானிக்கலாம். மொழி மனிதனுக்கு உதவுகிறது. மொழியும், உணர்ச்சியும் சங்கமித்து உயிரோட்டத்தைக் கொடுக்கிறது. மனிதர்கள் தமது சிறுசிகள் இன்புறுவதற்குத் தாங்கள் அவர்களாகவே மாறி மகிழ்சியடையச் செய்வதோடு தாங்களும் மகிழ்வதை எந்த வார்த்தைகளாலும் வர்ணிக்க முடியாது.

கருவறையில் சிசு உருவாகிய நாட்தொடக்கம், அது பிறந்து தாயின் மடியில் வளர்ந்து. பின்னர் சமூகத்தில் இணையும் வரை வீட்டிலும் சமூக அமைப்புகள் மூலமும் அனுபவங்களைப் பெறுகின்றன.

மொழி தோன்றியதும் தமது வழித்தோன்றல்களை ஒலியெழுப்பி அரவணைத்தன. இதனை மனித இனத்தில் சிறப்பாகக் காணலாம். மனித இனத்தில் தாய்மாரின் தாலாட்டு எடுத்துக் காட்டும். எந்த மொழி பேசுகின்றவர்களும் தம் மொழியில் தாலாட்டுவதை இன்றும் காணலாம். இதனை நாடோடிப் பாடல்கள் மூலம் உணரலாம்.

குழந்தைகள் விளையாடும் போது ஒருவித ஒருங்கிசைவோடு பாடியாடுவதையும் உற்று நோக்குகின்றவர்கள், கிராமியப் பாடல்களைப் பற்றிய புதுமைகளை உணர்வர். நாம் சிறுவர்களாய் இருக்கும் போது நமது தாய் பாடிய ஓசைநயங்களையும், ஒலிவேறுபாடுகளையும் நினைவு கூர்ந்து பார்த்தோமா?

எந்தப் பேராசிரியர்களும், ஆய்வாளர்களும் நாடோடிப் பாடல்களைச் சான்றுகளாக ஏற்றுக் கொள்வர்.சிறார்களை மழலையர் என்றும், தவ்வல்கள் என்றும் குழந்தையர் என்றும் சிறுவர் என்றும் பருவத்துக்கு ஏற்றவாறு அழைப்பர். நமது சூழலைச் சற்றுப் பாருங்கள். குழந்தைகள் தங்கள் தாய் தந்தை செய்கின்ற தொழில்களையே தமது விளையாட்டாகக் கொண்டு விளையாடுவர்.

நான் பிறந்து வளர்ந்தது கிராமத்தில்தான். எனது பாட்டன் செய்த தொழிலையே நாங்கள் விளையாட்டின் கருப் பொருட்களாகக் கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் குடும்பத்தவர்கள் விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள். எங்கள் வயல்களை உழவு செய்வார்கள். நாங்கள் சிறுவர்கள் தென்னையின் விழுந்த ஓலைமட்டைகளை வெட்டி எடுப்போம். அடிமட்டையை வெட்டி மாடுகளாகப் பயன் பயன்டுத்துவோம். அதே மட்டையில் வண்டிகள் செய்வோம். கலப்பைகள் செய்வோம். மட்டை மாடுகளை கலப்பைகளில் கட்டி ஒருவர் முன்னே இழுப்பார். ஒருவர் பின்னால் கலப்பை பிடித்துச் செல்வார்.

சிறுவர்கள் ஒன்றாய்ச் சேர்ந்தால் கேட்கவா வேண்டும். இரண்டு மட்டை மாடுகளை எடுப்போம். மாட்டு வண்டியில் பூட்டுவோம். மாட்டு வண்டிச் சவாரி நடக்கும். மட்டை மாடுகளைப் பிணைப்போம். பக்கங்களில் உள்ள புல்பூண்டுகளைப் பிடுங்கிக் குவிப்போம். அதன்மேல் மட்டை மாடுகளை ஏற்றி சூடு மிதிப்போம். எங்கள் வயற்காட்டில் சூடு மிதிக்கும்போது படிக்கும் பாடல்களைச் சிறுவர்களாகிய நாங்கள் பாடுவோம். மாறி மாறிப் பாடுவோம். 'பொலி' தூற்றுவோம். நெல்லை பொதிகளாக்கி வண்டிகளில் ஏற்றி இழுப்போம்.

வயற்காட்டில் வழங்கும் சொற்களையே நாங்கள் விளையாடும் போது பயன்படுத்துவோம். பாடசாலை செல்லாமலேயே பல சொற்களை நாங்கள் விளையாடுவதன் மூலம் கற்றோம். விளையாடும் போது அவற்றின் விதிகளை உணர்ந்து கடைப்பிடித்தோம். விளையாடுவதன் மூலம் சிறுவர்கள் பலவற்றைக் கற்கிறார்கள். உடல் விருத்தி பெறுகிறது. மொழி விருத்தியுடன் பல்வேறு சமூக விழுமியங்களையும் பற்றிக் கொள்கிறார்கள். இவற்றை எங்கள் அனுபவத்தின் மூலம் பெற்றேன். அனுபவம்தான் மிகச் சிறந்த ஆசான் என்பார்கள்.

அப்போது எங்களுக்கு ஐந்து அல்லது ஆறு வயதிருக்கும். எங்கள் கிராமத்தில் பண்டிகைகள் வந்தால் அவை முடிந்ததும் எங்கள் விளையாட்டுக்கள் தொடங்கும். சித்திரைப் புத்தாண்டு என்றால் ஊஞ்சல் கட்டி ஆடுவோம். ஊஞ்சற் பாட்டுப் பாடுவோம். சித்திரைப் புத்தாண்டில் போர்த்தேங்காய் அடிக்கும் விளையாட்டு நடக்கும். பண்டிகை முடிந்ததும் சிறுவர்களின் போர்த்தேங்காய் உடைக்கும் விளையாட்டுத் தொடங்கும். தேங்காய்ச் சிரட்டைகள் பிள்ளைகளின் போர்த்தேங்காய்களாக மாறும். விளையாட்டு நடக்கும்.

பின்னர் கிளித்தட்டு அல்லது ஜாடி என்ற விளையாட்டுத் தொடரும். சிறார்கள் கூடி பூசினிக்காய் இழுத்தல் விளையாடுவோம். அது ஒரு நாடகம்போல் இருக்கும். கிட்டியும் புள்ளும் விளையாடுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆலையிலே சோலையிலே
ஆலங் காடிச் சந்தையிலே
கிட்டியும் புள்ளும்
கிறுகி யடிக்கப் பாலாறு ... பாலாறு'

'வேலிப் பருத்தி வெங்காயம்
வெட்டிப் பார்த்தால் சாராயம்
குடித்துப் பார்தால் வேப்பெண்ணெய்'

என்ற பாடல் பாடி விளையாடுவோம். அது பாடலோடு கூடிய விளையாட்டு. கிட்டியும் புள்ளும் பாடசாலைப் பக்கமே போகாத சிறார்களும் பாடியாடும் விளையாட்டு. விளையாட்டுக்கள் மூலம் சிறார்கள் கற்றுக் கொள்கிறார்கள். கற்றல் செயற்பாடுகளையும் விளையாட்டு ஊடாகவே கற்பித்தல் வேண்டும் என அரிஸ்ரோட்டில், பிரடறிக் புரொபல் போன்ற கல்வியியலாளர்கள் வற்புறுத்துகின்றனர்.

மேல்நாட்டாரிடை சிறுவர்கள் தொழிற்சாலைகளில் பணிபுரியப் பணிக்கப்பட்டார்கள். குழந்தைகளின் இந்நிலை கண்டு அறிஞர்கள் வருந்தினார்கள். சோக்கரட்டிஸ், பிளாட்டோ,(கி.மு.427-341) அவர்களின் பின் அரிஸ்ரோட்டில் தொடக்கம் கொம்மினியஸ், பிரட்ரிக் புரொபல், மரிய மொன்ரிசோரி, பெஸ்ரோலொசி, ஜோன் பிரட்றிக் ஹேபர்ட், ஜீன் பியாஜே, புறூனர், இவ்வாறு பல மேல்நாட்டு அறிஞர்கள் சிறார் கல்வி பற்றி ஆராய்ந்தார்கள்.

மேல்நாடுகளில் சிறுவர்கள் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். அவர்களைப் பெரிய மனிதர்களாக நினைத்து வேலை வழங்கினார்கள்.

'சித்தாள் வேலை எட்டாள் வேலைக்குச் சமம்' என்று நமது நாட்டில் பழமொழி உண்டு. சிறுவர்கள் அங்கெல்லாம் சுரண்டப்பட்டார்கள். பெரியவர்களைப் போல் ஆடையணிவித்து கூடிய நேரம் வேலை வாங்கிக் குறைந்த ஊதியம் கொடுத்தார்கள். அவர்களது இளமைப்பருவம் வீணடிக்கப் பட்டன.

இவற்றைக் கண்ட நல்லறிஞர்கள் சிறுபருவம் மிகவும் முக்கியமானது. சிறுபராயத்தில் கற்றுக் கொள்வதை இலகுவாகப் பற்றிக்கொள்வர். முதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து ஆண்டுகள் ஒரு குழந்தையின் மூளையின் வளர்ச்சி ஏனைய பருவங்களை விடவும் விரைவாக வளர்ச்சி பெறுகிறது. குழந்தைகள் வளர்ந்தோரிலும் பார்க்கப் பெரிதளவில் வேறுபட்டவர்கள். குழந்தை ஒரு வளர்ந்த மனிதன் அல்ல. குழந்தை தனித்தன்மை கொண்டது என்பதனைப் புரிந்து கொள்ளவேண்டும். ஆதலால் அவர்களுக்கென்று விஷேடமான கல்வி முறை இருக்கவேண்டும் என்ற கருத்தை ஜோன் லொக் என்ற உளவியல் அறிஞர் (1632 - 1704) வெளியிட்டார்.

குழந்தைகளின் தனித்தன்மையை மதித்து அவர்களுக்கு இயற்கையோடிணைந்த கற்பித்தலை வழங்கவேண்டும். குழந்தைகளைக் குழந்தைகளாகவே கருத வேண்டும். அவர்கள் முதியவர்களைப் போல தம்மைப் பொருத்தி வாழமாட்டார்கள். ஆகவே 'குழந்தைப் பருவம் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டிய பருவமாகும்'என ஜீன் ஜக்ஸ். ரூசோ போன்றோர் குழந்தைக் கல்வியில் இயற்கை வாதத்தை முன்வைத்தனர்.

சார்ள்ஸ் டார்வின் (1809 - 1882) குழந்தைகளை உற்று நோக்கி அதன் மூலம் அவர்கள் தொடர்பான தகவல்களை தொகுத்தார். பின்னர் பிறியர் (1841 - 1897) என்பவர் குழந்தையின் உள்ளம் என்ற ஒரு நூலை வெளியிட்டார். இது குழந்கைகளின் உளவியல் சம்பந்தமான சிறந்த நூலாகக் கருதப்படுகின்றது. அமெரிக்காவில் ஸ்ரான்லி ஸோல் (1844 - 1924) குழந்தைகள் தொடர்பான கற்கை இயக்கம் ஒன்றை ஆரம்பித்தார். உளவளர்ச்சி குன்றிய முன்பள்ளிக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சி பற்றி 1904 ம் ஆண்டில் பாரிஸ் நகரத்தில் ஒரு ஆணையம் அமைக்கப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு அமைந்த 'பீனே - சைமன்' என்னும் தேர்வு குழந்தைகளின் நுண்மதி வளர்ச்சி பற்றிய கற்கைகளுக்குத் தூண்டுதலளித்தன. இந்த நுண்ணறிவுப் பரீட்சை முறைதான் பியாஜேயை சிந்திக்க வைத்தது.

குழந்தை உளவியலோடு அதிகம் ஈடுபாடு உள்ளவர் எனக் கருதப்பட்ட சிக்மன்ட் பிராய்ட் (1859 - 1939) குழந்தைகள் தொடர்பான பல ஆராய்ச்சியின் மூலம் பல கருத்துக்களை வெளியிட்டார்.
மரியா மொன்ரிசோரி அம்மையாரின் (1870 - 1952) குழந்தை உளவியல் தொடர்பான கருத்துக்கள் இன்று பிரசித்தி பெற்றனவாக விளங்குகின்றன. பவ்லோவ் (1849 - 1936) மற்றும் வாற்சன் (1878 - 1958) போன்றோர்களினது பரிசோதனைகளும் அணுகுமுறைகளும் குழந்தை உளவியலும் குழந்தைகளின் கல்வியிலும் பெருமளவு செல்வாக்குச் செலுத்தின.

இதனைவிட கார்ல் மாக்ஸ், லெனின், மாஓசேதுங் போன்றோரின் தீவிர அரசியற் கோட்பாடுகள் மீண்டும் குழந்தை உளவியலை மறுசீரமைப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதும் உதவியுள்ளன. குழந்தைகள் சுரண்டப்படக்கூடாது, அவர்களின் சிறந்த செயற்பாடுகள் எந்தவித சக்தியாலும் ஊறுபடாது வளர்க்கப்பட வேண்டும் என்றும் மார்க்சிய சிந்தனைகள் வலியுறுத்துகின்றன.

ஒரு குழந்தை கருவுற்ற காலம் தொடக்கம் பிள்ளையின் கட்டிளமைப் பருவம் வரையிலான பிள்ளையின் வளர்ச்சி, விருத்தி, அதன் செயற்பாடுகள், நடத்தை, நடத்தை மாற்றம், கற்றல் செயற்பாடுகள், சமூக ஈடுபாடு போன்ற சகல செயற்பாடுகளும் குழந்தை உளவியல் என்பதனுள் அடங்குகின்றன.

மனித விழுமியங்களைக் கட்டியெழுப்பும் சூழலை நாம் ஏற்படுத்த வேண்டும். கல்வி 15 வீதமான அறிவைத்தான் கொடுக்கும். மனப்பாங்கு 85 வீதமான அனுபவ அறிவைக் கொடுக்கும். நல்ல மனப்பாங்கு உருவாகச் சூழலும் அனுபவங்களும் உதவுகின்றன. நல்லவிதமான மனப்பாங்குள்ளவர்கள் எல்லாப் பருவத்திலும் கிடைக்கும் பழம்போன்றவர்கள். நல்ல பழங்களைப் போன்ற அவர்களை எல்லோரும் விரும்புவார்கள்.

கருவாகி உருவாகும் குழந்தையின் விருத்தியும் வளர்ச்சியும் கிரமமாக வளர்ச்சியடைகின்றதா என்பதையும் ஆராய்ந்தார்கள். இங்கு தாய்க்கு ஏற்படுகின்ற அழுத்தங்கள் குழந்தைகளின் பிற்கால வாழ்க்கையைப் பாதிக்குமாதலால் இப்பருவமும் மிகவும் அவதானத்திற்குரிய பருவமென்று உளவியலாளர்களினால் கருதப்படுகின்றது. இன்றைய தொழில்நுட்ப உலகில் கல்வி முக்கியத்துவம் உள்ளதாக வளர்ச்சியடைந்துள்ளது. அதேபோல் குழந்தை உளவியல் தொடர்பான கருத்துக்களும் முக்கியத்துவம் வாய்ந்ததாக வளர்ச்சியடைந்துள்ளது. இக்குழந்தை உளவியலின் பரப்பு மிக விரிந்ததாகும்.

குழந்தைகள் ஒரு சின்னஞ் சிறு உலகம். அவர்களோடு செயற்படும் முதியவர்கள் எப்போதும் குழந்தைகளின் மன இயல்பைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். அவர்களிடமுள்ள தனியாள் வேறுபாடு பற்றி நன்கு அறிந்து கொள்ள வேண்டும். அவர்கள் ஏனைய குழந்தைகளோடு கொள்ளும்

நட்புமுறைகள் தொடர்பாகவும் ஆசிரியர்கள் அவதானித்துக் கொள்ள வேண்டும். பல்வேறு சமூகமயப்படுத்தும் இடமாக முன்பள்ளிகள் செயற்படுகின்றன. சில குழந்தைகள் இலகுவில் ஏனைய குழந்தைகளோடு பழகுகின்றார்கள். சில குழந்தைகள் ஏனைய குழந்தைகளோடு பழகுவதற்குத் தயங்குவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய குழந்தைகளின் மனப்போக்கினை அறிந்து பிள்ளைகளைக் கவர்ந்திழுக்கும் செயற்பாடுகளை அறிந்து அதற்கேற்ற வகையில் தன் பணிகளை முன்னெடுக்க வேண்டியது ஆசிரியரது கடமையாகும்.

தனக்குத் தெரிந்த உளவியல் அறிவினைப் பயன்படுத்தி குழந்தைகள் "நாங்கள் கற்கின்றோம்" என்ற உணர்வு இல்லாமலே கற்கும் கலையை ஆசிரியர் அறிந்திருக்க வேண்டும். குழந்தைகளுக்கு எப்போதும் முன்பள்ளிகள் விரும்பும் இடமாக அமைய வேண்டுமானால் அதற்கான சில வழிமுறைகளை ஆசிரியர்கள் புரிந்து கையாள வேண்டும்.

இங்கு இவைபற்றி ஏன் குறிப்பிடவேண்டும் எனக் கேட்போரும் இருப்பார்கள். சிறுவர் இலக்கியங்கள் படைக்க விருப்புற்றவர்கள் இவற்றை அறிந்திருந்தால் அவர்கள் படைக்கும் இலக்கியங்கள் காத்திரமாக இருக்கும். சிறுவர் இலக்கியங்கள் படைப்போரும் ஒரு வகையில் குழந்தை உளவியல் தெரிந்த ஆசிரியர்களே. எழுத்தாளர்களாக இருப்பது பெருமை. அதைவிடக் குழந்தை எழுத்தாளராக இருப்பது வரம். குழந்தைகள் உலகம் அரிதாரம் பூசாத அன்பு நிறைந்த பூந்தோட்டம். அதில் வண்டாகச் சுற்றி வந்து சவைத்தேன் கதைகளையும், கவிதைகளையும் குழந்தைகளின் நெஞ்சில் தெளிக்க வேண்டும்.

சிறுவர் இலக்கியங்களை எல்லோராலும் படைக்க முடியாது. திறமைமிக்க பண்டிதாராய் இருந்தாலும் அவரிடம் சற்றுக் கவித்துவமும் இருக்க வேண்டும். கவிதை என்ற சொல்லைப் பார்த்தாலே புரியும். கவிதையில் க + வி = கவி, க + தை = கதை, வி + தை= விதை. இவை இருந்தால்தான் அது கவிதை. அவ்வாறு அமையாது விடின் அது கவிதையாகாது. அது வெறுமனே சொற்கூட்டமாக இருக்கும். இதனை நன்றாகப் புரிந்து கொண்டு சிறுவர் ஆக்கங்களைப் படைக்கலாம்.

மேல்நாட்டார் சிறுவர்களைப் பற்றி பல ஆய்வுகளை மேற்கொண்டனர். கீழைத்தேசங்களிலும் இவ்வகை ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டாலும் அவை வெளியாருக்குத் தெரிய வாய்ப்பில்லாது போய்விட்டது.

சிறுவர்களது கல்வி பற்றி கி.மு.427 – 341 காலப் பகுதியிலேயே சிந்திக்கத் தொடங்கி விட்டனர். இக்காலப் பகுதியில்தான் கௌதம புத்தரும், சொக்கரட்டிசும் வாழ்ந்துள்ளார்கள். சொக்கரட்டிஸ் சிந்தனையைக் கிளறும் வினாக்களைக் கேட்டு அறிவினை வளர்த்தார். அவரது அறிவுக்களஞ்சியத்தை பிளாட்டோ, அரிஸ்ரோட்டில் போன்றோர் வளர்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பிளேட்டோ
2. ஜீன் ஜேக்ஸ் ரூசோ
3. பெஸ்ரொலசி – 1746-1826
4. ஜோன் பிரெட்றிக் ஹேபர்ட்- 1776 -1841
5. பிரெட்றிக் புரொபல் -
6. மரியா மொனரிசேரி - 1870 - 1924
7. ஜோன் டுயி
8. பியாஜே - 1896 - 1980
9. கொம்மிஜியஸ்
10. மாக்கிரட் மாக்மிலன்

பிளேட்டோ குழந்தையின் முதல் ஐந்து வயதுப் பருவமே மிக முக்கிய பருவமாகும். அப்போது பெறும் அறிவு நிலையானதாகும். இப்பருவத்தில் இசைவும், அசைவும் கூடிய விளையாட்டுக்கள், உடல், உள விருத்தியைத் தூண்டி நல்ல விழுமியங்களை உருவாக்கும் என்றார்.

குழந்தையின் முதல் ஐந்து வயதுப் பருவமே மிக முக்கிய பருவமாகும். அப்போது பெறும் அறிவு நிலையானதாகும்.அவர்கள் ஒரு முக்கியமான காலப்பகுதிக்கு ஊடாகப் பயணிக்கின்றவர்கள். அவர்கள் வளர்ந்தவர்கள் அல்ல. சிறியவர்கள். அவர்களுக்கு ஒழுக்கங்களையும், மனப்பாங்கைப் பயிற்றுவிக்க வேண்டும் என ரூசோ எடுத்துரைத்தார்.

ரூசோவின் சமுதாய ஒப்பந்தம் என்ற நூல் பிரான்சியப் புரட்சியில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது. அவரின் எமிலி குழந்தை பிறந்ததில் இருந்து திருமணம் ஆகும்வரை கல்வி எவ்வாறு அமையவேண்டும் என்பதை விபரிக்கிறது. பிள்ளைமீது எதனையும் திணிக்கக் கூடாது என்பதை வலியுறுதினார்.'எமிலி' குழந்தைகளுக்குப் பொருத்தமானதா? என்ற வினா எழும்.எமிலியைப் பெரியவர்கள் கற்று தமது குழந்தைகளுக்கு வழி காட்டுவர்.

**அரிஸ்ரோட்டில்:**

பிளேட்டோவின் கருத்துக்களை ஏற்று பிள்ளைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களைக் கற்பிக்க வேண்டும். அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப விளையாட்டின் ஊடாக செயற்பாடுகளைத் திட்டமிட்டுப் புகட்டவேண்டும் என் வலியுறுத்தினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரெட்றிக் புரொபல்**

பிரெட்றிக் புரொபல் சிறுவர்களுக்கு விளையாட்டை முன்நிலைப் படுத்தி கற்பித்தல் செயற்பாடுகளை முன்வைத்தால் வெற்றி உறுதி என்றார். அதற்கேற்றவாறு சிறுவர் பூங்காவை அறிமுகம் செய்தார். அவரது இந்த அணுகுமுறை நமது கிராமங்களில் ஆடலும், பாடலுமாக நடைபெறும் கலைகளை ஒத்ததாக உள்ளதை அவதானிக்கலாம்.

சிறுவர் சிறுமியர் விளையாடும் கிட்டியும், புள்ளும், பூப்பறிக்க வருகிறோம் போன்ற விளையாட்டுக்கள் இதற்குச் சிறந்த சான்றுகளாகின்றன. இன்றைய முன்பள்ளிகளில் இவற்றைப் பின்பற்றியதாகவே கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. செயல்மூலம் கற்றல் சிறப்பாக முன்னெடுக்கப் படுகிறது.

**மார்கிரட் மாக்மில்லன்**

மார்கிரட் மாக்மில்லனும் பிரெட்றிக் புரொபல் போல் மார்கிரட் மாக்மில்லனும் சிறுவர்களையிட்டுப் பல ஆய்வுகளைச் மேற் கொண்டார். சிறுவர்களுக்குக் கதைகள், பாடல்களை இயற்றி இயற்கைச் சூழலில் மொழியாற்றலை விருத்தி செய்தல் நலம் என்றார். சிறார்களது எதிர்பார்ப்புக்களை சிறுவர் இலக்கியங்கள் ஈடுசெய்யவேண்டும். இவரது கருத்து வளர்ப்புக் கலை பற்றிய நமது பிள்ளைத் தமிழோடு ஒத்திருப்பதை அவதானிக்கலாம்.

## பிள்ளை எப்போது கற்கத் தொடங்குகிறது?

இவ்வினாவுக்குப் பலர் பலவிதமாகப் பதில் கூறுவர். பிள்ளை கருவறையைவிட்டு எப்போது வெளிவருகிறதோ அப்போதிருந்தே கற்கத்தொடங்குகிறது என வாதிடுவோர் பலர். கருவறையில் இருந்து வெளிவந்ததும் சுவாசிக்கவும். வெளிச்சூழலைப் புரிந்து கொள்ளவும் முயற்சிக்கிறது. கைகால்களை அசைத்து நெளிந்து சூழலுக்கேற்றவாறு தன்னைத் தயார்ப்படுத்துகிறது எனவும் கூறுவர். ஆனால் கல்வியியலாளர்கள் கருவில் உருவாகும் நாள்தொடங்கியே பிள்ளை கற்கத் தொடங்குகிறது என ஆய்வுகள் மூலமும், அனுபவத்தின் ஊடாகவும் தெளிந்தும் கூறுகின்றனர்.

எறிக் எறிக்சன் என்பார் இதனையிட்டு ஆராய்ந்தார். தாய் தந்தையரின் சேர்க்கையால் கரு உற்பத்தியாகிறது. அக்கரு ஒருகலத்தைக் கொண்டிருக்கும். அக்கலம் பலநூறு கலங்களாகப் பிரிந்து பெருகி மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையவையங்கள் உருவாகின்றன. முதல் மாதமுடிவில் ¼ அங்குலம் அல்லது 0.6 செ.மீ நீளத்தையுடையதாக இருக்கும். இதயம், மூளை, சுவாசப்பை உருவாகும். இதயம் துடிக்கத் தொடங்கும். கருவறையில் உருவான சிசுவின் மூளையும் இதயமும் முதலாவது மாதத்திலேயே வளர்ச்சிபெறத் தொடங்குகின்றன.மூன்றாவது மாத முடிவில் அவையவங்கள் உருவாகிக் குழந்தை அசையத் தொடங்கும். ஆறாவது மாத முடிவில் குழந்தைக்கு ஒலிகளை உணரமுடிகிறது. ஒன்பதாவது மாதமுடிவில் சுயமாக அவையவங்கள் இயங்கக்கூடிய வகையில் உருவாகிவிடும். இவற்றை அவரது அட்டவணை தெளிவாகக் காட்டுகிறது.

குழந்தை விருத்தி அட்டவணை ( இங்கு அட்டவணையைச் சேர்க்கவும்)

| | | |
|---|---|---|
| முதல் மாத முடிவில் | நீளம் - 1/4 அங் 0.6 செ.மீ | இதயம், மூளை, சுவாசப்பை உருவாகும். இதயம் துடிக்கத் தொடங்கும். |
| 02ம் மாத முடிவில் | நீளம் - 1.5 அங். 3.8 செ.மீ | தோல், கை, கால், விரல்கள் உருவாகும். |
| 03ம் மாத முடிவில் | நீளம் - 3 அங். 7.6 செ.மீ நிறை-28.3 கிராம் | குழந்தை அசையத் தொடங்கும் |
| 04ம் மாத முடிவில் | நீளம்-6.8 அங். 20-25 செ.மீ. நிறை-169.8 கிராம் | குழந்தை அசைந்து கொள்ளும். |
| 05ம் மாத முடிவில் | நீளம்-12 அங். 30 செ.மீ நிறை-453.6 கிராம் | கண்ணிமை, நகம் வளர்ச்சி இதயத்துடிப்பைக் கேட்கலாம். |
| 06ம் மாத முடிவில் | நீளம்-15 அங். 40 செ.மீ. நிறை-493.6 கிராம் | அழும், காலடிப்பாதம் தோற்றம். உதைக்கும் ஒலியைப் பிள்ளை உணரும். |
| 07ம் மாத முடிவில் | நிறை-907.2 -1134 கிராம் | கைகால்கள் இயங்கும். கண்கள் திறந்து மூடும். |
| 08ம் மாத முடிவில் | நீளம்-16.5 அங். 41.25 செ.மீ நிறை-1814.4 கிராம் | தோல் வளர்ந்து வளவளப்பாகும். தலை முடி நீண்டு வளர்ந்திருக்கும். |
| 09ம் மாத முடிவில் | நீளம்-18-20 அங். 41.25 செ.மீ. நிறை-4,082 கிராம் | குழந்தையின் அவையவங்கள் விருத்தியுற்று, இயங்கு நிலையில் இருக்கும். பிறப்பதற்கு ஆயத்தமாகும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிக்சனின் குழந்தை விருத்தி அட்டவணை நமக்குப் பல உண்மைகளைத் தொட்டுக் காட்டுகின்றன. அதாவது பிள்ளை எப்போது கற்கத் தொடங்குகிறது என்பதைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது. கருவறை தொடக்கமே கற்றல் நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன. முதலாவது மாதத்திலேயே இதயம் துடிக்கத்தொடங்கி விடுகிறது. மூன்றாம் மாதமுடிவில் அது அசையத் தொடங்குகிறது.

அதாவது இசைவாக்கத்தைப் பெறுகிறது. குழந்தை ஆறாவது மாதத்தில் அழத்தொடங்குகிறது. ஒலியைக் கேட்கும் ஆற்றலைப் பெறுகிறது. ஏழாம் மாதமுடிவில் கைகால்களை இயக்குகிறது. கண்களைத் திறந்து மூடுகிறது. ஒன்பதாவது மாதமுடிவில் அவையவங்களை இயக்கும் தன்மையைப் பெற்று வெளிச் சூழலை எட்டிப்பார்க்க ஆயத்தமாகி விடுகிறது. ஆகக் குழந்தை கருவில் உருவாகும்போதே கற்கத் தொடங்கி விடுகிறது.கருவிலேயே குழந்தை கற்கத் தொடங்குகிறது என்பதுதான் அது. யாவற்றுக்கும் மேலாகக் கருவுற்ற தாயும், அவளது உள, உடல்நிலையும், உணவும், ஓய்வும், வாழும் சூழலும் மிகவும் முக்கியமானவை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். ஒரு திடகாத்திரமான சமநிலை கொண்ட குழந்தை விருத்திக்கு இவை பேருதவியாக விளங்குகின்றன.

கருவிலேயே கற்கத் தொடங்குகிறது என்பதற்கு நமது பாரதத்தில் அபிமன்யுவின் கதை சான்றாகிறது. கண்ணன் சுபத்திரையின் அண்ணன். சுபத்திரை கருவுற்றிருக்கிறாள். உணவின்பின் கதை கூறுகிறான்.

கதை கேட்பவர் 'உம்..' போடவேண்டும். சுபத்திரையும் 'உம்' போடுகிறாள். கதை கேட்டவாறே சுபத்திரை உறங்குகிறாள். ஆனால் 'உம் ' சத்தமன் வித்தியாசமாகக் கேட்கிறது. தங்கை உறங்கிவிட்டாள் என்று கதையை நிறுத்திவிட்டுக் கண்ணன் போகிறான். சுபத்திரையின் கருவறையில் இருந்த குழந்தைதான் அபிமன்யு. அவன் பிறந்து வளர்ந்து பாரதப்போர் தொடங்கியதும், அபிமன்யு பொருக்குப் போகிறான். கண்ணன் கதையை எவ்விடத்தில் விட்டானோ, அவ்விடம்வரை அபிமன்யு வெற்றிவாகை சூடுகிறான். அதற்கப்பால் அவனுக்கு முடியவில்லை. அவன் மடிந்துவிடுகிறதைப் பாரதம் கூறுகிறது. இக்கதை குழந்தை எப்போது கற்கிறது என்பதற்கு நல்லதொரு சான்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிக்சன் குழந்தை பிறந்தது முதல் இரண்டு வயது வரை உள்ள பருவத்தைக் குழந்தைப் பருவம் எனக்கூறுவார். இந்தக் குழந்தைப் பருவம், குழந்தைகளுக்கு நம்பிக்கையூட்டும் பருவமாகும். பெற்றாரையும் சுற்றத்தாரையும் நம்பியிருக்கும் பருவம். அப்பருவத்தில் குழந்தையின் மூளையும், உயரமும் இருமடங்காகவும், நிறை மும்மடங்காகவும் வளர்ச்சி பெறுகிறது. இக்கட்டத்தில் தன்னம்பிக்கை உருவாகிறது. இப்பருவத்தில் பிள்ளை பெற்றோரில் தங்கியுள்ளது. நம்பிக்கையை வளர்த்துக் கொள்கிறது. தான் எதிர்பார்க்கும் அன்பு. ஆதரவு. ஆரவணைப்புக் கிடையாதபோது விரக்தியும், வேதனையும் கொள்கிறது. குழந்தை அன்பையும். ஆதரவையும் அரவணைப்பையும் எதிர்பார்க்கும். இங்கு குழந்தையின் வயது, மொழி, வாழும் சூழல், பழகும் தாய் தந்தை. உற்றார் உறவினர்கள், அவர்களது பழக்கவழக்கங்கள் போன்றன முக்கிய பங்களிப்பைச் செய்கின்றன.

அடுத்து எறிக்சன் காட்டும் பருவம் முன்பிள்ளைப் பருவமாகும். இப்பருவத்தில்தான் பிள்ளை ஆரம்பப்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களான முன்பள்ளிக்குப் போகின்றது. இது அபிவிருத்திப் பருவம் என்பார்கள். சுயமதிப்பையும், தன்னம்பிக்கையையும் கட்டியெழுப்பும் பருவம் என எறிக்சன் கொண்டார். இப்பருவத்தில் பிள்ளை தானாகத் தனக்குத் தெரிந்தவற்றைப் பேசி விளையாடுதல், அவதானித்துப் பின்பற்ற முனைதல். வினாவுதல், ஆராய்தல் போன்ற இன்னோரன்ன செயல்களில் ஈடுபடுவதை அவதானிக்கலாம். முதல் ஐந்து வயது வரையான காலத்தில் பிள்ளைகளுக்கு வேண்டிய உடல், உளத் தேவைகளைநிறைவு செய்தால், பிள்ளையின் எதிர்காலம் ஒளிமயமாகும் எனக்கண்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து வரும் பருவம் இடைமத்திப் பிள்ளைப் பருவமாகும். பிள்ளை தன்னைச் சூழப்பலர் இருப்பதை உணர்ந்து கொள்கிறது. இந்தப்பருவத்தில் குழந்தையின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்து, அதன் இயல்பைப் புரிந்து விருத்தியைக் கட்டிக்காத்து வளர்க்க வேண்டும் எனக் கொண்டார். இதனை ஈடுசெய்ய முடியாத குழந்தைகள் பிற்காலத்தில் தங்களைச் சூழ்ந்துள்ள உலகத்தை நரகமாக மதிப்பார்கள். அவர்களது வாழ்க்கை சூனியமாகிவிடும். மூன்று வயது தொடக்கம் ஐந்து வயது வரையுள்ள பருவம் ஆரம்பப் பிள்ளைப் பருவம் எனக்குறிப்பிடுவர். இப்பருவம் பிள்ளையின் ஏனைய வளர்ச்சிப் பருவத்தை விடவும் துரிதமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுவயதுக்கு முன்னர் ஏற்படும் கற்றல் அனுபவங்கள் பிள்ளையின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் இயல்பினைக் கொண்டுள்ளன. நல்ல அனுபவங்களைப் பெறக்கூடிய வசதிகளையும், வாய்ப்புக்களையும் சிறார்களுக்கு நாம் செய்து கொடுத்தால் அவர்களது வாழ்வு வளமாகும். மனித வாழ்க்கை விசித்திரமானது. அந்த வாழ்க்கையை வளப்படுத்த சூழல் முக்கிய பங்கினை ஏற்றுக் கொள்கிறது. மரபணுக்களும், சூழலும் சிறார்களின் விருத்தியைத் தீர்மானிக்கின்றன.

மனிதனை விலங்கில் இருந்து பிரிப்பது அவனது நற்குணங்களும். நற்செயல்களும்தான். காந்தம் எந்த வடிவிலும் இருக்கலாம். அது இரும்புத் துண்டங்களைக் கவர்ந்திழுக்கும். ஆதலால் மனித விழுமியங்களைக் கட்டியெழுப்பும் சூழலை நாம் எற்படுத்த வேண்டும். கல்வி 15 வீதமான அறிவைத்தான் கொடுக்கும். மனப்பாங்கு 85 வீதமான அறிவைக் கொடுக்கும். நல்ல மனப்பாங்கு உருவாகச் சூழலும் அனுபவங்களும் உதவுகின்றன. நல்லவிதமான மனப்பாங்குள்ளவர்கள் எல்லாப் பருவத்திலும் கிடைக்கும் பழம் போன்றவர்கள். அவர்களை எல்லோரும் விரும்புவார்கள்.

கருவுற்றதில் இருந்து, பெற்றெடுத்துச் சீராட்டி தனது மடியைத் தொட்டிலாக்கி, குழந்தையின் முகத்தைப் பார்த்துப் பேசி, உறங்கவைக்கத் தாலாட்டி, உணவூட்டக் கதை கூறி, அக்குழந்தைக்குக் கதைகூறுவதற்காகத் தனது கற்பனையையும், மொழிவளத்தையும் பெருக்கி, அனுபவித்துத் தாய் தனது சொத்தாக்கிக் குழந்தைக்குத் கொடுக்கிறாள். பிள்ளைகளுக்காக அவர்களால் தோற்றம் பெற்றவைதான் சிறுவர் இலக்கியச் செல்வங்களாகும்.

அழுகின்ற குழந்தையின் சிந்தனையைத் திசைதிருப்பி. மாற்றியமைக்கத் தாய் விளையாட்டுக் காட்டுகிறாள். பிள்ளையை இருத்திப் பிஞ்சுக்கைகளைப் பற்றி, விரித்துச் சின்ன விரல்களைப் பிடித்து, ஒவ்வொரு விரலாக நீவி, சுளுக்கெடுத்து விடுகிறாள். தாங்கள் வாழும் சூழலுக்கேற்ப, ஒவ்வொரு விரலுக்கும், ஒவ்வொரு வகை உணவின் பெயர்களைக் கூறி,'இது சோறு,''இது கறி','இது பருப்பு','இது பொரியல்','இது குழம்பு' என்று சொல்லி பிள்ளையின் உள்ளங்கையில் போடுவார். தனது முன்னங்கையால் 'ஆடைகடை, கீரை கடை' எனக் கடைந்து உணவினைப் பங்கிடுவார்.

“ஒரு பங்கு அப்பாவுக்காம். ஒரு பங்கு அம்மாவுக்காம், ஒரு பங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தாவுக்காம், இன்னொரு பங்கு மாமாவுக்கும், மாமிக்குமாம், இன்னொரு பங்கு காகத்துக்காம். ஒரு பங்கு கோழிக்காம், ஒரு பங்கு பிள்ளைக்காம்." என்று கூறி,தனது விரல்களை பிள்ளையின் உடலில் நண்டு ஊருவதுபோல் பிள்ளையின் கையில் மேல்நோக்கி நகர்த்துவதைக் காணலாம். கைவிரல்கள் நகர்ந்து கொண்டிருக்கும். 'நண்டூருது ..நரியூருது' என்று சொல்லி கிசுகிசு காட்டி விளையாடி மகிழ்வது தொன்று தொட்டு வரும் வழக்கமாக உள்ளதை இன்றும் காணலாம். பிள்ளைகளின் நம்பிக்கையையும், தன்னைச் சூழநின்று அனைவரும் தனக்குப் பாதுகாப்புத் தருவார்கள் என்ற மனவுறுதியைக் கொடுப்பதாகவும் அமைகிறது. அத்துடன் குழந்தையைச் சூழவுள்ள உயிரினங்களையும் அறிமுகம் செய்கின்றதாக அமைகின்றது. நல்லதொரு சூழலில் குடும்ப உறவினையும் பண்பாடுகளையும் நாசுக்காகத் தாய் புகுத்துவதை நன்றாகச் சிந்தித்தால்தான் புரிந்து கொள்ள முடியும்.

நமது கலாசாரப் பாரம்பரியங்களைப் பிள்ளையின் மனதிலே விதைத்தும் விடுகிறார். மொழியினைக் கற்றுக் கொள்ளவும், அதனைப் புரிந்து கொள்ளவும் சந்தர்ப்பங்கள் உருவாகின்றன. பிள்ளையைத் தொட்டிலில் இட்டுக் கண்ணயரும்படி தாய் தாலாட்டுப் பாடுவது ஓசைநயம் மிக்கதாகவும், பொருள்நயம் உள்ளதாகவும், தாங்கள் வாழும் சூழலை வர்ணிப்பதாகவும் இருப்பதைக் காணலாம்.

சற்று வளர்ந்த குழந்தைக்கு நிலாவையும், பறவைகளையும் காட்டி உணவூட்டத் தாய் கதை கூறுகிறாள். உறங்குவதற்குத் தாலாட்டும், உண்ணும்போது கதையும், விளையாடும்போது ஆடலும் பாடலுமாக வளர்ப்புக் கலை இருப்பதைக் காண்கிறோம். குழந்தையின் வயதுக்கும். பருவத்துக்கும் ஏற்றாற்போல் பாடலும். கதைகளும். விநோதமாக அமைந்திருப்பதை அவதானிக்கலாம். இவையாவும் உளவியலின்பால் அமையும். நமது ஆன்றோரிகசள் தமது சிறார்களுக்கு என்னென்ன தேவையோ அன்னவற்றைக் குறைவின்றிக் கொடுத்து வந்திருக்கிறார்கள்.

எறிக்சன் குழந்தை பிறந்தது முதல் இரண்டு வயது வரை உள்ள பருவத்தைக் குழந்தைப் பருவம் எனக்கூறுவார். இந்தக் குழந்தைப் பருவம், குழந்தைகளுக்கு நம்பிக்கையூட்டும் பருவமாகும். பெற்றாரையும் சுற்றத்தாரையும் நம்பியிருக்கும் பருவம். அப்பருவத்தில் குழந்தையின் மூளையும், உயரமும் இருமடங்காகவும், நிறை மும்மடங்காகவும் வளர்ச்சி பெறுகிறது. இக்கட்டத்தில் தன்னம்பிக்கை உருவாகிறது. இப்பருவத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை பெற்றோரில் தங்கியுள்ளது. நம்பிக்கையை வளர்த்துக் கொள்கிறது. தான் எதிர்பார்க்கும் அன்பு. ஆதரவு. ஆரவணைப்புக் கிடையாதபோது விரக்தியும், வேதனையும் கொள்கிறது. குழந்தை அன்பையும். ஆதரவையும் அரவணைப்பையும் எதிர்பார்க்கும். இங்கு குழந்தையின் வயது, மொழி, வாழும் சூழல், பழகும் தாய் தந்தை. உற்றார் உறவினர்கள், அவர்களது பழக்கவழக்கங்கள் போன்றன முக்கிய பங்களிப்பைச் செய்கின்றன.

ஆக நமது சிறார்கள் ஒன்று கூடி விளையாடும்போது பலவிதமான பாடல்களையும், கதைகளையும், நொடிகளையும், நாடகங்களையும், ஆட்டங்களையும் செய்து கற்கிறார்கள். இதனையிட்டு மேல்நாட்டு அறிஞர்கள் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு நிரூபித்தனர். சிறுவர் இலக்கியங்களை ஆக்குவதில் ஈடுபடும் எழுத்தாளர்கள் இவற்றைக் கவனத்திற் கொண்டு எழுதவேண்டும். இவற்றை எனது அனுபவத்தில் கண்டு அனுபவித்தவற்றை இங்கு காட்டியுள்ளேன்.

சான்றுகளாகச் சிலவற்றை இங்கு குறிப்பிடுதல் சாலச் சிறந்ததாகும். சிறுவர்களும், சிறுமியர்களும் சேர்ந்து விளையாடும் இச்சிறிய விளையாட்டு சந்தோசம் நிறைந்தது. இச்செயற்பாட்டினால் மொழி விருத்தியுறும். விளையாட்டுன் மூலம் இலகுவாக மனப்பாடம் செய்து கொள்வார்கள். ஆளையாள் பார்த்தபடி நிலதிதில் அமர்வார்கள். முன்னால் மணலைச் சிறிய வரம்பு போல் இருவருக்கும் இடையில் குவிப்பார்கள். ஒருவர் ஒரு சிறிய குச்சியை எடுத்துப் பாடிப்பாடி மணலினுள் மறைப்பார். குச்சி எங்கே மறைக்கசகப் படுகிறது என்று மற்றவர் கவனித்துக் கொண்டு இருப்பார்.

'கீச்சி மாச்சித் தம்பலம்
கீயா மாயாத் தம்பலம்
மாச்சி மாச்சித் தம்பலம்
மாயா மாயாத் தம்பலம்

ஆச்சி கொல்லையில் ஒருபழம்
அன்ன மின்னாப் பூப்பழம்
காச்சிக் கிளையில் தொங்குதாம்
ஆஞ்சிட்டுப் போகலாம் தம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போச்சு போச்சுது எல்லாமே போச்சுது
ஆச்சி காதில செய்தியும் போச்சுது
ஆச்சி கையில துவரங்கேட்டியாம்
ஆளுக்கொரு பக்கம் ஓடுவம் வாங்க.'

பாடல் முடியும் போது குச்சி மணலினுள் ஓரிடத்தில் மறைந்து கொள்ளும். பாரத்துக் கொண்டு இருப்பவர் தனது இரு கைகளையும் கோர்த்து குச்சி இருக்கும் இடத்தை மூடவேண்டும்.
அவர் மூடிய இடத்தில் குச்சி இருந்தால் மூடியவர் வெற்றியடைவார். இவ்வாறு ஆட்டம் தொராடரும்.

இந்தப் பாடல் கிராமிய விளையாட்டில் பாடப் படுவதாகும். இவ்வகைப் பாடல்களுக்கு ஒருவித இசை இருக்கும். ஓசை நயமிருக்கும். உச்சரிப்பில் ஒரு உற்சாகம் இருக்கும். பிழையறப் பாடமாக்குவார்கள். இதே போன்று பூசினிக்காய இழுத்தல், கிட்டியும் புள்ளும், பூப்பறித்தல் போன்ற விளையாட்டுக்கள் சிறார்களின் கவனத்தை ஈர்ப்பன. இவ்விளையாட்டுக்களில் பாடப்படுமன் பாட்டுக்கள் நாட்டுப்புறப் பாடல்களே. ஆனால் இவை பாடும் போது பிரதேசங்களுக்கு ஏற்ப ஆங்காங்கே சில அடிகளில் மாற்றங்களை அவதானிக்கலாம்.

ஆங்கிலத்தில் **'children'** என்ற சொல்லைப் பொதுவாகச் சிறுவர் என்று அழைக்கிறார்கள். குழந்தை, மழலை, பாலர், தவ்வல், பச்சைமண் எனத்தமிழில் உள்ள அத்தனை சொற்களையும் சிறுவர் என்ற பதத்தினுள் அடக்கியுள்ளதை அவதானிக்கலாம். சிறுவர் என்ற பதம் பன்மைப்பொருளில் பயன்படுத்தப் படுவதையும் நோக்கலாம்.

இங்கு பால்நிலைச் சமத்துவத்தைக் காண்கிறோம். ஆண்.பெண் எனப்பாகுபாடு செய்யப்படவில்லை. ஆனால் கீழைத்தேசச் சான்றோர்கள் பெண்பிள்ளைகள் பூப்பெய்தும் வரை பால்நிலைச் சமத்துவத்தைக் காட்டுவர். பூப்பெய்துவது குறிப்பாக முன்குமரப் பருவத்திலேயே இடம் பெறுகிறது. ஆதலால் சிறுவர் என்ற பொதுச் சொல்லையே நாம் சிறுவர் இலக்கிய ஆய்வுக்காக எடுத்துக் கொள்வோம். மேல்நாட்டாரிடை பெண்பிள்ளைகளுக்கான இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்ப்புக் கலைவடிவங்கள் கூறுவதென்ன?

நமது ஆன்றோர்கள் நமக்கு 'வளர்ப்புக் கலை' வடிவங்களைத் தந்துள்ளனர். வளர்ப்பு என்பது வளர்த்தல் எனும் தொழிலைக் குறிப்பது. இது ஒரு தாய் தன் பிள்ளையை வளர்க்கும் முறையின் சிறப்பைக் கூறுவது. அன்புடன் பிள்ளையை வளர்க்கும் பாங்கில் பாடப்பெறும் வளர்ப்புக்கலை வடிவங்களையே 'பிள்ளைத் தமிழ்' என்கிறார்கள்

'பிள்ளைத் தமிழ்' இலக்கிய வடிவம் பெறுவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்னரேயே வாய்மொழியூடாக வளர்ந்து வந்துள்ளது.இவ்வுலகில் என்று உயிரினம் தோன்றியதோ அன்றே இனப்பெருக்கமும் தொடங்கியது. விலங்கினம் தம் இனவிருத்தியின் பயனாகப் பெற்ற வாரிசுகளை அன்பாகப் பாதுகாத்தனர். சிறப்பாக மனித இனம் தமது மொழியூடாக அன்பைப் பொழிந்து பாலூட்டி ஒலியெழுப்பி ஆதரித்து வளர்த்தன. அந்த அன்பான ஒலியே தாலாட்டாகவும் கதைகளாகவும் உலாவந்து சின்னஞ் சிறு வாரிசுகளை மகிழ்வித்தன. கட்டிலில் கண்ட சுகத்தைத் தொட்டிலில் ஒரு உருவாகக் கண்டு ஆனந்தம் அடைந்தனர். அவை இன்று இலக்கிய அந்தஸ்தைப் பெற்று உலா வருகின்றன.

தான் போற்றும் அரசரையோ, தெய்வத்தையோ அன்றி சான்றோரையோ குழந்தையாக்கிப் பார்த்து பரவசத்துடன் பாடப்படும் சிற்றிலக்கியம் பிள்ளைத் தமிழாகும். இதனை 'பிள்ளைக் கலி,''பிள்ளைப் பாட்டு' என்றும் அழைப்பார்கள்.

பிள்ளைத் தமிழ் பாடும்போது பிள்ளைப் பருவத்தைப் பத்துப் பருவங்களாக வகுத்து எழுதும் வரண்முறைகளைப் பின்பற்றி எழுதுவர்.ஓவ்வொரு பருவத்திலும் குழந்தையின் இயல்பான நிலை, செயல், தன்மை முதலியவற்றை அமைத்துப் பாடுவார்கள்.

காப்புப் பருவம், தாலப் பருவம், செங்கீரைப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம், சிறுபறைப் பருவம்,சிற்றில் பருவம், சிறுதேர்ப் பருவம், என இந்த பத்துப் பருவங்களும் வகுக்கப்பட்டுள்ளன. இதனை நமது ஆன்றோர்கள் ஐரோப்பியர் நமது நாட்டுக்கு வருமுன்னே என்றோ வகுத்துள்ளனர்.

' வெண்பாப் பாட்டியல்' என்ற இலக்கண நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சாற்றிய காப்பு, தால், செங்கீரை, சப்பாணி
மாற்றய முத்தமே வாரானை – போற்றிய
அம்புலியே, ஆய்ந்த சிறுபறையே, சிற்றிலே
பம்புசிறு தேரோடும் பத்து'

எனக் கூறுகிறது. ஆனால் நமது கற்றறிந்த அறிஞர்கள் மேல்நாட்டு அறிஞர்களின் கருத்துக்களையே வலியுறுத்தி வருகின்றனர். இவற்றையெல்லாம் நமது அறிஞர்கள் வெளிக்கொண்டு வர முயலுதல் வேண்டும்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகக் கற்பனை செய்து பாடிய 'பிள்ளைத்தமிழ்' தமிழின் முதல் 'வளர்ப்புக் கலை' வடிவமாக அமைகிறது. பிள்ளையின் ஆரம்பப்பிள்ளை வாழ்க்கையைப் பத்துப் பருவங்களாக வகுத்துப் பார்த்துப் போற்றினார்கள். அதற்கேற்பப் பிள்ளைத்தமிழ் பாடினார்கள். குழந்தையின் மூன்றாம் திங்கள் முதல் இருபத்தொரு திங்கள்வரை மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது பதினொன்று, பதின்மூன்று. பதினைந்து. பதினேழு, பத்தொன்பது, இருபத்தொன்று எனப்பத்துப் பருவங்கள் அமையும். இவை ஒற்றை மாதங்களாகக் கொள்வதை அவதானிக்கலாம். இதனை பன்னிரு பாட்டியல் :-

'பிள்ளைப் பாட்டே தெள்ளிதின் கிளப்பின்
மூன்று முதலாம் மூவேழ் அளவும்
ஆன்ற திங்களில் அறைகுவர் நிலையே'

எனக் கூறும். இங்கு திங்கள் என்பது மாதம் என்ற பொருளைக் கொள்ள முடியாதுள்ளது. மாதங்களாக யாவற்றையும் ஏற்றுக்கொள்வது பொருத்தமற்றதாகத் தெரிகிறது. இறுதியாக உள்ள மூன்று பருவங்களையும், அதாவது பதினேழு, பத்தொன்பது, இருபத்தொன்பது என்பவற்றை நாம் திங்கள் என்று கொள்வது பொருத்தமுடையதாக அமையாது. இவற்றை வருடங்களாகக் கணித்தல் பொருத்தமுடையதாகும். பிள்ளைப் பருவம். முன்குமரப்பருவம். குமரப்பருவம் எனக் கொள்வது சாலச் சிறந்ததாகும். பிள்ளைத் தமிழ் ஆண்பால் பிள்ளைத் தமிழ். பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இருவகைப்படுத்தியுள்ளார்கள்.

குழந்தை பிறந்து மூன்றாம் மாதம் முதல் மூன்று, ஐந்து, ஏழாம் ஆண்டு வரையிலான பருவங்களைக் கொள்வது பொருத்தமுடையது எனப் பலர் கருதுகின்றனர். இதனையே டாக்டர் பூவண்ணனும் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை 'வச்சிரணந்தி மாலை'யும் இவ்வாறு

"முறை தரு மூன்று ஆதி மூவேழிருந் திங்கள்
அறைக நிலம் பத்தும் ஆண்டு ஐந்தேழ்"

எனக் கூறுகிறது.

சிலர் ஏழு ஆண்டுகளுக்கு மேலும் சில ஆண்டுகளைக் கொண்டு அது ஆண்பால் பிள்ளைத் தமிழுக்குப் பொருந்தும் எனக் கூறுவர்.
அதனை 'இந்திர காளியம்' என்னும் நூல் இவ்வாறு
"தோற்ற முதல் யாண்டு ஈரெட்டளவும்
ஆற்றல் சான்ற ஆண்பாற் குரிய".

என ஆண்பால் பிள்ளைத் தமிழுக்குரியதாகக் காட்டுகிறது. இதனடிப்படையில் ஆண்பால் பிள்ளைத்தமிழ் பதினாறு வயது வரையான எல்லைவரை செல்ல இடமளிக்கிறது. அதேபோல் பெண்பால் பிள்ளைத் தமிழ்

"காப்பு முதல் ஆகிய யாப்புவகை யெல்லாம்
பூப்பு நிகழ்வளவும் பெண்பாற்குரிய"

எனக் கூறுகிறது. இது பெண்கள் பூப்பெய்தும் காலம் வரை காட்டுகிறது. பொதுவாகக் கூறின் சிறுவர் என்ற பதம் பதினாறு வயதுவரையான காலப்பகுதியைக் கொண்டுள்ளதாக நமது சான்றோர் ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னரேயே தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

'ஐக்கிய நாடுகள் சபையின் கூற்று'

'பிறந்தது முதல் பதினெட்டு வயது வரையான ஆண். பெண் இருசாராரையும் சிறுவர் என்ற வரையறைக்குள் அடக்குவர். ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவருக்கான உரிமைப்பட்டயம் இதனைக்கூறுகிறது. ஆதலால் இந்த வரையறைக்குள் நின்று சிறுவர் இலக்கியத்தினை ஆராயலாம். அப்படி ஆராயும்போது சிறுவருக்காக அவர்களது வயதுகளுக்கேற்றபடி ஐந்து பருவங்களுக்கு உரியவகையில் அவற்றை ஆராய்தல் வேண்டும். இதனடிப்படையில் நோக்கும் போது சிறுவர் இலக்கியம் ஐந்து பருவங்களாகக் கொண்டு அந்தந்த பருவத்தினருக்கு ஏற்ற வகையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருத்தல் அவசியமாகும் என்பது புலனாகும். இது சாத்தியப்படுமா என்பது கேள்வியாகவும் தொக்கி நிற்கிறது.

'சிறுவர்' என்ற சொல்லினைக் கல்வி உளவியலாளர்களின் பகுப்பாய்வின்படி அறிஞர்கள் பொதுவாக ஐந்து பிரிவுகளுக்குள் அடக்கி ஆராய்வதைக் காணலாம்.

மேல்நாட்டுச் சிறுவர் எழுத்தாளரும் ஆய்வாளருமான ஜெனற் அடம்ஸிமித், நமது ஆன்றோர்கள் ஏற்றுக் கொண்டவாறு 'சிறுவர் பற்றியும், அவர்களது குணநலம். ஊக்கம் தூண்டல்களை உளநோக்கிலும், பருவமாறல் நிலைகளிலும் பல அரிய தேடல்களைச் செய்து 03 வயது தொடக்கம் 15 வயது வரை உள்ள ஆண் பெண் இருசாராரையும் சிறுவர்' எனக் கணிப்பிட்டுள்ளார்.

சோக்கரட்டிஸ், பிளாட்டோ,(கி.மு.427-341) அரிஸ்ரோட்டில், கொம்மினியஸ், பிரட்ரிக் புரொபல், மொன்ரிசோரி அம்மையார், எறிக் எறிக்சன் மற்றும் அறிஞர்கள், சிறுவரது குணநலங்கள்,வயது, வளர்ச்சி அடிப்படையில் வகைப்படுத்துதல் சிறப்பானதாகும் என்பதை வலியுறுத்துவர்.

## சிறுவர் இலக்கியம் எவ்வயதுடையோர்க்கு உரியது?

சிறுவர் இலக்கியத்துக்கான வயதெல்லையை பொதுவாக ஐந்து தொகுதிகளாக வகுப்பார்கள். இவ்வாறு சிறுவர் இலக்கியங்களைப் பொதுப்படையாகக் கருதினாலும், அதனை வயது, பருவம். அனுபவம் என்பவற்றுக்கேற்ப பின்வருமாறு வகைப்படுத்துவர். இங்கே அட்டவணையில் ஐந்து தொகுதிகளாக வயதினடிப்படையில் தரவுகள் உள்ளன.

அட்டவணை

| வயது | பருவம் | பிரிவு |
|---|---|---|
| 00-03 வயது | குழந்தை | முதலாம் பருவம் |
| 03-05 வயது | முன்பிள்ளை | இரண்டாம் பருவம் |
| 05-11 வயது | பிள்ளை | மூன்றாம் பருவம் |
| 11-15 வயது | முன் குமரப்பருவம் | நான்காம் பருவம் |
| 15-18 வயது | குமரப்பருவம் | ஐந்தாம் பருவம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைத் தமிழ் தந்த நமது சான்றோர்கள் குழந்தை பிறந்து மூன்றாம் திங்கள் முதல் பத்துப் பருவங்கள் கொண்டதாகக் காட்டுவர். ஆனால் நவீன கல்வியியலாளர்களின் கணிப்பின்படி முதலாவது பருவமான குழந்தை பருவத்தைக் கவனத்தில் எடுப்போம்.

1) 00 -03 இந்த வரையறை குறிக்கும். குழந்தைப் பருவம் பெற்றாரை இன்பத்தில் ஆழ்த்தும் பருவமாகும்.

இப்பருவத்துள் குழந்தைகள் தலையை உயர்த்தி, உலகத்தை எட்டிப்பார்த்து, பொருட்களை அளைந்து அனுபவம் பெறும் பருவமாகும். பக்கம் புரள்வதும், குப்புறப் புரண்டு விளையாடுவதும் பார்க்க இன்பமாக இருக்கும். அப்படியே உன்னி முன்னும் பின்னும் அசைந்து விளையாடும். இருக்க விரும்பும். பிடிமானங்களின் உதவியுடன் இருக்கும். இருந்த இடத்தை விட்டு நகர்ந்து ஊரத்தொடங்கும். கைகால்களை அடித்தசைத்துச் சத்தமிட்டுச் சிரித்து ஒலியெழுப்பி மகிழும் பருவமாகும். நெஞ்சு நிலத்தில்படும்படி உன்னி நகரும். கைகால்களை ஊன்றித் தவழும்.

இந்தப் பருவத்தில் புலன்கள் துரிதமாக விருத்தியடையும். பிள்ளையின் இதயமும், மூளையும் முதலாம் மாதமுடிவிலேயே விருத்தியுறத் தொடங்கிவிடும். உன்னிப்பாகப் பார்க்கவும், கேட்கவும். கிரகிக்கவும் செய்யும். எழுத்துக்களை அறியாத பருவமாகும். இப்பருவத்தில் எவ்வாறான இலக்கியங்கள் தேவைப்படும். அவை எவ்வாறு அமைந்திருக்க வேண்டும்? இப்பருவத்தில் அவர்களுக்குப் பொருத்தமான இலகுவான நடையில் இலக்கியம் படைக்கவேண்டும். இவ்வாறான இலக்கியங்களை தாய், தந்தை. உறவினருக்காகப் படைக்க வேண்டும். ஓசை ஒலி நயங்கள் பொதிந்தனவாக இருக்க வேண்டும். தாய்தந்தை, உறவினர்கள் துணையுடன் பிள்ளை கற்றுக் கொள்கிறது. எனவே பெரியவர்கள் ஊடாக சிறுவர்களுக்கு இலக்கியம் போய்ச்சேருகிறது.

அவ்வழி காலங்காலமாக அன்னையர் வாய்களில் பிறந்துவந்தவை தான் தாலாட்டுப்பாடல்களாகும்,அவ்வாறே கதைகளும் தொடர்ந்து வந்தன. ஆகவே முதல்பருவத்துக்குரிய இலக்கியங்கள் பயனுள்ளதாக, பண்புகள் நிறைந்ததாக அமைதல் வேண்டும். இளமையில் மனதில் பதியும் எண்ணக்கருக்கள், வளர்ந்தபின்னும் நிலைத்து நிற்பன. இதனைத்தான் 'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்' என்றார்கள்.

தாயின் தாலாட்டில் ஓசையும், ஒலிநயமும் உணர்ச்சியும் எதிர்பார்ப்புகளும் குடும்ப நலனும் எட்டிப்பார்க்கும். நமது நாட்டுப் புற இலக்கியங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணங்களும், இதிகாசங்களும் இவற்றை அடித்தளமாகக் கொண்டே எழுப்பப்பட்டுள்ளன.

நமது சான்றோர்கள் தாய்மையடைந்த பெண்ணுக்கு எடுக்கும் சடங்குகளையும் நோக்க வேண்டும். தாய்மையுற்ற போது அவர்களை மிகவும் கவனமாகப் பேணுவதைக் காணலாம். கருவுற்ற தாய் சந்தோசமாக இருப்பதற்கேற்ற சூழலை உருவாக்கிக் கொடுப்பதையும் அவதானிக்கலாம். அவருக்கு நலங்கிடுவார்கள். வளைகாப்பு அணிவித்து அழகு பார்ப்பார்கள். ஊட்டமுள்ள உணவு கொடுத்தும், நல்லனவற்றைக் கேட்கவும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவார்கள். இங்கு கவனிக்கப்படவேண்டிய விடயங்கள் இரண்டு உண்டு.

1. ஒரு தாய் குழந்தையைப் பெற்றெடுத்து விடுவது சாதாரண செயலல்ல. குழந்தையைப் பெற்றெடுப்பது என்பது 'செத்துப்பிழைத்தலாகும்.' சுகப்பிரசவம் நடந்து நலமாக தாய் வாழவேண்டும் என்பதற்றாக அவளை மிகக் கவனமாகப் போற்றுகிறார்கள்.

2. இவையெல்லாம் தாய்க்குச் செய்தாலும் பயனைப் பெறுவது கருவில் உள்ள குழந்தைதான். கருவில் உள்ள குழந்தை கருவில் திருவுடையவனாகி சான்றோனாகத் திகழ்வதற்காகத்தான் இவ்வளவு சடங்குகளையும் செய்கிறார்கள். தாயின் மகிழ்ச்சி பிள்ளையை நோக்கி நகர்கிறது. இதற்கேற்ற வகையில் இலக்கியங்கள் படைக்கப் படுதல் வேண்டும். அதற்கான பரிசுகளும் வழங்குதல் தகும்.

2. 03 – 05 வயதினர் இரண்டாவது பருவமான முன்பிள்ளைப் பருவத்துக்கு உரியவர்கள். ஆறுவயதுக்கு முன்னர் ஏற்படும் கற்றல் அனுபவங்கள் பிள்ளையின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் இயல்பினைக் கொண்டுள்ளன. நல்ல அனுபவங்களைப் பெறக்கூடிய வசதிகளையும், வாய்ப்புக்களையும் சிறார்களுக்கு நாம் செய்து கொடுத்தால் அவர்களது வாழ்வு வளமாகும். மனித வாழ்க்கை விசித்திரமானது. அந்த வாழ்க்கையை வளப்படுத்த சூழல் முக்கிய பங்கினை ஏற்றுக் கொள்கிறது. மரபணுக்களும், சூழலும் சிறார்களின் விருத்தியைத் தீர்மானிக்கின்றன.

மனிதனை விலங்கில் இருந்து பிரிப்பது அவனது நற்குணங்களும். நற்செயல்களும்தான். காந்தம் எந்த வடிவிலும் இருக்கலாம். அது இரும்பு போன்ற உலோகத் துண்டங்களைக் கவர்ந்திழுக்கும். ஆதலால் மனித விழுமியங்களைக் கட்டியெழுப்பும் சூழலை நாம் எற்படுத்த வேண்டும். சிறுவர் இலக்கியங்களும் அவ்வாறே படைக்கப்படவேண்டும். இலட்சியம் இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம் இல்லை என்பார்கள்.

சூழலும் மனிதனும் சந்திக்கும் இடத்தில் இறைவன் தோன்றுவான் என்பார்கள். சூழல் கற்றலுக்கு வேண்டிய சாதனங்களை வழங்கும் வங்கியாகும் எனவும் கூறலாம். சூழலும் மனிதனும் சங்கமமாகும் இடத்தில் அறிவு துளிர்விடுகிறது. தழைக்கிறது. தழைத்து வளர்ச்சி காண்கிறது. சிறுவர் இலக்கியம் வளர்ந்தோர் இலக்கியத்தை விடவும் வேறுபடும். 'வளர்ந்தோர் இலக்கியம் முதிர்ந்த மனங்களின் அக உணர்வுகளைத் துருவி ஆய்ந்து அறிகிறது. சிறுவர் இலக்கியம் புலன்களுக்குப் புலனாகும் புறவுலகை நாடி அறிகிறது' என பேராசிரியர் கலாநிதி க.கைலாசபதி தமது 'தமிழில் குழந்தைக் கவிதைகள்' என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். 'சிறுவர் இலக்கியம் பற்றிச் சிந்திப்பவர்கள் சிறுவர்களை நன்கு அறிந்திருக்கவேண்டும்' என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறுவார். சிறுவரின் உளநிலை, ஒழுக்கநிலை, ஆளுமை ஆகியவற்றை வளர்த்தெடுக்கும் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். சிறுவர்களது வயது, விருப்புக்கள், குணாம்சங்கள், தேவைகள், நாட்டங்கள், ஆர்வங்கள், மனப்பாங்கு, சூழல், நுண்மதி, சமூகநடத்தைக் கோலங்கள், மொழித்திறன், அறிவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, தெரிந்ததில் இருந்து தெரியாத அல்லது அறிமுகமில்லாத பொருட்களை அல்லது விடயங்களை அறிமுகம் செய்யும் வண்ணம் அமையவேண்டும்.

சிறுவர் இலக்கியத்தில் பரிச்சயமுள்ள ஆய்வாளரான டாக்டர் பூவண்ணன் “சிறுவருக்காக, சிறுவர் உளத்தோடு, சிறுவர் மொழியில் உலக அனுபவத்தை விளக்க உருவாகும் படைப்பே சிறுவர் இலக்கியம் ஆகும்”. எனக்கூறுவார். சிறுவர் இலக்கியம் ஒரு அறிவுசார் ஊடகமாக மட்டுமல்லாது, உணர்ச்சிகளின் வடிகாலாகவும், நீண்ட காலம் பயன்தரும் கற்பக விருட்சமாகவும் விளங்குகிறது.

## ஜீன் பியாஜே, ஜெரோம் புறூணர் ஆகியோரின் சிறந்த நுட்பங்கள்

சிறுவர்களது அறிவுசார் விருத்தி (**Cognitive Development**) தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டவர்களுள் ஜீன் பியாஜே, ஜெரோம் புறூணர் ஆகியோர் சிறப்பாக குறிப்பிடத்தக்கவர்கள் குழந்தைகளது நடத்தையை முழுமையாகவும், தெளிவாகவும், திட்டமாகவும் ஆராய்ந்து அது தொடர்பான கருத்துக்களை வெளியிட்ட வகையில் பியாஜே இன்று முக்கியமானவராகக் கருதப்படுகிறார். அறிவுசார் திறன் விருத்தியில் பியாஜே நான்கு நிலைகளை வெளிப்படுத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. புலனியக்கப் பருவம் -பிறப்பு தொட்டு 2 வயது வரை
2. முன் - தூல சிந்தனைப்பருவம் - 2 முதல் 7 வயது வரை
3. தூல சிந்தனைப் பருவம் - 7 முதல் 12 வயது வரை
4. நியம சிந்தனைப் பருவம் - 12 வயதும் அதற்கு மேலும்

1. புலனியக்க பருவத்தில் குழந்தை பல்வேறு பொருட்களின் பண்புகளைத் தனது புலன்களின் வழியேயும், உடலியக்கங்களின் வழியேயும் உணர்ந்து கொள்கின்றது. இப்பருவத்தில் மொழி உதவியின்றிக் குழந்தை செயற்படும். சுற்றாடல் அனுபவங்களுடன் இணைந்த பருவம் இதுவாகும். ஒரு பொருளை எடுக்க எத்தனிக்கும் போது தனது கையை எவ்வளவு தூரம் நீட்டினால் அப்பொருளை எடுக்கலாம் என்ற வகையான அறிவைப் பெறுகின்றது. புலன்களால் உணரப்படாத பல விடயங்கள் குழந்தையால் மறக்கப்டுகின்றன. இப்பருவம் பிறப்பிலிருந்து இரண்டு வயதுவரை நிகழும் எளிமையான புலன், உடல் இயக்கச் செயற்பாடுகளோடு இணைந்தவையாகும். இதன் மூலம் குழந்தையின் உளச் செயற்பாடுகள் வளர்ச்சியடைகின்றன. சில உளச் செயற்பாடுகள் இப் பருவத்தில் வலுவடைந்து காணப்படும்.

1. சூழலில் உள்ள பொருள்களிலும் தாம் வேறுபட்டவர்கள் என்று குழந்தைகள் உணரத் தொடங்குகின்றார்கள்
2. ஒலி, வெளிச்சம் முதலிய தூண்டிகளைத் தேடிக் கண்டு கொள்வர்
3. மகிழ்ச்சியான அனுபவங்களைத் தொடர்ந்து பராமரித்துக் கொள்ள விரும்புவர்.
4. பொருள்கள் இடம் மாறி வைக்கத்தக்க நிலைத்துவம் கொண்டவை என்று எண்ணுவர்

2. முன் - தூல சிந்தனைப்பருவம் :-

இப்பருவம் தூலசிந்தனைக்கு முற்பட்ட பருவம் என்றும் சொல்லப்படும். இது இரண்டு வயது தொடக்கம் ஏழு வயது வரையிலானது. சிந்தனையின் பண்பில் மாற்றம் ஏற்படுகின்றது. மொழி வளர்ச்சி ஏற்படுகின்றது. முன்பு அனுபவித்தவை தொடர்பான பிம்பங்களும் அறிவு வளர்ச்சிக்கு உதவுகின்றன. மொழிகளைப் பயன்படுத்தும் போதும் சிறிது சிறிதாகவே சொற்களின் பொருள் உணரப்படுகின்றது.

தற்போதைய நிலையை விட கற்பனை நிலைமைகள் பற்றிய சிந்தனை தோற்றம் பெறும். அவர்களால் கற்பனையில் உருவாக்கப்டும் பல விடயங்கள் அவர்களுக்கே பிரத்தியேகமாயிருக்கும். எண்ணக்கருக்கள் பின்னர் திருத்தியமைக்கப்படும் வகையில் தவறுகளைக் கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.தூல சிந்தனைப் பருவம் அல்லது செயற்பாட்டு முன்நிலைப் பருவம் என்பது ஒன்று தொடக்கம் பதினொரு வயது வரைக்கும் காணப்படும் பருவமாகும். இப்பருவத்தில் சிந்தனையும் அறிதல் திறனும் மேம்படும். சிந்தனையின் போது ஒரே சமயத்தில் பல பண்புகள் பற்றி சிந்திக்க முடிந்தது. தன்னையும் ஏனையவற்றைகளையும் வேறுபடுத்திப் பார்க்கும் ஆர்வம் வளர்ச்சியடைகின்றது. இப்பருவத்தில் தெளிவான உளப்பதிவுகளை அடிப்படையாக கொண்டு செயற்பட வேண்டும். பொருட்களின் அளவுமாற்றத்தன்மை (**conserration** ) முன்பின் மாற்றம் **(Reversibilitiy)** ஆகியன சிந்தனையில் வெளிப்பிடுகின்றன. முன்பு புலன்இயக்க முறையில் சிந்தித்துப் புலனீடான அனுபவங்கள் போக்கு இப்போது குழந்தையால் உள்ளத்தே சிந்திக்க முடிகின்றது.

4.இறுதியான முறைபடு செயல்பாட்டு நிலை குமரப்பருவத்தில் ஆரம்பத்தில் தோன்றும். புலன் தொடர்பற்ற முறையில் சிந்திக்க முடிகின்றது. கற்பனையிலும் அதிகமாகச் சிந்திப்பார்கள். தற்போதைய நிலையை விட இனிவரப்போகும் நிலை பற்றியும் சிந்திப்பார்கள். எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய விடயங்கள் தொடர்பான கருதுகோள்களை (**Hypotheses)** உருவாக்கும் திறனும் இவர்களிடம் ஏற்படும்.

இவ்வகையில் பியாஜேயினால் வெளிப்படுத்தப்பட்ட அறிவுசார் விருத்திப் பருவங்களை விட கல்வி தொடர்பான அவரது கருத்துக்கள் இன்றும் ஆசிரியர்களுக்குப் பெரும் துணைபுரிகின்றன.

இவற்றை அடிப்படையாகக் கொண்டே சிறுவர் இலக்கியங்கள் எழுதப்பட வேண்டும். சிறுவர் இலக்கியங்கள் ஊடாக சிறுவர்களுக்கு அனுபவங்கள் வழங்கப்படுவது நலம். அவர்களின் தேவைகளுக்கும் வயதுக்கும் ஏற்றதாக அவை அமைய வேண்டும்.

கீழை நாடுகளில் குருகுல முறைக் கல்வி நடைமுறையில் இருந்தது. பிள்ளைகள் ஆச்சிரமங்களில் தங்கியிருந்து குருகுலக் கல்வி முறையூடாகத் தங்கள் கல்வியைத் தொடர்ந்தனர். உயர் தத்துவங்களும்,பண்பாடுகளும் கீழைத் தேசங்களில் மேலோங்கி இருந்தற்கான ஆதாரங்களை நமது இதிகாச புராணங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். கர்ணபரம்பரைக் கதைகள் மூலமும் புரிந்து கொள்ளலாம்.

கீழைத்தேசத்தில் வாழ்ந்த நமது மூதாதையர் தங்கள் அனுபவத்தால் மனித வாழ்க்கையை உணர்ந்தவர்கள். அவர்களின் வாழ்க்கை முறை ஒரு வரையறையைக் கொண்டது. அனுபவத்தால் குழந்தைகளின் பருவங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து அதற்கேற்ப கல்விமுறைகளைப் பின்பற்றியவர்கள். தாய்மார்களும், பாட்டிமார்களும் வளர்ப்புக் கலையில் மேம்பட்டவர்கள். மொழியும், இசையும், சூழலும் அவர்களது வளர்ச்சியைத் துரிதப் படுத்தியுள்ளதை அனுமானிக்கலாம். அவர்களது வாழ்க்கை முறையை நுணுகி ஆராய்ந்தால் இந்த உண்மை புலனாகும்.

அந்த வாழ்க்கை முறை தலைமுறை, தலைமுறையாகக் கடத்தப்பட்டு நிலைநாட்டப் பட்டிருக்கிறது. இந்த உண்மையை நமது கிராமிய இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன.

இன்று ஈழத்தில் சிறுவர் இலக்கியம் நன்கு வளர்ச்சியடைந்து வருகிறது எனலாம். சிறுவர் இலக்கியம் என்பது விரிவுபட்டு வியாபித்துள்ளது. அது பாடலாக, கதைகளாக, புதிர்களாக, நாவலாக. நாடகமாக. கட்டுரையாக. அறிவியல் சார்ந்த சிறுவர் ஆய்வுநூல்களாக வளர்ந்துள்ளது. எவ்வாறு பெரியோர் இலக்கியம் விசாலித்துள்ளதோ அவ்வாறே சிறுவர் இலக்கியமும் பரந்து வளர்ந்து வருகிறது.

## சிறுவர் இலக்கியத்துக்கு வித்திட்டவர்கள் யார்?

இதற்குரிய விடையாக உலகின் தாய்மாரும், பாட்டிமார்களும் என்றே கூறுவர். சிறப்பாகச் சொல்லப்போனால் தாய்மார்களும், பாட்டிமார்களுமே சிறுவர் இலக்கியங்களுக்கு வித்திட்டவர்களாவர்.
உலகத்தை உய்யவைக்கும் கண்டுபிடிப்புகளும், ஆவணங்களும் இன்றும் நீடித்து நிலைக்கின்றன. மனிதன் எங்கெங்கு வாழ்கிறானோ, அங்கெல்லாம் சிறுவர் இலக்கியங்கள் எழுதப்பட்டோ அல்லது எழுதாக் காவியங்களாகவோ உலாவரும். அதன் வளர்ச்சி சில இடங்களில் விருத்தியடைந்தோ, அல்லது வளர்ச்சியுறாமலோ இருக்கலாம். தமிழில் சிறுவர் இலக்கியம் சங்க காலத்து இலக்கியங்களில் ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றன எனக் கூறுவர். சிறுவர் பற்றிய செய்திகள் ஆங்காங்கே காணப்பட்டாலும் சிறுவர் பற்றிய இலக்கியங்கள் காணப்படவில்லை என்று கூறுவார்கள்.

அகநானூற்றில் சிறுவர் பற்றிய செய்தி ஒன்று இவ்வாறு உள்ளது.

**'முகில் நில திகழ்தரும் முத்திங்கள், பொன்னுடை தாலி என்மகன் ஒற்றி, வருகுவையாயின் தருகுவன்பால்'**. – செய்யுள் -54
எனக் குறிப்பிடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழில் சிறுவர் இலக்கியம்

தமிழில் மட்டுமல்ல எந்த மொழியென்றாலும் அந்தந்த மொழியின் தாய்மார்களும், பாட்டிமார்களுமே சிறுவர் இலக்கியங்களை வளர்த்தெடுக்க உதவியுள்ளனர். உலகின் தாய்மாரும், பாட்டிமார்களும் என்றே கூறுவர். தமிழிலும் தாய்மார்களும், பாட்டிமார்களுமே சிறுவர் இலக்கியங்களுக்கு வித்திட்டவர்களாவர். உலகத்தை உய்யவைக்கும் கண்டுபிடிப்புகளும், ஆவணங்களும் இன்றும் நீடித்து நிலைக்கின்றன. மனிதன் எங்கெங்கு வாழ்கிறானோ, அங்கெல்லாம் சிறுவர் இலக்கியங்கள் எழுதப்பட்டோ அல்லது எழுதாக் காவியங்களாகவோ உலாவரும். அதன் வளர்ச்சி சில இடங்களில் வளர்ச்சியடைந்தோ, அல்லது வளர்ச்சியுறாமலோ இருக்கலாம்.

தமிழில் சிறுவர் இலக்கியத்தை வளர்த்தெடுக்கும் பணியில் பலர் தமது பங்களிப்பை நல்கியுள்ளனர். ஔவையார் வாக்குண்டாம்,ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி போன்றவற்றைத் தந்துதவினார். உலகநாதர் உலகநீதியையும், அதிவீரராம பாண்டியரின் வெற்றிவேற்கையையும்,, விளம்பிநாகரின் நாண்மணிக்கடிகையையும் தந்தனர். திருவள்ளுவர் திருக்குறள் நூலைத் தந்து பெருமை கொண்டனர். அன்று இப் பெருந்தகைகள் சிறுவர் இலக்கியத்துக்குத் துணைநின்றனர்.

பாரதியைப் பின்பற்றி அவருக்குப் பின் வந்தவர்களும் சிறுவர் பாடல்களை எழுத முனைந்துள்ளனர். பாரதிதாசன், கம்பதாசன், தமிழ்ஒளி, தமிழழகன், சுப்பு ஆறுமுகம், மின்னூர் சீனிவாசன்,சக்திகனல்,தமிழண்ணல்,ஈழத்தில் யாழ்ப்பாணன், தமிழவேள்(க.இ.க.கந்தசாமி), இன்னும் பலரும் எழுதினர். இவர்களைத் தொடர்ந்து இற்றைவரை ஈழத்தில் ஏராளமானோர் எழுதியும், எழுதிக்கொண்டும் வருகின்றனர். அவர்களது பெயர்ப் பட்டியலைத் தேடுகிறேன். முடிந்தவற்றைத் தருகிறேன். சேர்த்ததும் சில தரவுகளோடு அடுத்து வெளிவர இருக்கும் நூலில் தரமுயற்சி செய்கிறேன்.

.பேராசிரியர் க.கைலாசபதி தனது கட்டுரையில் 'ஈராயிர வருட இலக்கிய வரலாற்றை நோக்குகையில் சான்றோர் செய்யுள்கள் செய்த காலத்தில் இருந்து ச.து.சு.யோகியார் வரையில் குழந்தைகளைப் பற்றிய பாடல்கள் ஏராளமாக இருப்பது கண்கூடு. எனவும், 'குழந்தைகளுக்காக என்று எழுதப்பட்ட பாடல்களோ. கதைகளோ இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை இல்லையென்றே கூறலாம்' என நாக. முத்தையா அவரது 'குழந்தைக் கவிதைகள்' என்ற நூலில் கூறியுள்ளதை எடுத்துக் காட்டியுள்ளார்.

பாரதியாரும், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையும்,குழந்தைகளுக்காகப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களை எழுதி உயர்ந்த உணர்ச்சிகளை இலக்கியமாக்கி வாழவைத்தார்கள். பாரதியின் பாடல்கள் இலகுவானதாகவும் உயர்ந்த உணர்சிகளைக் கொண்டனவாகவும் அமைந்தன. பண்டிதர்கள் மடியில் தவழ்ந்த தமிழை எளிமைப்படுத்தி பாமரரின் சொத்தாக்கிய பெருமை பாரதியையே சாரும்.

'ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா'

போன்ற அழகிய பாடல்களைப் பாடினார்.பாரதியின் பாடல்கள் இலகுவானதாகவும், எளிய சொற்களைக் கொண்டனவாகவும், உயர்ந்த உணர்சிகளைக் கொண்டனவாகவும் அமைந்தன. அவை பிள்ளைப் பருவத்துக்கும், முன்குமரப் பருவத்தினருக்கும், குமரப்பருவத்தினருக்கும் பொருத்தம் உடையனவாக இருப்பதை அவதானிக்கலாம். அத்துடன் விரும்பியவர்கள் படித்து இரசிக்கத் தக்கனவாகவும் மிளிர்கின்றன. அவற்றை விரும்பிய மெட்டுக்களில் பாடக்கூடியதாகவும் உள்ளன.

பாரதியின் பாடல்களே பின் வந்த கவிஞர்களுக்கும், புலவர்களுக்கு வழிகாட்டியுள்ளன. பாரதியின் பாடல்களை இன்று சினிமாக்களில் நவீன மெட்டுக்களில் இசையமைத்து உலாவ விடுகின்றனர். பொருத்தமான காட்சிகளை அமைத்துப் பாடல்களைச் சேர்ப்பதால் மக்களிடையே அப்பாடல்கள் விரைவாகச் சென்றடைகின்றன. சிறுவர் வாய்களில் அப்பாடல்கள் விளையாடுகின்றன. பாரதியின் பாடல்கள் இன்றும், என்றும், யாவருக்கும் பொருந்துவனவாக உள்ளன.

சென்னை வானெலி நிலையத்தில் பல வருடங்களாக பணிபுரிந்த ர.அய்யாசாமி வானொலி அண்ணாவாகத் திகழ்ந்தார். அவர் நாட்டுப் பாடல்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டார் அத்துடன் சிறார்களுக்குக் கதைப் பாடல்களை எழுவதிலும் உழைத்தார். குழந்தைகளுக்கு நாடோடிப் பாடல்கள் என்ற நூலையும் வெளியிட்டார். பாலராமாயணம், சிறுவர் சிலம்பு, மோகனகாந்தி என்ற நூல்களையும் வெளியிட்டார்.

கா. நமசிவாய முதலியார். வி.கிருஷ்ணமூர்த்தி, மணி திருநாவுக்கரசு, மயிலை சிவமுத்து, சுகுமாரன் அழ.வள்ளியப்பா, பெரியசாமி தூரன், வாண்டுமாமா, டாக்டர் பூவண்ணன், வாணிதாசன் போன்றோரும் இன்னும் பலரும் சிறுவர் இலக்கியத்துக்காக உழைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தில் சிறுவர் இலக்கிய முன்னோடிகள்

ஈழத்தில்சிறுவர் இலக்கிய வளர்ச்சி சங்ககாலத்துக்கு முன்னரேயே தொடங்கப்பட்டு விட்டது என இத்துறையில் ஈடுபட்டோர் கூறுவர். அது படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று ஆலவிருட்சம் போன்று வளர்ந்து வருகிறது எனச் சிறுவர் இலக்கிய ஆர்வலர்கள் குறிப்பிடுவர். சிறுவர் இலக்கியம் தமிழகத்தைவிடவும் ஈழத்திலேயே முளைவிடத் தொடங்கியது என விளக்கம் அளிப்பர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆங்கிலேயரின் வருகையோடு ஏற்பட்ட நவீனகரமான மாற்றங்களோடு தமிழ் சிறுவர் இலக்கியத் தளிர் இலைவிடத் தொடங்கியது. தமிழில் முதலாவது சிறுவர் பாடநூலாக யாழ்.தம்பிமுத்துப்பிள்ளை அவர்கள் 1886ல் 'பாலியக் கும்மி' என்ற நூலை எழுதி வெளியிட்டார். 'பாலியக் கும்மிக்கு' முப்பத்திரெண்டு ஆண்டுகளின் பின்னர் 1918 ஆம் ஆண்டு இலங்கை அரசாட்சி முதலியாரான ச.வைத்தியநாதர் குழந்தைப் பாடற்தொகுதியான 'தமிழ்ப் பாலபோதினி' என்ற அபிநயப்பாடல்களின் தொகுதியை வெளியிட்டார்.

அந்நூலில் 'கை வீசம்மா','சாய்ந்தாடம்மா','குண்டிடுக்கி குடுகிடுக்கிக் கூடை கையில் ஏந்தி'.'என் தாயே', போன்ற சிறந்த சிறுவர் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்கள் நமது நாட்டாரிலக்கியப் பாடல்களில் இருந்து பிறந்தவை. எனினும் அவ்வகைப் பாடல்கள் சிறுவர்களைக் கவர்ந்துள்ளன என்பதில் எவ்வகை ஐயமும் இல்லை.

நான் சிறுவனாக இருந்த போது எனது ஆசிரியர் 'குண்டுடிக்கி குடுகிடுக்கி' என்ற பாடலை அபிநயத்துடன் பாடிக் காட்டிக் கற்பித்தார். இப்பாடலைக் கற்பிக்கும் போது தெருவழியாக கூடை முடைந்து கூவி விற்கும் பெண் சென்றார். அவரை அழைத்தார் விலையைக் கேட்டார். தான் காசு எடுத்து வரும்வரை வகுப்பில் நிற்குமாறு கூறினார். அந்தப் பெண்ணை அவதானிக்கும் படியும் கூறிச்சென்றார

நாங்கள் ஆசிரியர் கூறியபடி அந்தப் பெண்ணை அவதானித்தோம். அந்தப் பெண்ணிடம் பல கேள்விகளைக் கேட்டோம்.ஆசிரியர் வந்து கூடையை காசு கொடுத்து வாங்கினார். அது கற்பித்தல் சாதனமாக மாறியது. அந்தப் பெண் அப்பாடலில் வரும் குறத்திப் பெண்ணாக மாறியிருந்தாள்.

அந்தப் பெண்ணை பார்த்தீர்களா? என்று கூறிவிட்டு அந்தக் கூடையை இடுப்பில் வைத்து அபிநயித்தார். பின் எங்களை ஒவ்வொருவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிநயிக்கச் செய்வித்தார். சிரித்துச் சிரித்து விளையாடிக் கற்றோம். அந்நிகழ்ச்சி இன்னும் என் மனதில் நிழலாடுகிறது. அந்த ஆசிரியர்தான் எங்கள் பாடசாலையின் தலைமை ஆசிரியரும் ஆவார்.

படிக்கும் காலத்தில் கோலாட்டம் பழக்குவார்கள். அதற்கான பாடல்கள் நிறையவே உண்டு. ஆலங்கேணி பாடசாலையில் திருக்கோயிலைச் சேர்ந்த செல்லத்தம்பி என்றொரு தலைமை ஆசிரியர் கடமையாற்றினார். அவர் நாட்டுப்புற விளையாட்டுக்கள், இலக்கியங்களில் பரீட்சையம் உடையவர். பாடசாலை எந்த நேரமும் இயங்கிக் கொண்டிருக்கும். பாடசாலையில் தலைமை ஆசிரியரும் உதவி ஆசிரியர் இருவரும் இருந்தனர். பாடசாலை விட்டபின் பகல் உணவுக்குப் பின் விளையாட்டு, கலைநிகழ்வுகள் போன்றன நடைபெறும். தலைமை ஆசிரியர் கூத்து, கோலாட்டம் பழக்குவார்.

'அனுமான் வசந்தன்' என்றொரு வகைக் கோலாட்டம் உண்டு. அதற்கான பாடல்களும் உண்டு. எழுந்து வளைந்து துள்ளிப் பாய்ந்து ஆடும் ஆட்டம் அது.

'முசுற்று வசந்தன், 'கூவாய் குயிலே'. என்றும் பல்வேறு வகையான கோலாட்டங்களைப் பழகினோம். மாணவர்களாகிய நாங்கள் சுழன்று ஆடுவோம். பழக்கும் தலைமை ஆசிரியர் கைகளில் தாளம் இருக்கும். ஒரு ஆசிரியர் தவில் வாசிப்பார். தாளம் தட்டிச் சந்தோசத்துடன் பழக்குவார். இவ்வகைப் பாடல்கள் பற்றிய அறிவு எங்களுக்கு முன்னர் தெரியாது. இவையெல்லாம் நமது நாட்டுப்புற இலக்கியங்கள் என்பதைப் பின்னர் புரிந்து கொண்டோம். ஒவ்வொரு வகை வசந்தனுக்கும் ஒவ்வொரு வகை மெட்டு இருக்கும். அந்த மெட்டுக்கு ஏற்ற ஆட்டம் இருக்கும்.இசையும்,

'இருந்து பாய்ந்தான் அனுமான்
இலங்கையைச் சுட்டான் அனுமான்
பத்துத் தலையுள்ள இராவணனாரைக்
குத்திப் பொருதான் அனுமான்'

ஆசிரியர் பாடியாடிப் பழக்கியது இன்றும் என் கண்முன் நிற்கிறது. அந்த நாள் ஞாபகம் பசுமையானது. மீண்டும் வருமா?

அப்படிப் பட்ட ஆசிரியப் பெருந்தகைகளை இன்று காணமுடியுமா? எங்கள் தலைமை ஆசிரியருக்குக் கணீர் என்ற குரல். இந்தப் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களைச் சார்ந்ததாகும். நாங்கள் கோலாட்டம் ஆடுவோம். ஆடும்போதே பாடல்கள் செவிகள் வழியாக உள்ளத்தில் பதிந்து விடும். எங்கள் உள்ளம் துள்ளும். ஆர்வம் தூண்டும். இன்றும் அவை நினைவில் உள்ளன. நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராகிய பின் இவற்றைத் தேடிப் பிள்ளைகளுக்குக் கற்பித்தேன். விளையாட்டு வெறுமனே விளையாட்டல்ல. அது ஒரு கற்றல் செயலாகும். 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பார்கள். சிறுவர் இலக்கியங்களும் கற்றல் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாகின்றன. அதனால் சிறுவர் இலக்கியங்கள் வெறும் பொழுது போக்குக்குமட்டுமல்ல. அறிவைப் பெருக்குவதற்கும், கூடவே நமது பண்பாட்டு விழுமியங்களைப் போற்றிப் பாதுகாக்கவும் உதவுகின்றன.

1935 ஆம் ஆண்டு வட பெரும்பாக வித்தியாதரிசியாகக் (இன்றையக் கல்விப் பணிப்பாளர்) கடமையாற்றிய கே.எஸ். அருணந்தி சிறுவர் இலக்கியப் பரிசுப் போட்டியை நடத்தினார். போட்டியில் பரிசுக்குரிய பாடல்களைத் தெரிவு செய்யும் நடுவர்களாக சுவாமி. விபுலானந்தர், சுவாமி.ஞானப்பிரகாசர், நவநீத கிருஷ்ணபாரதியார், பண்டிதர் மகாலிங்கசிவம். பண்டிதமணி. சி.கணபதிப்பிள்ளை முதலானோர் கடமையாற்றினர்.

அப்பாடல்களைத் தொகுத்து வடஇலங்கை தமிழாசிரிய சங்கம் 'பிள்ளைப்பாட்டு' என்ற பெயரில் வெளியிட்டது. இப்போட்டியின் ஊடாகவே க.சோமசுந்தரப்புலவர். மா.பீதாம்பரம், அகிலேசசர்மா போன்றோர் வெளியுலகினுக்கு அறிமுகமானார்கள். இப்போட்டி தமிழாசிரியர்களிடையே ஒரு உத்வேகத் தையும், திருப்பு முனையையும் தோற்றுவித்தது.

உண்மையில் தமிழாசிரியர்களே சிறுவர் இலக்கியத்துக்கு ஊன்றுகோலானார்கள். இந்தநிலையில் சிறுவர் இலக்கியம் என்பது சிறுவர் பாடல்களையே சுட்டி நிற்பதை மனங்கொள்ளவேண்டும்.இதனையே இன்றுவரை காத்துப் போற்றி வருகின்றனர். ஆனால் அதன் வளர்ச்சியை யாரும் மனங்கொள்ளவில்லை.

சிறுவர் பாடல்கள் வெளிவந்து அவற்றின் தேவைகள் அதிகரித்ததன் விளைவே அப்பாடல்களில் கரிசனை ஏற்பட்டதுக்கான காரணங்களாகும்.. பல அறிஞர்களும், ஆய்வாளர்களும் சிறுவர் பாடல்கள் எவ்வாறு அமைய வேண்டும். சிறுவர் என்போர் யார்? அவர்களுக்கு எவ்வகைப் பாடல்கள் பொருத்தமனவை போன்ற சிந்தனைகளை முன் வைத்து தேடலில் ஈடுபட்டனர். 'இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம்' என்பார்கள். இத் தேடலின் விளைவு இன்று நல்லதொரு நிலைக்குச் சிறுவர் பாடல்கள் முன்னேற்றம் கண்டு வருகின்றன. அத்துடன் சிறுவர் இலக்கியங்களின் வகைகளையும் வரையறுத்தனர்.

பல அறிஞர்களும் சிறுவர் இலக்கிய ஆய்வாளர்களும் இவற்றை ஆராய்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தனர். சிறுவர் இலக்கியங்களின் கனதியை மனங்கொண்டு எழுதினார்கள். சிறுவர் இலக்கிய வளர்ச்சியும் போக்கும். அவற்றின் வளர்ச்சிக்கு என்னென்ன செய்யவேண்டும் என்று எழுதினார்கள். அவர்களின் அந்த வழிகாட்டல்களே இன்று சிறுவர் இலக்கியங்களின் செல்நெறியில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ளன.

சிறுவர் இலக்கியங்களை ஆய்வு செய்தவர்கள் தமது கருத்துக்களை முன் வைத்தனர். இக்கருத்துக்கள் யாவும் சரியானவை என்றோ, அல்லது தவறானவை என்றோ கூறமுடியாது. கூறியவர்கள் யாவரும் தமது நிலைப்பாட்டில் நின்றே கூறியுள்ளனர். எவை சரியென்ப படுகின்றனவோ அவற்றை ஏற்றுக் கொள்வது அறிவுடமையாகும்.

தொடக்கத்தில் எவரும் சிறுவர் இலக்கியங்களை எழுதலாம் என்ற நிலை தோற்றம் பெற்றது. ஆனால் இன்று அந்த நிலை மெல்ல மெல்ல மாற்றம் பெற்று வருகிறது.இலங்கை அரசும், மாகாண அரசுகளும் சிறுவர் இலக்கியங்களுக்கு அங்கிகாரம் கொடுத்து அரச இலக்கிய(சாஹித்திய) விருது வழங்கும் திட்டத்தை முன்வைத்துப் பரி சுகளும் வழங்கி வருவது சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு உந்து சக்தியாக உள்ளது.

சிறவர் இலக்கியம் என்பது வெறும் பாடல்கள்தான் என்ற நினைப்புடன் ஆய்வுகளும் நடைபெறுகின்றன.

உரைநடையினைப் பற்றிய கவனம் அவ்வளவாக இருக்கவில்லை. இதற்கான காரணங்கள் பல உண்டு. சங்காலத்தில் இருந்து ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதிவந்தார்கள். அச்சுப் பதிப்பு முறை ஐரோப்பியரின் வருகையின் பின்னரே நமது நாடுகளில் பரவியது. ஆட்சியாளர்கள் தமது தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கோடு அச்சுப் பதிக்கும் முறையைப் பரவலாக்கினர். அத்துடன் சமயம் பரப்பும் நோக்கும்அவர்களின் குறியாக இருந்தது. சமய வாதங்கள் எழுதுவதற்கு வழிகோலியது. அதனால் உரைநடையில் வளர்ச்சி தெரிந்தது. இன்று பலர் கதைகளையும்,கட்டுரைகளையும், உரையாடல்களையும்,நாவல்களையும், நாடகங்களையும் எழுதி வருகிறார்கள். தொடக்கத்தில் எழுதிய உரைநடைக்கும், இன்றைய உரைநடைக்கும் நிறையவே வித்தியாசங்களை அவதானிக்கலாம். உரைநடையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

பாரதியின் ஆக்கங்கள் கவிதைகளாக,வசன கவிதைகளாக, கட்டுரைகளாக அமைந்தன. அவற்றை எனது ஆசிரியர்கள் படித்து அதே போல் எழுதும்படி வழிகாட்டினர். சிறப்பாக வித்துவான் வி.சீ. கந்தையா எனக்குத் தமிழ் கற்பித்தார் நான் படிக்கும் காலத்தில் தமிழ் மொழியும், இலக்கியமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுந்தான் தமிழ் மொழியில் கற்கலாம். மற்றைய பாடங்கள் ஆங்கிலத்தில் கற்க வேண்டிய அமைப்புமுறை நிலவியது. அந்தப் பாட வேளையில் இவற்றைக் கற்பித்தார்கள்.

அழ.வள்ளியப்பா பாடல்களையும், கதைகளையும் எழுதினார். அவர் எழுதும்போது அவரைப் பாராட்டிப் பலர் உற்சாகப் படுத்தினர். அவருக்குப் போட்டியாக எழுத்தாளர்கள் அதிகம் இருக்கவில்லை. அத்துடன் அவர்'சக்தி' என்ற சஞ்சிகை அலுவலகத்தில் காசாளராகக் கடமையாற்றினார். 'சக்தி' இதழுக்கும் அவ்வப்போது எழுதினார். பின்னர் இந்தியன் வங்கியில் கடமையாற்றி ஓய்வு பெற்றார் பின்னர் 'பூஞ்சோலை', என்ற இதழின் ஆசிரியராகச் சேர்ந்தார். 1983 தொடக்கம் 1987 வரை 'கோகுலம்' இதழிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார்.அதனால் சிறுவர்களுக்கான கதைகள், பாடல்களை நிறையவே எழுதினார். அப்போது இலக்கிய நண்பர்களை நிறையவே சம்பாதித்தார்.

இலங்கையில் அவ்வாறான சூழ்நிலை நிலவவில்லை. இங்கே சிறுவர் இலக்கியங்களில் ஈடுபடுவோர் அதிகமாக ஆசிரியர்களாகவே விளங்குகின்றனர். தங்கள் மாணவர்களுக்குத் தேவைப் பட்டதால் எழுதினார்கள். வேறு தொழில்களில் ஈடுபட்டவர்களாக ஒரு சிலரே உள்ளனர். பலர் எழுதவேண்டும் என்ற ஆர்வத்தால் எழுதினர். அப்படி எழுதும்போதும் தங்கள் முயற்சியையும் பணத்தினையும் மூலதனமாக்கினார்கள்.

மாரி மழையை நம்பி 'மானாவரி' வேளாண்மை செய்யும் விவசாயிகள் போன்று அந்த சொல்லேர் உழவர்கள் வருவதைக் ஏற்றுக் கொண்டார்கள். சிறுவர் இலக்கியங்களை வெளியிட்டாலும் அவற்றை வாங்கிப் படிப்பதற்கும், அவற்றைப் பற்றி ஆக்கபூர்வமான கட்டுரைகளை எழுதுவாரும் குறைவாகவே உள்ளனர். அவர்களுள் பேராசிரியர் கலாநிதி செ.யோகராசா, கே.எஸ். சிவகுமாரன்,அமரர். வே.இராசையா, கவிஞர் .த.துரைசிங்கம், பேராசிரியர் துரை.மனோகரன், அன்னலட்சுமி இராஜதுரை,திக்வலக் கமால்,இரத்தின வேலோன், வசந்தி தயாபரன், தம்பு சிவா போன்றோர் மட்டுமே தரத்தின் நிறைகண்டு ஆக்கபூர்வமான திறனாய்வுகளை (**constructive criticism)** எழுதுகின்றனர்.

நமது தேசிய பத்திரிகைகளான வீரகேசரி,தினகரன்,தினக்குரல். நவமணி போன்றனவும் தரமான அறிமுக உரைகளை எழுதி வெளியிடுகின்றன. சில ஆசிரியர்களும், பெற்றோரும் இந்நூல்களை வாங்கிப் படித்து உற்சாகப் படுத்துகின்றனர். இலங்கையில் சகோதர மொழியான சிங்களத்தில் வெளியாகும் சிறுவர் இலக்கியங்களுக்கு பெரும் வரவேற்பு உள்ளது. நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியில் வெளிவரும் நூல்களை வாங்கி உற்சாகப் படுத்தினால் பல தரமான சிறுவர் இலக்கியங்களைப் பலர் படைப்பார்கள்.

பாடசாலைகள் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் திட்டங்களை உருவாக்கித் தமது மாணவர்களை வாசிக்கத் தூண்டுகிறார்களா? அரசு பாடசாலை நூலகங்களை விருத்தி செய்யுமுகமாகப் பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கி உதவுகிறது. ஆனால் எத்தனை பாடசாலைகள் இலங்கை எழுத்தாளர்களது நூல்களை வாங்குகின்றன. கடந்த ஆண்டு பல இலங்கை எழுத்தாளர்களது நூல்களுக்கு கல்வி அமைச்சு தேர்ந்தெடுத்து பட்டியல் படுத்தி வெளியிட்டு இருந்தது. இந்த முயற்சி எழுத்தாளர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

எனினும் பல பாடசாலைகள் இவற்றைப் புறந்தள்ளி விட்டு இந்திய நூல்களை வாங்கியுள்ளதாக அறியக் கிடக்கின்றது. நமது அரசு, எழுத்தாளர்களை ஊக்குவிக்க பல நடவடிக்கைகள் எடுக்கின்றது. ஆனால் அவற்றை நம்மவர்கள் தட்டிவிடுகின்றனர். இந்த நிலை மாறினால்தான் நமது எழுத்தாளர்களது நூல்களுக்கு வரவேற்பு உருவாகும். நமது நாட்டில் எழுத்தாளர்கள் உருவாக வழிபிறக்கும். நல்ல தரமான எழுத்தாளர்கள் நமது நாட்டில் இருக்கின்றனர்.

'ஒரு நூலினை எழுதுவது எழுத்தாளனுக்கு. இறைவன் கொடுத்த வரம்' என்பார்கள். ஒரு புத்தகம் என்பது நாம் வரம் பெற யாரோ செய்த தவமாகும் எனக் கூறுவர். வாசிப்பு என்பது ஒரு யோகம் என்பார்கள். வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். காற்றுக்கு திசை இல்லை. அறிவுக்குத் தேசம் இல்லை. ஒரு மொழி தொடர்ந்து வாழவேண்டுமானால் அது அடுத்த தலைமுறைக்குச் சென்று சேரவேண்டும். அடுத்த தலைமுறையான சிறார்களுக்கு நமது தமிழ் மொழியை அவர்கள் கற்பதற்கு எந்தளவு கரிசனை காட்டுகிறோம்? நாம் இந்த வகையில் படுதோல்வி அடைந்து வருகிறோம்.

நாம் கற்கும்போது இருந்த நிலை இன்று இல்லை. அன்று தன்னை உணர்வும், வாழ்க்கையை வாழ்வாங்கு வாழவும் கல்வி உதவுவதாக அமைந்தது. இன்று தொழிலைப் பெறுவதற்காக மட்டுமே கல்வி என்ற நிலை உருவாகிவிட்டது. நமது ஆசிரியர்கள் கற்பித்தது போன்று இன்றைய ஆசிரியர்கள் இல்லை. ஆசிரியர்களில் பிழைகாண முடியாது. அதற்கு இன்றைய கல்வி முறையும் காரணமாகும். இன்று ஆசிரியர்களுக்குக் கற்பிக்க வாய்ப்பில்லாது அவதியுறுகின்றனர். பாடசாலைக்குச் சென்றால் படிவங்களை நிரப்புவதிலேயே ஆசிரியர்களின் நேரம் விரையமாகிறது. இந்த நிலையில் மாற்றம் காணவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மொழியின் அடிப்படை வடிவமே அதன் எழுத்து வடிவம்தான். எழுத்து வடிவத்தில் சிறார்களிடம் கொண்டு சேர்ப்பதில் பாடத்திட்டத்துக்கு அடுத்து முதன்மை வகிப்பது சிறுவர் இலக்கியமாகும். ஆகவே சிறுவர் இலக்கியங்களைப் படைப்பவர்களை ஊக்குவித்தலும் நமது கடமையாகும். அதேபோல் சிறார்களைப் புத்தக உலகினுக்கு அழைத்துச் செல்ல வேண்டியதும் நமது கடமையாகும். நாம் என்ன செய்கிறோமோ அதனைச் சிறார்களும் செய்வார்கள்.

உலகில் சிறுவர் இலக்கியங்கள் எங்கெல்லாம் செழுமையுடன் உள்ளதோ, அங்கெல்லாம் சிறந்த சமூக உருவாக்கம் நிகழ்கிறது என்பது கண்கூடு. சிறுவர் கல்வியில் மட்டுமல்லாது அவர்களின் வாழ்விலும் சிறுவர் இலக்கியம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. பாடத்திட்டத்தினைத் தாண்டி அதிகமான விடயங்களைக் கற்றுக் கொள்ளச் சிறுவர் இலக்கியம் உதவுகிறது என்பது கல்விமான்களது ஏகோபித்த முடிவாகும். அதுவே உண்மையும் ஆகும்.

## சிறுவர் கதைகள்

கதையும் பாட்டும் சிறுவரின் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவன. கதைகளும், பாடல்களும் தாய்மார், பாட்டிமார் ஊடாகப் பிரபல்யம் அடைந்துள்ளன. அவற்றின் பரம்பலுக்கு தாய்மார்களும், பாட்டிமார்களும் மூலகாரணர்களாவர். இன்று எண்ணக்கருக்கள் கதைகளாகவும், பாடல்களாகவும், உரைநடை வடிவிலும் வியாபித்துள்ளன. சிறுவர் இலக்கியத்தில் உரைநடைத் துறையின் முன்னோடியாக நல்லைநகர் நாவலரே( 1823 – 1879) விளங்குகிறார். அவரின் பின்னரே (1876–1950), மறைமலையடிகள், கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை(1876–1921), பாரதியார், நாமக்கல். மு.இராமலிங்கம்பிள்ளை முதலியோர் பிரகாசிக் கின்றனர்.

கிறிஸ்த்தவமதத்தின் அறிமுக வாயிலாகவே சிறுவர்களுக்கான பாட நூல்கள் எழுதப்பட்டன. 1859ல் அமெரிக்க மிஷனைச் சேர்ந்தோரின் முயற்சியால் 'பாலியர் நேசன்' என்ற சிறுவருக்கான சஞ்சிகை வெளிவந்தது. ஈழத்தில் அமெரிக்க மிஷனரிமார் 'பாலபோதம்' என்ற பாடநூலினை எழுதித் தொடக்கி வைத்தார்கள். அதனைப் பின்பற்றியே ஆறுமுக நாவலர் 'பாலபாடம்' என்ற நூற்தொடரை எழுதி வெளியிட்டார். ஆறுமுக நாவலர் பைபிளை நன்கு கற்றிருந்தார். அதனாலேயே பைபிளைச் சிறப்பாக தமிழ் மொழிக்கு மொழிமாற்றம் செய்தார். பலர் பைபிளை மொழி மாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார்கள். எனினும் ஆறுமுக நாவலரின் மொழி பெயர்ப்பே மிகச் சிறந்ததாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.

சமயங்களின் தோற்றங்களினால் நன்மைகள் நடந்தேறிய செயற்பாடுகள் பல. ஆனால் அதே சமயங்களினால் மக்களை அழித்து வரும் முயற்சிகளையும் காண்கிறோம். மனிதனுக்கு வாழும் வழிமுறைகளை வகுத்து வழிகாட்டும் சமயங்கள், மதமென்ற போதையுள் சிக்கி மதம்பிடித்து, ஆண்டவன் பெயரினாலும், சமயத்தின் பெயராலும் கொன்றழிக்கின்றவர்களைக் காண்கிறோம். மனிதருக்காகச் சமயங்களே தவிர, சமயங்களுக்காக மனிதர்கள் இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள முடியாத ஆண்டவனுக்கு, தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள முடியாத அப்பாவிகளைக் கொல்வதற்குச் சமயங்கள் துணைபோதென்பது அறிவிலிகளின் செயல்களே. இதனைச் சிறுவர் இலக்கியங்கள் ஊடாக அனைத்துச் சிறுவர்களுக்கும் புரிய வைக்கவேண்டும்.

சைவசமயத்தைச் சேர்ந்த ஆறுமுக நாவலர் அதன் அருமை பெருமைகளை உணர்ந்தார். சைவசமயத்தை வளர்த்தெடுக்கும் எண்ணத்தில் மூழ்கினார். அதற்கான முயற்சியில் ஈடுபட்டு மடிப்பிச்சை எடுத்துச் சைவசமய மாணவர்கள் படிப்பதற்காகப் பாடசாலைகளை அமைத்தார். சைவசமய நூல்களை எழுதிவெளியிட்டார். கிறிஸ்தவர்கள் எவற்றை எழுதுகிறார்களோ அவற்றுக்கேற்றாற் போல் தனது பாடநூல்களை அமைத்துக் கொண்டார். சமயங்களுக்கிடையே தோன்றிய போட்டி தமிழ் உரைநடைக்கு நெம்பு கோலாயிற்று.

தமிழ் மொழிப் பாடம் போன்ற ஏனைய பாடங்களுக்கான நூல்களையும் சிறார்களின் உளவளர்ச்சிக்கு ஏற்ப எழுதவேண்டியது அவசியம் இருந்தது. இதை உணர்ந்து பாடநூல்களை எழுதுவது முக்கியமானதாகும். சொற்தேர்வும், வாக்கிய அமைப்பும் மிகவும் முக்கியமானதாகும். எல்லா நிலைகளிலும் வசன அமைப்பு உள ஓட்டத்துக்கும், எழுத்து ஓட்டத்துக்கும் இடையே ஒரு இயைபு இருத்தல் அவசியமாகும் என்பது தமிழறிஞரின் ஒருங்கிணைந்த கருத்தாகும். இதனைக் கருத்தில் கொண்டே மேல்நாட்டு அறிஞர்களும் எழுதிவருகின்றனர். அதனை ஆறுமுக நாவலர் பின்பற்றினார். தனது முயற்சியில் வெற்றியும் கண்டார். அதனால் 'வசனநடை கைவந்த வல்லாளர்' எனப் போற்றப் பட்டார்.

நமது ஆறுமுக நாவலர் அவர்களும் இதனைக் கருத்தில் கொண்டேதமது நூல்களை எழுதினார். அன்று அவர் விட்டுச் சென்றவை இன்று ஏனையோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டுச் செல்லக் கூடியதாக உள்ளன. சிறுவர் இலக்கியம் படைப்போருக்கும் வழிகாட்டியாகவும்உள்ளது. அத்துடன்நாவலர், சிறுவரிடையேயும் அறிவிலும், வயதிலும் வேறுபாடு உடையவர்கள்என்பதை உணர்ந்து கொண்டார். அதற்கேற்ப உரைநடையை இலகு படுத்தி எழுதினார். பாலபாடம், சைவவினாவிடை, இலக்கணச்சுருக்கம், பெரிய புராண வசனம், திருவளையாடற் புராண வசனம் ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டார். அவர் சைவ சமயத்தையும். தமிழ் மொழியையும் போற்றிச் சேவைசெய்தார்.

பாடசாலைகளில் சமயபாடம் கற்பிக்கப் பட்டதால் ஒவ்வொரு சமயத்துப் பிள்ளைகளும் தமது சமயஞ்சார்ந்த பாடநூல்களைக் கற்றனர். இந்துசமயப் பிள்ளைகள் இந்து சமயத்துக்கு விதிக்கப் பட்ட நூர்ல்களைக் கற்றார்கள். மூவர் தேவாரம்,தலபுராணக் கதைகள் முதலியன பாடங்களாக விளங்கின. சமயங்களில் நிறையவே இதிகாச, புராணக் கதைகள் உள்ளன. நமது ஆன்றோர்கள் சிந்திக்கத் தெரிந்தவர்கள். மக்களுக்குத் தத்துவங்கள் புரியாது. அதனால் அந்தத் தத்துவங்களைக் கதைகளாக்கி வைத்தனர்.அக் கதைகளை பாடங்களில் புகுத்தி சிறார்களுக்குக் கூறப்பட்டன. கதைகள் பற்றிகனக செந்திநாதன் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

'குழந்தைகளுக்காக எழுதப்படும் கதைகளில் அன்பு, சகோதரத்துவம், ஒற்றுமை, பொறுமை, பிறருக்கு உதவுதல், நாட்டை நேசிக்கும் குணம், பெரியோரை மதிக்கும் பண்பு போன்றவற்றை அழுத்தமாக வற்புறுத்தும் நிகழ்வுகளை உள்ளடக்கி எழுதப்பட வேண்டும்.' என அவர் எழுதிய 'ஈழத்துக் குழந்தைப் பாடல்கள்' என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலை நாட்டுச் சிந்தனையாளர்களான பிளேட்டோ,ரூசோ,அரிஸ்ரோட்டில், பிரட்றிக் புறொபல் பெஸ்ரொலொசி போன்ற பலரும் சிறார்களுக்கு நல்லொழுக்க விழுமியங்களைச் சிறுவயதிலேயே கற்பிக்க வேண்டும். தொட்டில் பழக்கம் சுடுகாடுவரை என்பதைப் பின்னர் புரிந்து கொள்ளலாம் எனக் குறிப்பிடுவர்.

இந்த நூலினை எழுதும் நான் ஆசிரியராகப் பல ஆண்டுகள் ஆரம்ப வகுப்புக்களில் கற்பித்த அனுபவத்தால் இவற்றை எழுதுகிறேன். நான் கற்பித்த மிகப் பின்தங்கிய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக் குறை நிலவியது. ஒரு ஆசிரியர் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வகுப்புக்களில் பாடங்களை நடத்த வேண்டிய சூழ்நிலை இருந்தது. நான் பாடசாலையில் காலையில் ஆரம்ப வகுப்புகளில் பாடம் நடத்துவேன். இடைவேளையின் பின்னர்தான் மேல் வகுப்புகளில் பாடம் நடத்துவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப வகுப்புக்களில் பாடம் நடத்துவது ஒரு கலைதான். முதலில் பிள்ளைகளையும், அவர்கள் வாழும் சூழலையும், அவர்களின் பெற்றோர் பற்றிய விபரங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். பின் அவர்களை எவ்வாறு பாடத்திட்டத்தோடு இணைப்பது என்பதை அறிய வேண்டும். 'கொள்வோன் கொள்வகை அறிந்து'அதற்கேற்ப பாடத்தின் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். மீன் பிடிக் கிராமத்தில் கடலும், மீனும் படகும் என எதைக்கேட்டாலும் சிறார்களுக்குப் புரியும். மலையகத்தில் மலைகளும். தேயிலைத் தோட்டங்களில். கொழுந்து பறித்தல், லயம் போன்ற வற்றைப் பற்றிக் கேட்டால் புரியும்.

மேல் வகுப்புக்களிலும் நான் கற்பித்தேன். தமிழ் மொழி, இலக்கியம், புவியியல் போன்ற பாடங்களை அவ்வாறுதான். கற்பித்தேன். கீழ் வகுப்புக்களில் இயற்கை அளித்துள்ள அருங்கொடைகளான இயற்கைத் தாவரங்களில் இருந்து கற்பித்தற் சாதனங்களை, மாணவர்களைக் கொண்டே தயாரித்துக் கொள்வேன். அதற்கேற்ப கதைகளையும், பாடல்களையும், நாடகங்களையும் எழுதி வகுப்புக்களில் செயற்படுத்துவேன். வகுப்பு கலகலக்கும். கற்றல் செயல்களும் சிறப்பாக இருக்கும். பாட நிறைவில் மதிப் பீடு செய்யும் போது சந்தோசமாக இருக்கும்.

இலக்கிய வகுப்பில் பாடத்துக்கேற்ப கதையினை சுவைபடக் கூறுவேன். மாணவரை ஊக்குவித்து எழுதத் தூண்டுவேன். படித்த பாடத்தை நாடகமாக்கி நடிக்கச் செய்வேன். மாணவர் குதூகலித்து கற்றலில் தங்களை ஈடுபடுத்துவர். செயல்மூலம் கற்று விளங்கிக் கொள்வதால் பாடத்தை இலகுவாகப் புரிந்து கொள்வர். பரீட்சைக்காகப் பாடங்களைக் கற்பிக்கவில்லை. மாணவரின் அறிவு விருத்திக்காகக் கற்பித்தேன்.
மாணர்கள் மனதில் பதியும் வண்ணம் கற்பித்ததால் பரீட்சையிலும் தேறினார்கள். இதே முறையில்தான் எனது ஆசிரியர்களும் சுமார் ஐம்பது-அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் எனக்குக் கற்பித்தார்கள். அதே முறையை அவர்களிடம் இருந்து நான் கற்றுச் செயற்படுத்தினேன். இது எனது அனுபவமாகும்.

பாடப் புத்தகங்களில் உள்ள பாடல்களைக் கொடுப்பேன். விளையாடும் போது அப்பாடலைப் பாடிப் பாடி விளையாடச் செய்வேன். பாடலும் பாடமாகி விடும். பின்னர் பாடலின் பொருள் கற்பிக்கப் படும். இதனால் எனது முயற்சிகள் வெற்றி பெற்றன.

வகுப்பு ரீதியாக கையெழுத்துச் சஞ்சிகைகளை எழுதத் தூண்டி உற்சாகப் படுத்தினேன். சிறார்களின் ஆக்கத்திறனை வெளிக்கொண்டு வர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவமன்றங்கள் பெரிதும் உதவின. சேனையூர் மக்கள் அதிகமானோர் குரல்வளம் உடையவர்களாக விளங்கினர். பாடக்கூடிய சிறார்கள் நிறையவே இருந்தார்கள். பாடல்களை எழுதிக் கொடுப்பது எனது வேலை. பாடுவது அவர்களின் கலைத்திறன். அதனால் சிறுவர் பாடல்களையும், பாடல்களையும், நாடகங்களையும் எழுதத் தொடங்கினேன்.

அண்மையில் ஒருவர் என்னைக் காணவந்தார். வந்ததும் தன்னை அறிமுகம் செய்தார். அவரை நான் மறந்திருந்தேன். அன்று அவர் ஏழு வயதினராக இருந்தார். இன்று அவர் பேரப்பிள்ளைகளுடன் இருக்கிறார். அவர் பெயர் கந்தசாமி. படிக்கும் காலத்தில் சுறுசுறுப்பாக இயங்கியவர்.
"ஐயா! நான் சேனையூர் மகாவித்தியாலயத்தில் 3ம் வகுப்புப் படிக்கும்போது நீங்க எழுதித் தந்த பாடல்களை மறக்கவில்லை. பாடி மகிழ்வேன். எனது பேரப்பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுக்கிறேன். அவர்களும் பாடுகிறார்கள். அதனைப் பாடுகிறேன் கேளுங்கள்". என்றார். பாடினார்.

எனக்கு ஒரு இன்ப அதிர்ச்சி. நான் 1968 – 1970 ஆண்டுகாலப் பகுதிக்குச் சென்று வந்தேன். நினைக்கவே உள்ளம் துள்ளியது. நினைத்துப் பார்க்கிறேன். அப்போது கந்தசாமிக்கு ஏழு வயதிருக்கும். மூன்றாம் வகுப்பில் படித்தார். நன்றகப் பாடுவார் இனிமையான குரல். எப்போது இடைவேளை வரும் என்று மாணவ, மாணவியர் காத்திருப்பார்கள். 'பாடல் வேண்டும் எழுதித்தாங்க' என்று நிற்பார்கள். இந்தப் பாடசாலை எனக்குக் கிடைத்ததற்கு நான் பெற்ற வரம்தான் காரணமா?

சிறுவருக்காக எழுதுவது உண்மையில் ஒரு யோகம்தான். இதைத்தான் பாரதி,
'ஊருக்கு உழைத்திடல் யோகம் - நலம்
ஓங்கிடு மாறு வருந்துதல் யாகம்.
போருக்கு நின்றிடும் போதும் - மனம்
பொங்குதல் இல்லா அமைதி மெய்ஞானம்
எனக் கூறிச் சென்றான்.

இலகுவான சொற்கள், எளிமையான வசன நடை எனது கதைகளில் வரும். இதனைப் பல மாணவர்கள் பின்பற்றினர். பல மாணவர்கள் கவிதை எழுதத் தொடங்கினர். அக்காலத்தில் தினபதி. சிந்தாமணி பத்திரிகையின் ஆசிரியராக அமரர் எஸ்.டி. சிவநாயகம் இருந்தார். அவர் பலரையும் எழுதத் தூண்டும் செயற்திட்டங்களை முன்னெடுத்திருந்தார்.. நானும் எழுதினேன். அத்துடன் எனது மாணவர் பலரையும் எழுதத்தூண்டினேன்.பலர் கவிஞர்களாக வலம் வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்நாட்டவர் சிறுவர் இலக்கியத்தின் முக்கியத்து வத்தையும், அவசியத்தையும் உணர்ந்து செயற் படுத்துகின்றனர். 03 வயதுடையோருக்கு படங்களைக் கொடுத்து வாசிக்கத் தூண்டுகின்றனர். 03 – 05 வயதுவரையான குழந்தைகளுக்கு வயதுக்கேற்ப அழகிய வண்ணப் படங்களும், எழுத்துக்களும் கொண்ட சிறிய நூல்களை ஆக்குகின்றனர். 05 – 12 வயதுக் குழந்தைகளுக்கு படங்களுடன் நிகழ்ச்சிகள் நிறைந்ததாக நூல்களை வடிவமைக்கின்றனர். பிள்ளைகளை வாசிக்கும் பண்பாட்டில் ஈடுபடுத்து கின்றனர்.

நான் ஆங்கிலப் பாடசாலையில் ஆறாம் வகுப்புப் படிக்கும் போது பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் ஆங்கில மொழிக்காக **'Alice in wonderland '** என்ற நூல் பரிசாகக் கிடைத்தது. அதில் "படங்கள் இல்லாமல் புத்தகமா"? என்ற ஒரு வசனம் வரும்.

இதனைப் பின்பற்றி நானும் பல செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்தினேன். நான் படிக்கும் காலத்தில் பேச்சு என்றொரு பாடம் இருந்தது. பிள்ளைகள் உரையாடியும்,பலவற்றைப் பற்றிப் பேசியும் மொழியறிவை விருத்தி செய்வார்கள். நான் ஆசிரியராக வந்தபின் பிள்ளைகளிடம் உண்மைப் பொருளைக் கொடுத்து அதைப் பற்றி கூறச் செய்வேன். தேடி எடுத்துவரச் செய்வேன். பிள்ளைகள் பாடியாடிச் செயற்படுவார்கள். சிறுவர்கள் வீர தீரச் செயல்களை விரும்புவார்கள். நகைச் சுவைக் கதைகளையும் விரும்புவார்கள். அதற்கேற்ற கதைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இச்செயற்பாடுகள் எனது சிறுவர் இலக்கிய முயற்சிக்கு வேர்களாயின.

பேசுவதைப் பின்னர் எழுதுவார்கள். சிறுசிறு வசனங்களை ஆக்கும் முயற்சி தொடங்கும். வசனங்கள் விரிந்து பந்தியாகும். உரைநடை நடக்கும் அதனூடாகக் கதைகள் ஊடறுத்துச் சுழியோடும்.

கதைகள் அனுபவமாக மாறிவிடும். மாணவர் மத்தியில் புத்தகப் பழக்கத்தைப் புகுத்தி விட்டால் அறிவு வளரும்.வாசிப்பு என்பது ஒரு யோகமாகும். வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். காற்றுக்கு திசை இல்லை. அறிவுக்குத் தேசம் இல்லை என்பது அறிஞர் கருத்தாகும்.கதைகளை விருப்புடன் கேட்கச் செய்தல் வேண்டும். அதற்கான சூழலை உருவாக்க வேண்டும்.

கேட்போரை வசீகரிக்கும் கதைகளைத் தேர்ந்து கூறுதல் நலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமான இடங்களில் குரலை ஏற்றியும் இறக்கியும் கூறுதல் பயன் தரும். கேட்போரின் வயது, அனுபவம் போன்றவற்றைநக் கருத்தில் கொண்டு கதை கூறுதல் நலம். கதை கேட்போர், கதை கூறுகின்றவரின் பின்னால் தொடர்ந்து வரவேண்டும். கதை கூறுவதில் நமது பாட்டிமார் பெரும் கில்லாடிகளாகத் திகழ்கிறார்கள். அதற்கான காரணம் அவர்களின் வாழ்வியலும் அனுபவமுமாகும்.

அவர்கள் அன்று தொடக்கிவைத்த கதை சொல்லல் இன்று நவீனத்துவத்தை நோக்கி நகர்கிறது. நாடோடி இலக்கியமாக இருந்த கதைகள் இன்று எழுத்துருப் பெற்று நூர்ல்களாக வெளிவருகின்றன. பாட்டிமாருக்குப் பதிலாக பல எழுத்தாளர்கள் கதை எழுதும் நிலைக்கு வந்து விட்டனர். அப்படியான கதைகளைத் திரட்டித் தொகுத்துள்ளனர். அவற்றை 'பாட்டி சொன்ன கதைகள்','கிராமியக் கதைகள்', 'முல்லாக் கதைகள்', 'ஈசாப் கதைகள்', 'பீர்பால் கதைகள்', 'அக்பர் கதைகள்', 'பரமார்த்த குரு கதை', 'பஞ்சதந்திரக் கதை', 'சந்திரமதி கதை', 'விக்கிரமாதித்தன் வேதாளம் சொன்ன கதை', 'மரியாதை இராமன் கதை', 'ஆன்மீகக் கதைகள்', 'ஸ்ரீஇராமக்கிருஸ்ணர் கதை', 'அப்பாஜி கதை' 'ஜென் கதை' 'சூபி ஞானிக் கதை', 'விவேகானந்தர் கதை', "நீதிக் கதைகள்', 'இராமாயணக் கதைகள்'. 'பாரதக் கதைகள்'. 'திருக்குறள் கதைகள்' என விரிந்து செல்வதைக் காணலாம்.

இவற்றைவிடப் பல்வேறு கதைகள் சிறுவர்களுக்காக தனியார். எழுதி வெளியிட்டு வருகின்றனர். பல நிறுவனங்களும் வெளியிடுகின்றன.

கதைகளை வயது, அனுபவம், மொழியறிவு போன்றவற்றைக் கருத்தில் கொண்டு எழுதுகின்றனர். பாடசாலைப் பாடத்திட்டங்களுக்கு அமைவாக, வகுப்புக்களுக்கு ஏற்றவாறு எழுதுப்படுகின்றன. மூன்றாம் வகுப்பில் கல்வி கற்கும் சிறார்களுக்கு அவர்களது வயது, மொழியறிவுக்கு ஏற்ற தரத்திற்கு அமைவாக எழுதப் படுகின்றன. ஆனால் இன்று நவீன தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக கார்டூன், ஒளிப்பதிவுப் படங்கள், சினிமா, சின்னத்திரைப் படங்கள் போன்றனவற்றால் சிறார்கள் நூல்களை மறந்து வாழ்கின்றனர். இந்த நிலையை மாற்ற வழிகாண வேண்டும்.

## இலங்கையில் தமிழ் மொழித் தினம்

இலங்கையில் தமிழ் மொழியின் விருத்திக்காக 1967 – 68 களில் 'தமிழ் மொழித் தினம்'தொடங்கப் பட்டது. தமிழ் மொழியின் செம்மைக்காக நல்லுள்ளம் படைத்த இலக்ஸ்மண ஐயர் போன்ற பெருமக்களால் தொடங்கி வைக்கப் பட்ட பயனுள்ள நிகழ்ச்சித் திட்டமாகும். இத்திட்டத்தை எந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் தலைவர்களும் முன்வைக்கவில்லை. இத்திட்டத்தினால் தமிழ் பேசும் மக்களிடை மொழியறிவு பரவலாக்கப் படும் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஒவ்வொரு பாடசாலையிலும், வகுப்பு ரீதியாக பாடல், கதை, பேச்சு, நாடகம், பிரதியாக்கம் என நடத்தவேண்டும். பின்னர் பாடசாலை ரீதியாக நடத்தி வலய மட்டப் போட்டிகளை நடத்திச் சான்றிதழ்கள் வழங்க வேண்டும் என்று ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டன.

தமிழ் மொழித் தினத்தைக் கொண்டாடும் நிகழ்வு தொடங்கப் பட்ட பின்னர் மாணவரிடையே பேச்சு, எழுத்து, பா ஓதுதல், கதைசொல்லுதல், கதை எழுதுதல், பாடல்களைப் பாடுதல். இயற்றுதல்,. நாடகம் எழுதுதல், நாடகம் நடித்தல் என போட்டிகள் நடத்தப் படுகின்றன. பாவோதல் நல்லதொரு நிகழ்ச்சி. சிறார்கள் பாடலைப் பிரித்து பொருளுணர்ந்து பாடுவதற்காகச் சேர்க்கப் பட்ட நிகழ்ச்சியாகும். இது சிறுவர் பாடல்களை மட்டுமல்ல. இலக்கியங்களை இரசித்துப் படித்துச் சுவைப்பதற்கும் முதற்கட்டமாக விளங்குகிறது. மாணவர்கள் யாவற்றிலும் பங்கு பற்றினார்கள். பல மாணவர்கள் தாங்களாகவே நாடகங்களை எழுதி நடித்து மேடையேற்றினார்கள்.

பரிசுகளும், பாராட்டுதல்களும் வழங்கப்படுகின்றன. இப்போட்டிகள் வகுப்பு ரீதியாக நடத்தப் பட்டதால் ஓரளவு வயது வித்தியாசங்களே இருந்தன. பாடசாலை மட்டம். வலய மட்டம். மாவட்ட மட்டம். தேசிய மட்டம் எனப் போட்டிகள் நடக்கின்றன. வலயமட்டத்தில் வெற்றி பெற்ற எழுத்தாக்க நிகழ்ச்சி அவ்வவ் வலயங்களால் வெளியிடப்படும் தமிழ்மொழித் தின விழா மலரிலும் இடம்பெறுகின்றன.

அதேபோல் மாகாண மட்டத்தில் வெற்றி பெறும் நிகழ்வுகள் மாகாண தமிழ் மொழித்தின விழா மலரிலே வெளியிடப்படுவது கண்கூடு. 1994, 1995, 1996 ஆண்டுகளில் திரு.ச.அருளானந்தம் வடக்கு கிழக்கு மாகாணத்தின் தமிழ் மொழித்தினப் போட்டிகளை நடாத்தி 'பார்த்தேன்', 'சுவைத்தேன்', 'மலைத்தேன்' என்ற பெயர்களில் கனதியான தமிழ் மொழித்தின மலர்களை வெளியிட்டார். மாணவர்களது கதை, கட்டுரை, போன்ற அரிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. 'மலைத்தேன்' மலர் முழுகக முழுக்க மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்டுள்ளது. மாகாணத்தின் ஒவ்வொரு பாடசாலைக்கும் இம்மலர்கள் கொடுபட்டன.

இதனூடாக பல மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. சிறார்கள் மத்தியில் தமிழ் மொழியின் மேல் ஒரு எழுச்சியைத் தூண்டும் நோக்குடன் இந்த நல்லெண்ண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சி தொடங்கப் பட்டது. அத்துடன் மாணவர் களுக்கான இந்நிகழ்ச்சித் திட்டத்தினால் ஆசிரியர்கள் தூண்டப் பட்டனர். பல ஆசிரியர்கள் கட்டுரைகளை எழுதித் தம் மாணவரை நெறிப்படுத்தினர். அவ்வாறே சிலர் கதைகளையும். பாடல்களையும், நாடகங்களையும் எழுதிப் பாடசாலைச் சிறார்களை வழிப்படுத்தினர். தமிழ் மொழியின் ஆற்றலை வளர்த்தெடுக்கும் நோக்குடன் பேச்சுத்திறனுக்காக தமிழ்மணி அகளங்கன் 'செந்தமிழும் நாப்பழக்கம்' என்ற கட்டுரை நூலை எழுதி வெளியிட்டுள்ளார். அந்நூல் இன்று மூன்றாவது பதிப்பையும் பெற்று வாழ்கிறது.

'புதிய தும்புத்தடி நன்றாகக் கூட்டும்'( **New broom sweeps well)** என்பதுபோல் தொடக்கத்தில் நன்றாக இயங்கி வந்த இத்திட்டம் காலப்போக்கில் தேய்ந்து 'கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனதுபோல்' ஆகிவிட்டது. அரச அலுவலர்கள் கடமைக்காக நடத்தும் ஒரு நிகழ்வாக மாறிவிட்டது. தமிழ் மொழியின் செம்மைக்காக நல்லுள்ளம் படைத்த இலக்ஸ்மண ஐயர் போன்ற பெருமக்களால் தொடங்கி வைக்கப் பட்ட பயனுள்ள நிகழ்வு, சிறார்களுக்குப் பயனற்றதாக மாறிக் கொண்டு செல்கிறது.

தமிழ் மொழித்தின நிகழ்வில் கலைநிகழ்வுகள் முக்கிய இடம் வகிப்பதை யாவரும் உணர்வர். பாடசாலையின்தரத்தினை இவ்வாறான நிகழ்வுகள் தீர்மானிப்பதாகப் பலர் நினைக்கிறார்கள். கலை நிகழ்ச்சிகளில் தமது பாடசாலைக்கு இடம் கிடையாத போது மீள்பரிசீலனைக்காக மனுப் பண்ணுகிறார்கள். அதிபர் முதல் ஆசிரியர். மாணவர்கள், பெற்றோர்கள் எனக் குரல் எழுப்புகின்றனர். ஆனால் தமிழ் மொழயின் ஆக்கத்திறன் பற்றிக் குரல் எழுப்புவோர் யாருமில்லை.

கதை, கட்டுரை, கவிதை. நாடகம். பாடல் போன்ற எழுதும் போட்டிகள் பற்றி அக்கரை காட்டுவோர் எவரும் இல்லை. ஆக்கத்திறன் போட்டி நிகழ்ச்சிகளில் கரிசனை காட்டுவதில் பின்னிற்கின்றனர். கதை, கட்டுரை, கவிதை. நாடகம். பாடல் போன்ற எழுத்து நிகழ்ச்சிகளில் நமது சிறார்களின் நிலையை எண்ணிப் பார்க்க முயல்வதில்லை.

மாணவர்கள் மத்தியில் தமிழ் மொழியின் தரம் எப்படி உள்ளது? நாம் எண்ணிப் பார்த்தது உண்டா ? இன்று தமிழ் மொழித்தினத்தின் நோக்கம் மெல்ல 'மெல்லத் தமிழினிச் சாகும்' என்ற நிலைக்குத் தள்ளப் பட்டுக் கொண்டிருக்கிறது. எந்த நோக்கத்துக்காக அன்று நமது சான்றோர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்க்கதரிசனத்தோடு தமிழ் மொழித்தினத்தைத் தோற்றுவித்தனரோ, அந்த நோக்கம் நிறைவேற நாமெல்லோரும் உழைக்கின்றோமா?

அப்படி நிறைவேற வேண்டுமானால் தமிழ் மொழித்தினத்தை மனதார ஏற்றுக் கொண்டு நடைமுறைப் படுத்த வேண்டும். சுற்று நிருபங்களைப் புதுப்பித்து பாடசாலைகளில் வகுப்பு ரீதியாகவும். பாடசாலை மட்டத்திலும், வலய. மாகாண மட்டத்திலும் பங்குபற்றச் செய்யும் வகையை மேற்கொள்ளவேண்டும். சுறப்பாகக் கூறினால் அனைத்து மாணவர்களும் பங்கு பற்றச் செய்ய வேண்டும்.

அப்படிச் செய்யாது விட்டால்'அரசனை நம்பி புருசனைக் கைவிட்ட நிலை' தோன்றிவிடும். உரிமைகள் வேண்டும் என்று போராடும் மக்கள் உள்ள உரிமைகளைக் காப்பற்றப் பழகிக் கொள்ள வேண்டும். மண்ணும்,மொழியும் நமது விழிகள் என்று தொடங்கிய போராட்டம் எப்படிச் சென்றுள்ளது என்று சிந்திக்க வேண்டும். இருப்பதைத் தக்க வைக்க நாம் என்ன செய்கிறோம்?. நமது அரசியல் தலைமைகளும் சிறுபிள்ளைகளாக மாறி விளையாடுகிறார்கள்.

ஒரு குழந்தை ஒரு பொருளைக் கண்டதும் தனக்கு வேண்டும் என்று அடம் பிடிக்கும். கிடைத்ததும் அதனை வீசிவிட்டு வேறு பொருளுக்காகச் சண்டையிடும். இதேநிலையில் நமது தமிழ் மக்கள் அலைமோதுகின்றனர். இருப்பதைத் தக்க வைத்துப் பின் தேவையானதைப் பெறப் போராடலாம்.இதனை யாரும் மனங்கொள்வதாக இல்லை. நல்லுள்ளம் படைத்தோர் இதனைக் கவனத்தில் கொண்டு தமிழ் மொழிக்கும். நமது சிறார்களுக்கும் மீண்டும் எழுச்சியை ஏற்படுத்த வேண்டும்.

வரலாறு மாற்றப் படுகிறது என்று பேசிக் கொண்டிருந்தால் விடிவு வராது. இருப்பதைத் தக்க வைப்பதில் கவனமிருக்க வேண்டும். செயற்திறனும் எழுச்சியும் கொண்டு பணிபுரிய வேண்டும். அப்படிச் செய்யும் போது மற்றவை சீராகிவிடும். நமது சிறார்கள் எழுச்சி கொண்டு தமிழை வளர்ப்பார்கள். சிறுவர் இலக்கியமும் வளர்ச்சி காணும். இந்த உலகில் பிறந்தவர்கள் நிரந்தரமாகத் தங்கி விடமுடியாது. உயிருடன் இருக்கும் வரை பிறந்த மண்ணுக்கும், மொழிக்கும். நமது சமூகத்துக்கும் நல்லனவற்றைச் செய்து வாழ்க்கையை வாழ்ந்து பார்க்க வேண்டும்.

பிறந்தவர்களில் எத்தனை பேர்களை நினைவில் உலகம் நினைத்துப் பார்க்கிறது. ஆயிரம் மக்களுள் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே மக்களால் போற்றப் படுகிறார்கள். ஏனையோர் மறக்கப் படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடத்திட்டமும் பாடநூல்களும்

இலங்கை அரசு பாடத்திட்டங்களை அமைத்து, அதற்கேற்ப பாடநூல்களையும் எழுதிப் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்குகிறது. பாடநூல்கள் வகுப்புகளுக்கு ஏற்ப எழுதப்படுகிறது. வயது, அறிவு அனுபவம் ஆகியவற்றுக்கு ஏற்பவே எழுதி அச்சிட்டு வழங்கப் படுகின்றன. வகுப்புக்களுக்கு ஏற்ப வண்ணப் படங்களும் கவர்ச்சியாக உள்ளன. இந்நூல்கள் யாவும் சிறுவர் இலக்கியங்களுக்குள் அடக்கலாம். வகுப்புக்களுக்கு ஏற்ப விடயதானங்களும் எளிமைப் படுத்தி எழுதப்பட்டுள்ளன.

சிறுவர் இலக்கியங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு ஏற்பப் பாடநூல்கள் அமைந்துள்ளன. பாடநூல்களைக் கட்டாயம் கற்க வேண்டும் என்ற நிலைப்பாடு மாணவரைப் பாடநூல்களில் இருந்தும் தள்ளி வைத்துள்ளன. அப்பாட நூல்களை சிறந்த கற்பித்தல் முறைகளைக் கையாண்டு கற்பிப்பது ஆசிரியர்களது தலையாய கடமையாகின்றது. பாடநூல்களில் பாடல்கள். கதைகள். கட்டுரைகள், நாடகங்கள், விடுகதைகள் என நிறையவே விடயதானங்கள் உள்ளன.

பாடநூல்கள் வகுப்பு, வயது, அறிவு, அனுபவம், ஆகியவற்றைக் கருத்தில் கொண்டே எழுதப் பெறுகின்றன. சிறுவர் இலக்கியங்களாக இவற்றையும் கொள்ளலாம். இவற்றை அடிப்படையாகக் கொண்டே தமிழ்மொழித் தினத்துக்கான சுற்று நிருபங்கள் வகுக்கப்படுகின்றன. சிறார்களின் அறிவு, திறன். மனப்பாங்கு ஆகியவற்றை வளர்த்தெடுக்கும் முயற்சியாக இது அமைந்துள்ளது.

கதைகளை ஒலிவடிவில் கேட்பதால் கேட்போரின் கற்பனைத் திறன் விருத்தியுறும். திரைப்படங்களாகத் திரையில் காணும்போது கற்பனைக்கு இடமில்லை. பாட்டிமார் கதை கூறும்போது கதையோடு ஒன்றி கற்பனையில் கேட்போர் மிதப்பார்கள். கதையில் வரும் கதாமாந்தர் திரையில் பார்பதைவிடவும் மிக அழகாகக் கற்பனையில் தெரிவார்கள். கதைப் புலங்களும் மிக விசித்திரமாக இருக்கும். வாசிப்பதால் மூளைக்கு வேலை கிடைக்கிறது. கற்பனைத் தேர் விரைந்தோட இடமளிக்கிறது.

## ஈழத்தில் சிறுவர் கதைகள்

ஈழத்திலும் சிறுவர் கதைகளின் முன்னோடிகள் தாய்மார்களும், பாட்டிமார்களுமே. தங்களுக்குத் தெரிந்த எந்தக் கதைகளானாலும், அந்தக் கதைகளைத் தங்கள் சிறார்களுக்கு ஏற்றவாறு நீட்டியும், குறுக்கியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவைபடக் கூறுந்திறமை கொண்டவர்கள் அவர்களே. சந்தர்ப்பம், சூழ்நிலை போன்றவற்றுக்கு ஏற்பக் கதைகளை இயற்றியும் கூறவல்லவர்களாகத் தாய்மார்களும், பாட்டிமார்களும் திகழ்ந்தனர். அதனாலேயே சிறுவர் கதைகள் இன்றுவரை முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன.

சிறார்கள் கதை கேட்பதிலும்,அதற்கேற்பத் தங்களைப் பாவனை செய்வதிலும் வல்லவர்கள். அதனாலேயே கதைகள் கிராமிய இலக்கியமாக இன்றும் உலா வருகின்றன. நான் சிறுவனாக இருந்தபோது எனது பாட்டி கதை கூறியது நினைவில் உள்ளது. இரவு வேளையில் சிறுவராகிய எங்களுக்குக் கதைகளைக் கூறுவார். ஆமைக்குஞ்சு ராசன் கதை, இராமர் கதை, பாண்டவர் கதை, அரிச்சந்திரன் கதை, தேசிங்கு ராசன் கதை, புராணக் கதை, தேவலோகக் கதை போன்றவற்றைக் கூறுவார். எனது அக்கா தில்லையம்மா கதை கூறுவதில் அவருக்கு நிகர் அவரேதான். கதை கேட்பதற்காகப் பக்கத்து வீட்டுச் சிறுவர்களும் வருவார்கள். அவற்றைக் கேட்டவாறே உறங்குவோம். இவ்வாறான காட்சிகளைக் கிராமங்களில் அவதானிக்கலாம்.

சிறுவர் கதைகளின் வளர்ச்சி தமிழகத்தோடு ஒப்பிட முடியாது. தமிழகத்தில் பலவிதமான உந்தல்கள் சிறுவர்கதை வளர்ச்சிக்கு உதவியதை அறியலாம். எனினும் ஈழத்தில் சில காத்திரமான பங்களிப்புகள் அவ்வப்போது நடந்தேறின.

சிறுவர் இலக்கியத்தில் உரைநடைத் துறையின் முன்னோடியாக நல்லைநகர் நாவலரே விளங்குகிறார். அவரின் பின்னரே மறைமலையடிகள், கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை, பாரதியார் முதலியோர் பிரகாசிக்கின்றனர். அத்துடன் சுத்தானந்த பாரதி, நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை, பெ.தூரன். அழ.வள்ளியப்பா போன்றோர் சிறுவருக்கான கதைகளை எழுதினர்.

அழகுசுந்தரம் என்ற வண.பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி 'இராமன் கதை','பாண்டவர் கதை' என்ற நூல்களை இலகு தமிழில் எழுதினார். வடஇலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம் மொழியறிவு வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு 'இராஜாதேசிங்கு','தமயந்தி','சாவித்திரி','குசேலர் சரித்திரம்', போன்ற கதை நூல்களைச் சிறுவருக்காக வெளியிட்டது.

கவிஞர் தில்லைச் சிவன் சிறுவர் பாடல்களுடன் சிறுவர் கதைகளையும் எழுதியுள்ளார். 'சிறுவர் கதைப் பெட்டகம்' என்ற சிறுவர் கதை நூலையும் எழுதியுள்ளார். எம்.ஏ.ரஹ்மான், உலகப் பெரியார்களின் இளமைக்காலத்தின் சுவையான நிகழ்ச்சிகளைச் சிறுவர்கள் அறிவதற்காக 'இளமைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவத்திலே' எனும் நூலை எழுதினார். மேல்நாட்டுக் கதைகளைத் தமிழில் மொழிமாற்றம் செய்து பல நூல்களை பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை எழுதியுள்ளார். 'நீரரமங்கை','பூஞ்சோலை', போன்ற நூல்களை எழுதினார். சோ.நடராசன் 'விநோதனின் சாகசம்' என்ற கதை நூலையும் எழுதினார்.

குமாரசாமிப் புலவர் சிறுவருக்காக 'கீதோபதேசம்' என்ற நூலை எழுதினார். அத்துடன் இளைஞர்களுக்காக 'சிசுபாலசரிதம்' என்ற நூலையும் எழுதினார். பஞ்சாட்சர சர்மா 'சிறுவர் கதைகள்' என்ற நூலை எழுதினார்.1962ல் உடுவை தில்லை நடராசா 'மந்திரக் கண்ணாடி' என்ற சிறுவர் நூலை எழுதி வெளியிட்டார். 'நீரர மகளிர்' என்ற சிறுவர் நூலையும் எழுதி வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியின் கட்டிடத்துக்கான நிதியைத் தேடும் முயற்சிக்காக உதவினார். செ.யோகநாதனின் மகன் யோ.சத்தியன் 'ஆயிரம் கொக்குகள்','அமுதனின் உலகம்' போன்ற சிறுவர் கதை நூல்களை எழுதி வெளியிட்டார்

'அமுதனின் உலகம்' என்ற நூல் ரஷ்ய மொழியில் மொழிமாற்றம் செய்து வெளியிடப் பட்டது. செ.யோகநாதன்பத்துக்கு மேற்பட்டசிறுவர் நூல்களை எழுதியுள்ளார். 'குழந்தைக் கலைக்களஞ்சியம்' அழ.வள்ளியப்பாவின் முன்னுரையோடு வெளிவந்தது. 'சூரியனைத் தேடி', 'அதிசயக் கதைகள்','கண்ணன் என் கண்ணன்','தெரியுமா உங்களுக்கு' ஆகிய நூல்கள் நர்மதா வெளியீடாக வெளிவந்தன. அத்துடன் 'தங்கத் தாமரை','அன்பான சிறுவர்களே','வடிவில்லாத வாத்துக் குஞ்சு',ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

அறிவியல் நூல்களை மகேசன் எழுதி வெளியிட்டுள்ளார். 1986ல் செங்கை ஆழியான் க.குணராசா 'சூரியனின் கதை' என்ற அறிவியல் நூலைச் சிறுவர்களுக்காக எழுதி வெளியிட்டுள்ளார்.

சுதாராஜ் தொழிலால் ஒரு பொறியியலாளர். தரமான இலக்கியவாதி. சிறுகதை, நாவல் என எழுதினாலும் சிறுவர்களுக்காக ஏராளமான கதைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார். அவர் எழுதிய ஒரு கதை அணிலைப்பற்றியதாக உள்ளது. ஆனந்தவிகடனில் வெளியானது. அக்கதைக்காக அவருக்குப் பரிசும் கிடைத்தது.

வானொலி மாமாவாக வலம்வந்தவர்தான் அமரர் வ.இராசையா. அவர் சிறந்த கவிஞரும் சிறுவர் இலக்கிய ஆர்வலருமாவார். அவர் இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலியில் சேவையாற்றும் போது வானொலி அண்ணாவாக, வானொலி மாமாவாக அருமையாகக் கதை , கவிதை, பாடல், நாடகம் போன்ற துறைகளில் நிகழ்ச்சிகளைத் தயாரித்து சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு உதவினார். இச்செயற்பாடு சிறுவர் மத்தியில் புதியதொரு திருப்பு முனையாக அமைந்தது.

அவரின்'சண்டியன் ஓநாய்','சந்தணக் கிண்ணம்','புதிய பூக்கள்' ஆகியன சிறந்த சிறுவர் இலக்கியப் படைப்புகளாகும். அத்துடன் அவர் சிறுவர் இலக்கியங்களைப் படித்து நடுநிலை நின்று திறனாய்வுகளை எழுதி உற்சாகப் படுத்துவார்.

பேராசிரியர் சபா.ஜெயராசா சிறுவர் இலக்கியத்தில் ஈடுபாடுடையவர். அவரது 'சிறாருக்கான அறிவியற் கதைகள்' என்ற நூல் இலக்கியன் வெளியீடாக வெளிவந்துள்ளது. 'கிராமத்துக் கதைகள்' என்ற நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார். பேராசிரியர் சபா.ஜெயராசா கல்வியியல் தொடர்பான பல நூல்களை எழுதியுள்ளார். தாய்மொழிக் கல்வியும் கற்பிக்கும் கலையும், குழந்தை உளவியலும் கல்வியும்,'கற்றல் உளவியல்' போன்ற நூல்களை எழுதியுள்ளார். அத்துடன் 'பாலர் கல்விப் பாடல்' என்ற நூலையும் எழுதியுள்ளார்.

எல்லா நேரத்திலும் எல்லாக் கவிஞர்களது பாடல்களும் எல்லாருக்கும் விருப்பத்தைக் கொடுக்கும் என்றில்லை. சிலருக்குச் சிலரின் பாடல்கள் பிடிக்கும். பலருக்கு சிலநேரங்களில் சில பாடல்கள் பிடிக்கும். ஆனால் அனைவரையும் திருப்திப் படுத்த முடியாது. இதனை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அவரவர் மனநிலைக்கேற்ப அவர்களின் சிந்தனையும் இரசனையும் இருக்கும். எண்ணங்களும் அவ்வாறே அமைந்திருக்கும். ஒருவருக்குச் சுவையான பாடல் அல்லது கதை இன்னொருவருக்குச் சுவையற்றதாக அமையலாம். இது அவரவர் மனதைப் பொறுத்தது.

தமிழ்மணி அகளங்கன் சிறுவர்களுக்கு அழகான கதைகளை எழுதி வெளியிட்டுள்ளார். அவர் இன்று நம்மிடையே இல்லை. அவரின் இழப்பு இலக்கிய உலகினுக்கு பேரிழப்பாகும். அவரது கதைகளில் இயற்கை வருணணைகள் நிமிர்ந்து நடைபோடும். மண்வாசனை படிந்து நீச்சலடிக்கும். எதுகை மோனை துள்ளியாடும். அகளங்கன் ஒரு கவிஞர். அதனால் கவித்துவம் நிறைந்த பாடல்களைச் சிறார்களுக்காக எழுதுகிறார்.அவர் எழுதிய காடு இதற்கு உதாரணமாகும்.

கலாநிதி ஓ.கே.குணநாதன் சிறுவர் இலக்கியங்களைப் படைத்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது பல படைப்புகளுக்குப் பல்வேறு விருதுகள் கிடைத்துள்ளன. அவரது 'வீர ஆனந்தன்' சிறந்த சிறுவர் நாவலாகும். இயற்கையை அவர் நேசிப்பவர். அவரது சிறுவர் கதைகளில் இவற்றைக் காணலாம். குணநாதன் எழுதிய 'பறக்கும் ஆமை' சிறந்த சிறுவர் இலக்கியமாகும். அந்நூல் 2011ல் அரச இலக்கிய விழாவில் சிறந்த நூலுக்கான விருதினையும், சிறந்த ஓவியத்துக்கான விருதினையும் பெற்றது.

கலாபூஷணம் மாஸ்டர் சிவலிங்கம் சிறுவர்களுக்காக கதை சொல்வதையே தொண்டாகக் கொண்டவர். அதனால் மக்களிடையே செல்வாக்குப் பெற்றவர். சிந்தாமணி பத்திரிகையில் பல படைப்புகளை எழுதி பெயர் பெற்றவர். வானொலியிலும், தொலைக் காட்சியிலும், பாடசாலைகளிலும் கதை, பாடல் போன்றவற்றைச் சொல்லிவந்தவர். அவர் கதை சொல்லும் முறையே தனித்துவமானது. கேட்போர் நகைச்சுவையோடு அதனை அனுபவிப்பர். சில சமயங்களில் பயங்கரக் கதைகளைச் சொல்வார். கேட்போர் பயப்படுமாறு கூறுவார். சிறுவர்கள் அலறிவிடுவர். இவ்வாறான கதைகளைச் சிறாரில் பலர் கேட்கப் பயந்துவிடுவார்கள். எனினும் அவரின் கதை சொல்லலில் ஒரு சிறப்பு உள்ளது.சிறுவர் கதை நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

செங்கை ஆழியான் குணராசா ஈழத்தில் பிரபலமான எழுத்தாளர். அவர் அரச அதிபராகவும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பதிவாளராகவும் சேவைசெய்தவர். பாடசாலை மாணவர்களுக்காகப் பல பாட நூல்களை எழுதியுள்ளார்.சிறப்பாக புவியியல் பாடத்தில் புலமை மிக்கவர். புவியியல் நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவரது துணைவியார் திருமதி. கமலா குணராசா கணவரைப் போன்றே புவியியல்,வரலாறு,தமிழ் மொழிக் கட்டுரை நூல்களையும் எழுதியுள்ளார். செங்கையாழியான் ஈழத்தில் நாவல்களையும். சிறுகதைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார். 1986ல் செங்கை ஆழியான் க.குணராசா 'சூரியனின் கதை' என்ற அறிவியல் நூலைச் சிறுவர்களுக்காக எழுதி வெளியிட்டுள்ளார்.

தா.பி.சுப்பிரமணியம் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். கண்ணன் பத்திரிகையில் சிறுவருக்காகக் கதைகள் எழுதியவர். திருகோணமலையில் வ.அ. இராசரத்தினம் அவர்களுக்கு இணையாகச் சிறுகதை எழுதுவதில் வல்லவர். அவர் இன்று எம்மிடையே இல்லை.

திருமதி. ஜெனிரா தௌபீக் அமான் ஆசிரியையாகக் கடமையாற்றுகிறார். திருகோணமலை கிண்ணியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சிறுகதை, கவிதை. கட்டுரை என எழுதிவருபவர். இதுவரை ஏறத்தாழ எட்டு நூல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள் ஆறு சிறுவர் இலக்கியங்களாகும். அவர் எழுதிய 'மிதுஹாவின் நந்தவனம்' சிறந்த சிறுவர் கதைகளை உள்ளடக்கிய நூலாகும். 'பாலர் பாடல்', 'சின்னக் குயில் பாட்டு', 'முப்லிஹாவின் சிறுவர் கானங்கள்', 'மழலையர் மாருதம்' என்ற நான்கும் சிறுவர்களுக்கான பாடல்களைக் கொண்ட நூல்களாகும். 'கட்டுரை எழுதுவோம்' என்பது சிறுவர் கட்டுரை நூலாகும்.

சித்தி அமரசிங்கம் மனதால் ஒரு குழந்தையே. தனது மனைவியின் பெயரைத் தன் பெயரின் முன் சேர்த்து 'சித்தி அமரசிங்கம்' என்று பயன்படுத்துபவர். எந்த எழுத்தாளனைச் சந்தித்தாலும் அவரது நூலை வாங்கி விற்றுக் கொடுத்து உதவும் உள்ளங் கொண்டவர். 'ஈழத்து இலக்கியச் சோலை' என்ற வெளியீட்டகத்தை நிறுவி பலருடைய நூல்களை வெளிக் கொண்டு வந்தவர். சிறந்த நடிகனாகவும் நாடக எழுத்தாளராகவும் திகழ்ந்தவர். குங்குமம் என்ற சஞ்சிகையையும் நடத்தினார். அவரது 'இராவண தரிசனம்' சிறந்த நாடக நூலாகும். சிறுவர்களுக்கான பாடல்களை எழுதி வெளியிட்டுள்ளார் 'அச்சாக் குட்டி' என்ற அவரது சிறுவர் பாடல் நூலில் சிறுவர்களுக்கு ஏற்ற நல்ல பாடல்கள் உள்ளன.

செல்வி அருள்சுலக்ஷிகா ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரியின் மாணவி. தனது பன்னிரண்டாவது வயதில் 'வீரபாபுவின் குதிரை' என்ற சிறுவர் கதையினை எழுதி வெளிட்டார். அதனைத் தொடர்ந்து 'இராணியாக மாறிய பாம்பு' என்ற சிறுவர் நெடுங்கதையை எழுதி வெளியிட்டார். இந்த இரண்டு நூல்களும் சிறுவர் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றன.

மு.தேவதர்சினி திருகோணமலை நகரினைப் பிறப்பிடமாகக் கொண்டவர். முன்பள்ளி ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். முன்பள்ளிக் கல்வியில் டிப்ளோமாப் பாடநெறியினைப் பூர்த்தி செய்தவர். பல சிறுவர்கதைகளை எழுதினாலும் அவற்றுள் சிறந்த கதைகளைத் தேர்ந்தெடுத்து நூலாக வெளியிட்டுள்ளார்.

திருமதி இரா. பத்மினி முன்பள்ளி ஆசிரியராகச் சேவைசெய்கிறார். முன்பள்ளிக் கல்வியில் டிப்ளோமாப் பாடநெறியினை நிறைவு செய்தவர். சிறுவர்களுக்கான கதைகளை அழகாகச் சொல்பவர். திருகோணமலை நித்தியபுரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். தான் எழுதிய சிறுவர் கதைகளில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து 'ஆருதியின் ஆசை' என்ற சிறுவர் கதைநூலாக வெளியிட்டுள்ளார்.
திருமதி. நாகூர் உம்மா,திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். முன்பள்ளி ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். முன்பள்ளிக் கல்வியில் டிப்ளோமாப் பாடநெறியினை நிறைவு செய்தவர். சிறுவர்களுக்கான கதைகளை அழகாகச் சொல்பவர். அவர் எழுதிய சிறுவர் கதைகளில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து நூலாக வெளியிட்டுள்ளார்.

திருமதி. சிந்தியா ஜெகன்.முன்பள்ளி ஆசிரியராகப் பணிபுரிகிறார். முன்பள்ளிக் கல்வியில் டிப்ளோமாப் பாடநெறியினை நிறைவு செய்தவர். சிறுவர்களுக்கான கதைகளை அழகாகச் சொல்பவர். திருகோணமலையில் வாழ்கிறார். தான் எழுதிய சிறுவர் கதைகளில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து 'அழகின் சிரிப்பு' எனும் நூலாக வெளியிட்டுள்ளார்.

எஸ். எதிர்மன்னசிங்கம். வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டுத் திணைக்களத்தில் கலாசாரப் பணிப்பாளராகச் சேவைசெய்து ஓய்வு பெற்றவர். சிறந்த கூத்துக் கலைஞராகவும், பண்பாட்டுத் திணைக்களத்தில் பல சாதனைகளை நடைமுறைப் படுத்தியவராகவும் விளங்கியவர். சிறுவர் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர். சிறுவர் விளையாட்டு, சிறுவர் நாடகங்கள் எழுதியும். நெறிப்படுத்தியும் உள்ள கலைஞர்.

பயிற்சிப் பட்டறைகளை நடத்தி இலக்கியச் சேவைகள் செய்பவர். பல்கலைக் கழகத்தில் படிக்கும் போது பேராசிரியர் சு. வித்தியானந்தன் நெறிப்படுத்தலில் நாட்டுக் கூத்துக்களில் நடித்துப் பெயர் பெற்றவர். 'சிறுவர்களுக்கான பாரம்பரிய விளையாட்டுக்கள்' என்ற நூலை எழுதி வெளியிட்டவர். அந்நூலில் கிராமங்களில் பாரம்பரியமாக விளையாடப் படும் சிறுவருக்குப் பொருத்தமான விளையாட்டுக்களை இனங்கண்டு விபரமாக எழுதியுள்ளார். அத்துடன் முன்பள்ளி ஆசிரியர்களின் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றவர். சிறந்த கட்டுரைகளை எழுதுபவர். சிறுவர்களுக்கும் ஏனையோருக்கும் முன்மாதிரியானவர்.

ஆலையூரன் க.தங்கராசா ஆசிரியராக, அதிபராக, கல்விப்பணிப்பாளராகச் சேவை செய்தவர். அவரது சிறுவர் பாடல்களில் சிந்தனையை வளர்க்கும் செய்திகள் நிறைந்திருக்கும். வீரகேசரி, தினகரன், தினக்குரல் போன்ற தேசிய நாளிதழ்களில் சிறுவர்களுக்கான கதைகளையும் . பாடல்களையும் எழுதியுள்ளார். 'குழந்தை உள்ளம் நல்லதொரு சிறுவர் பாடல்களைக் கொண்ட நூலாகும். சிறுவர் கதைகளும், சிறுவர் நாவலும் எழுதி வெளியிட்டுள்ளார். அவரது 'சங்கீதன்' என்ற சிறுவர் நாவல் பலராலும் பாராட்டப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்து இராதாகிருஸ்ணன் சிறந்த ஓவியரும், சிறுவர் நாடகங்களை எழுதி, நெறிப்படுத்தி அரங்கேற்றுபவராகவும் விளங்குகிறார். ஆசிரியராக, கல்விப் பணிப்பாளராகச் சேவையாற்றுகின்றார். தற்போது வவுகியா தெற்குக் கல்வி வலயத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றுகிறார். சிறுவருக்கான நூல்களை எழுதியுள்ளார். இதுவரை ஒன்பது நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். நல்ல மனிதராக வலம் வரும் முத்து இராதாகிருஸ்ணன் 'சிறுவர் கதைகள்' என்ற நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார். அந்நூலில் 'சிங்கத்தின் ஆட்டம்' 'படகிலே பயணம்' 'குரங்கின் வீடு' 'வானில் பறந்த குட்டிக்கரடி' என நான்கு கதைகள் உண்டு. அந்நூலின் படங்களை அவரே வடிவமைத்து வரைந்துள்ளார்.

அவரது சிறுவர் நூல்களுக்காக இலங்கை அரசின் இலக்கிய விருதும், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இலக்கிய விருதும், பரிசுகளும் கிடைத்துள்ளன.

கேணிப்பித்தன் ச.அருளானந்தம் இதுநாள் வரை தமிழில் 15 சிறுவர் கதை நூல்களையும், ஆங்கிலத்தில் 08 சிறுவர் கதை நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். 'சிறகுவைத்த கதைகள்' என்ற நூலைச் சிறுவர்களுக்காகப் படைத்துள்ளார். அந்நூலில் உள்ள அத்தனை கதைகளும் மேல்நாட்டுக் கதைகளே. அவற்றை மொழிபெயர்த்து நமது நாட்டுச் சூழலுக்கேற்பத் தந்துள்ளார். சுனாமி அனர்த்தங்களில் இருந்து சிறுவர்களை மீட்டெடுக்கும் நோக்கோடு கல்வி அமைச்சின் நூர்லக அபிவிருத்திச் சபை சிறுவர் இலக்கியங்களை எழுதும்படி போட்டி நடத்தியது. அதில் 'சின்னத்தேவதைகள் என்ற சிறுவர் கதைகள் வெற்றி பெற்றது. பரிசும் சான்றிதழும் கிடைத்தது.

அந்நூலுக்குக் கிழக்கு மாகாண அரச இலக்கியப் பரிசும் கிடைத்தது. அவரது 'கண்ணனும் இராமனும்' என்ற சிறுவர் கதைகள் நூல் சகோதர மொழியான சிங்களத்திலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் ஆறு சிறுவர் கதை நூல்கள் வெளிவந்துள்ளன. 'மனிதனும் மீனும்,''வண்ணத்துப் பூச்சிகளும் சிறுவர்களும்','மரமும் கிளிகளும்','யானையும் எறும்புகளும்','சின்னச் சிலந்தி','காகமும் குயிலும்' ஆகிய சிறுவர் கதை நூல்கள் தமிழ்,ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் வெளிவந்துள்ளன.

இதுநாள் வரை ஈழத்தில் சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் சிறுவர் கதைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியவர்களாகப் பின்வருவோர் நம் மனக் கண்முன் நிற்கின்றனர். (1)குமாரசாமிப் புலவர், (2)செங்கை ஆழியான் க.குணராசா, (3)ஓ.கே.குணநாதன், (4)உடுவை தில்லைநடராஜா, (5)எம்.ஏ.ரஹ்மான், (6)செ.யோகநாதன், (7)யோ.சத்தியன், (8)அகளங்கன், (9)சுதாராஜ், (10)ஜெனீரா தௌபீக் அமான், (11)தா.பி.சுப்பிரமணியம், (12)சித்தி அமரசிங்கம், (13)ச.பஞ்சாட்சர சர்மா, (14)செல்வி.அ.அருள்சுலக்ஷிகா, (15) மு.தேவதர்சினி, (16) இரா.பத்மினி, (17)நாகூர் உம்மா, (18) திருமதி. சிந்தியா ஜெகன். (19)செ.ஞானராசா. (20)வாகரை வாணன், (21)யோகா யோகேந்திரன், (22) உ.நிசார் (23) முத்து ராதாகிருஸ்ணன், (24) பி.பி. அந்தோனிப்பிள்ளை (25) எம்.ஏ.யவாத் (26)யசோதா பாஸ்கரன். (27) செ.குணரத்தினம் (28) அனு.வை.நாகராஜன் (29) எஸ். எதிர்மன்னசிங்கம். ஆகியோர் விளங்குகின்றனர்.

இவர்களுடன் பலர் வீர கேசரி, தினகரன். தினக்குரல், நவமணி மற்றும் பல்வேறு இதழ்களிலும் சிறுவருக்கான கதைகளை எழுதுகின்றனர்.

## ஈழத்தில் சிறுவர் பாடல்கள்

கவிஞர்களாக இருப்பது பெருமை. அதைவிடக் குழந்தைக் கவிஞராக இருப்பது ஒரு வரமாகும். குழந்தைகள் உலகம்தான் அரிதாரம் பூசாத அன்பு நிறைந்த பூந்தோட்டம். அதில் வண்டாகச் சுற்றி வந்து தேன் கவிதைகளைக் குழந்தைகள் நெஞ்சில் தெளிப்பவர்கள் சிறந்த கவிஞராக விளங்குவாரகள்.

ஈழத்திலும் சிறுவர் பாடல்களின் முன்னோடிகள் தாய்மார்களும், பாட்டிமார்களுமே. இவை கிராமிய இலக்கியமாக இன்றும் உலா வருவதைக் கிராமங்களில் அவதானிக்கலாம். அவை தாலாட்டுக்களாகவும், விடுகதைகளாக . ஊஞ்சல் பாடல்களாக, விளையாட்டுப் பாடல்களாகவும் உலா வருகின்றன.

கிராமிய விளையாட்டுக்களில் சிறுமியர் ஆடும்போது பெரும்பாலும் பாடலுடன் கூடிய விளையாட்டுக்கள் இடம் பெறும். சிறுவர்கள் விளையாடும் போது பாடல் சிறுபான்மையாக இடம் பெறும். இப்பாடல்கள் எழுத்தில் இடம்பெறுவது அரிது. கோலாட்டப் பாடல்கள் மட்டும் சிலரால் எழுதப்பட்டுப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

சிறுவர் பாடல்களைப் பாடசாலைகளின் பாடத்திட்டத்தில் சேர்த்த பின்னர்தான் சிறுவர் பாடல்களுக்கான தேவை ஏற்பட்டது. தமிழாசிரியர்கள் சிறுவர் பாடல்களுக்காக தேடல்களை நடத்தினர். இந்த நிலையில் ஔவையார் 'வாக்குண்டாம்','ஆத்திசூடி','கொன்றை வேந்தன்','நல்வழி'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றையும், உலகநாதர் 'உலகநீதியையும்', அதிவீரராம பாண்டியரின் 'வெற்றி வேற்கை'யையும்,, விளம்பிநாகரின் 'நாண்மணிக் கடிகையையும்', திருவள்ளுவர் 'திருக்குறள்' போன்ற நீதிப் போதனைகளைக் கொண்ட நூல்களைத் தந்து அன்று சிறுவர் இலக்கியத்துக்குத் துணைநின்றனர்.

இலங்கையில் 1935 ஆம் ஆண்டு வட பெரும்பாக வித்தியாதரிசியாக(கல்விப் பணிப்பாளர்)க் கடமையாற்றிய கே.எஸ். அருணந்தி சிறுவர் இலக்கியப் பரிசுப் போட்டியை நடத்தினார். அவர் தனது கடமையையும், மக்களின் தேவையையும் நன்கு உணர்ந்தவர். கல்வியில் நாட்டங்கொண்டவர். அவரின் தூரப்பார்வையின் காரணத்தால் ஈழத்தமிழ் சிறார்களின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை தோன்றியது.

அப்போட்டியில் பரிசுக்குரிய பாடல்களைத் தெரிவு செய்யும் நடுவர்களாக சுவாமி.விபுலானந்தர், சுவாமி.ஞானப்பிரகாசர், நவநீத கிருஷ்ணபாரதியார், பண்டிதர் மகாலிங்கசிவம். பண்டிதமணி.சி.கணபதிப்பிள்ளை முதலானோர் கடமையாற்றினர் எனப் பலரும் அறிந்துள்ளனர்.

போட்டியில் நல்ல பாடல்கள் தேர்ந்தெடுக்கப் பட்டன. பின்னர் வடஇலங்கை தமிழாசிரிய சங்கம்அப்பாடல்களைத் தொகுத்து 'பிள்ளைப்பாட்டு' என்ற பெயரில் வெளியிட்டது. இப்போட்டியின் ஊடாகவே க.சோமசுந்தரப்புலவர். மா.பீதாம்பரம், அகிலேசசர்மா போன்றோர் வெளியுலகினுக்கு அறிமுகமானார்கள்.

இப்போட்டி தமிழாசிரியர்களிடையே ஒரு உத்வேகத் தையும், திருப்பு முனையையும் தோற்றுவித்தது. உண்மையில் தமிழாசிரியர்களே சிறுவர் இலக்கியத்துக்கு ஊன்றுகோலானார்கள். இந்தநிலையில் சிறுவர் இலக்கியம் என்பது சிறுவர் பாடல்களையே சுட்டி நிற்பதை மனங்கொள்ளவேண்டும். இதனையே இன்றுவரை காத்துப் போற்றி வருகின்றனர். ஆனால் அதன் வளர்ச்சியை யாரும் மனங்கொள்ளவில்லை.

அப்போட்டியில் பங்கு கொண்ட எழுத்தாளர்கள் பெரும்பாலனவர்கள் ஆசிரியர்கள்தான். தமது பள்ளிச் சிறார்களுக்கு நல்ல பாடல்களைத் தேடிக் கற்பித்தார்கள். ஆசிரியர்கள் தாமே பாடல்களை யாத்தும் கற்பித்தார்கள். எழுதப்பட்ட பாடல்கள் அனைத்துமே சிறார்களுக்குப் பொருத்தமானவையா? என்று ஆய்வுகளை மேற்கொண்டவர்கள் தமது கருத்துக்களையே வெளியிட்டனர். அன்று அந்தச் சேவைமனப்பாங்குடன் செயற்பட்ட அன்புள்ளங்களின் அர்ப்பணிப்புக்களால்தான் இன்று சிறுவர் பாடல்கள் தனிச்சிறப்பினை நோக்கிப் பயணிக்கின்றன. பலரும் எழுத முற்படுப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறார்களின் உளநிலைக்கேற்பவும், வயதுக்கு ஏற்பவும் எழுதப்படவில்லை என்பர். ஆனாலும் சிலர் மேற்கூறியவற்றைக் கவனத்தில் கொண்டு எளிய சொற்களும், ஓசைநயமும், தாளலயமும் உடையனவாக எழுதினர்.

1965க்குப் பின்னர் ஈழத்தில் நல்லதொரு மாற்றம் சிறுவர் பாடல்களில் தென்படலாயிற்று. இலங்கையில் மாகாண ஆட்சிமுறைமை வந்ததின் பின்னர் இலக்கிய வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மத்திய அரசும், மாகாண அரசுகளும் இலக்கியத் துறைக்கு ஆக்க பூர்வமான இடம் கிடைத்துள்ளது. சிறுவர் இலக்கியங்களுக்கு மாகாண அரசு இலக்கிய விருதுகளும் வழங்கி ஊக்கப் படுத்துகின்றன. போட்டி நிலவுதால் நூல்களின் தரமும் உயர்வாக உள்ளது.

கிழக்கு மாகாணத்தில் சிறுவர் இலக்கியத் துறையினை ஊக்குவிக்கு முகமாக அதனை வகைப் படுத்தி, சிறுவர் பாடல்களுக்கு வேறாக விருது வழங்கப் படுகிறது. சிறுவர் கதைகளுக்கு வேறாகவும், நாவலுக்குவேறாகவும் விருதுகள் வழங்கப் படுகின்றன.அன்று மாகாணக் கல்விப் பணிப்பாளராக இருந்த திரு.எஸ். தண்டாயுதபாணி, பண்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளராகச் சேவையாற்றிய திரு. எஸ்.எதிர்மன்னசிங்கம், திரு. க. அன்பழகன் ஆரம்பப் பிள்ளைப் பிரிவின் பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு.ச.அருளானந்தம் ஆகியோரின் அரிய முயற்சியால் இச் செயற்பாடுகள் தொடங்கப் பட்டன. இது சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு உந்து சக்தியாக உதவுகின்றன.

இன்று ஈழத்தில் ஏறத்தாழ (175) நூற்று எழுபத்தைந்துக்கு மேற்பட்ட சிறுவர் இலக்கிய கர்த்தக்களான எழுத்தாளர்கள் உள்ளதாக அறியக் கிடக்கிறது. இவர்களில் கணிசமான (151) எழுத்தாளர்கள் சிறுவர் பாடல்களை எழுதியுள்ளனர். சிலர் தலா ஒரு நூலையாவது எழுதி வெளியிட்டுள்ளார்கள். பலர் பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளனர். பலரை அறியமுடியவில்லை. சிலர் அவ்வப்போது எழுதி வார இதழ்களுக்கு அனுப்பிவிட்டு இருந்து விடுவார்கள். பத்திரிகைகளில் வெளிவந்ததும் படித்து மகிழ்வதோடு சரியாகிவிடும். ஆசிரியர்கள் பாடல்களை எழுதித் தமது பாடசாலை மாணவர் களுக்குக் கற்பித்துவிட்டுப் போய்விடுகின்றனர். அவற்றை ஆவணப் படுத்துவதில்லை.

திரு.சோ.இராசேந்திரம் (தாமரைத்தீவான்), ஈச்சையூர் தவா, க.தங்கராசா போன்ற பலர் அவற்றை ஆவணப்படுத்தி வைக்கவில்லை. நான் ஆசிரியராகச் சேவைசெய்யும் போது எனது மாணவர்களுக்கு நிறையவே பாடல்களை எழுதிக் கொடுத்தேன். ஆனாலும் அவற்றை ஆவணப்படுத்தவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிவைத்திருந்த ஏடுகள் அனைத்தும் 1985– 1997 காலப் பகுதியில் நமது நாட்டில் நடந்த போராட்டக் கலவரங்களாலும், இடப்பெயர்வுகளினாலும் அழிவுற்றன. தமிழ் கிராமங்களில் இருந்த நூலகங்கள் தீக்கிரையாக்கப் பட்டன. பல நல்லுள்ளங்கள் சேர்த்து வைத்த ஆயிரக்கணக்கான நூல்கள் எரியூட்டப் பட்டுவிட்டன.

நான் கற்பித்த பாடசாலைகளில் எனது ஆக்கங்களுக்கு தேவையிருந்தது. அண்மையில் ஓருவர் என்னைக் காணவந்தார். வந்ததும் தன்னை அறிமுகம் செய்தார். அவர் பெயர் கந்தசாமி.

"ஐயா! நான் சேனையூர் மகாவித்தியாலயத்தில் 3ம் வகுப்புப் படிக்கும்போது நீங்க எழுதித் தந்த பாடல்களை மறக்கவில்லை. பாடி மகிழ்வேன். எனது பேரப்பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுக்கிறேன். அவர்களும் பாடுகிறார்கள். அதனைப் பாடுகிறேன் கேளுங்கள்". என்றார்.. பாடினார்.

தால லல்லா தாலல்லலா
தால லல்லா தாலல்லலா
தால லல்லா தாலல்லலா
தால லல்லா தாலல்லலா

'பாட்டுப் பாடும் எங்கள் அறை
பாடம் சொல்லும் எங்கள் அறை
கேட்டு நின்றால் எங்கள் அறை
காது குளிரும் வகுப்பு அறை

சேனை ஊரில் அமைந்த நல்ல
சிறந்த மகா வித்தியாலயத்தில்
தேனை வெல்லும் எம்தமிழை
தேடும் போது உள்ளம் துள்ளும்

பாலர் நாங்கள் சேர்ந்து நிதம்
பைந்தமிழில் பாட்டிசைப்போம்
கோல மயில்போல் ஆடிநிதம்
கோடி இன்பம் கண்டிடுவோம்

எங்கள் தமிழோ வான்பரவும்
எங்கும் காற்றில் ஆடிவரும்

பொங்கும் பாலர் உள்ளமெல்லாம்
பாடி ஆடும் எங்கள் அறை -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் வகுப்பு அறை

தால லல்லா தாலல்லலா
தால லல்லலா தாலல்லலா'

1964 ல் எனது இலக்கியப் பயணம் தொடங்கியது எனலாம். அமரர் எஸ்.டி.சிவநாயகம் அதற்கான வழியைக் காட்டினார். அதன் பயன் ஒரு இலக்கியவாதியாக தலைநிமிர்கிறேன். எனது நூலாக்கப் பணி 1990ல் தொடங்கியது. இன்று வரை ஏறத்தாழ 102 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளேன். சிறுவர் இலக்கியங்களாக 70 நூல்களைப் படைத்துள்ளேன். இவற்றுள் 20 சிறுவர் பாடல் நூல்களும். 18சிறுவர் கதைகள். 10 சிறுவர் நாவல்களும் அடங்கும். இன்றும் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

எழுதி வெளியிட்ட பல நூல்களுக்கு சாஹித்திய விருதுகளும் கிடைத்துள்ளன. விருது பெறுவதெல்லாம் சிறந்த நூல்களாகாது என்பதை நான் உணர்கிறேன். எனினும் நல்ல தரமான சிறுவர் பாடல்களைப் படைக்க வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

இலங்கையில் 1935 ஆம் ஆண்டு வட பெரும்பாக (கல்விப் பணிப்பாளர்)வித்தியாதரிசியாகக் கடமையாற்றிய கே.எஸ். அருணந்தி சிறுவர் இலக்கியப் பரிசுப் போட்டியை நடத்தினார். அன்று அவர் அந்த முடிவினை எடுத்ததன் விளைவுதான் இன்று சிறுவர் இலக்கியம் வளர்ந்துள்ளது. சிறப்பாகச் சிறுவர் பாடல்கள் இவ்வளவு தூரம் வளர்ச்சி அடைந்திருக்க வாய்ப்பிருக்காது.

அப்போட்டியில் மிகச் சிறந்த பாடல்களைக் கண்டார்கள். அவற்றுள் சிறந்த பாடல்களை தேர்ந்தெடுத்து .வடஇலங்கை தமிழாசிரிய சங்கம்தொகுத்து 'பிள்ளைப்பாட்டு' என்ற பெயரில் வெளியிட்டது. இப்போட்டி பல சிறுவர் பாடலாசிரியர்களைத் தந்தது. க.சோமசுந்தரப்புலவர். மா.பீதாம்பரம், அகிலேசசர்மா போன்றோர் வெளியுலகினுக்கு அறிமுகமானார்கள். அவர்களில் இருந்து பாடல்கள் எழுதும் ஆர்வம் பலரின் உள்ளங்களில் வேர்விடத் தொடங்கியது. சிறுவர் பாடல்களைப் பற்றிய கரிசனையும் வளரத்தொடங்கியது.

சிறுவர் பாடல்களை எழுதுவோர் நமது முன்னோர் நமக்கு விட்டுச் சென்ற நாட்டார் பாடல்களைப் பின்பற்றிப் பல பாடல்களை எழுதியுள்ளனர். நாட்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களை அறிந்திருப்போர் இலகுவான பாடல்களைப் பிரசவிக்க முடியும். நமது நாட்டுப்புறப் பாடல்களில் விளையாட்டுப் பாடல்கள், வேடிக்கைப் பாடல்கள், விடுகதைப் பாடல்கள், கதைப் பாடல்கள் எனப் பல உள்ளன. இவை சிறார்களை வெகுவாகக் கவர்வன. இவ்வகைப் பாடல்களை எனது கிராமம் கற்றுத் தந்தது. பாடசாலையில் எனக்கு எனது ஆசிரியர்கள் கற்பித்தார்கள். உச்சரிப்பைச் செம்மைப் படுத்தவும், சொல்வளத்தை வளர்த்தெடுக்கவும் நாட்டார் பாடல்களைத் தேடிக் கற்பித்தார்கள்.

நாட்டுப்புறப் பாடல்களை பின்பற்றி தேசிகவிநாயகம்பிள்ளை பல பாடல்களைப் பாடியுள்ளார். தமிழோவியன் 'மழையே! வா வா வா',பண்டிதர் க.வீரகத்தி 'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு' போன்ற பாடல்களையும் பாடியுள்ளனர்.

'தற்காலத் தமிழ்க் கவிதைக்கு நாட்டார் பாடல்கள் வலிவும் வனப்பும் ஊட்டுவதைப் போலவே, சிறுவர் பாடல்களுக்கும் உயிரோட்டம் அளிக்கின்றன. அவற்றின் ஓசைநயமும் இனிமையும் காலத்தால் மெருகூட்டப் படுகிறது' என பேராசிரியர் க.கைலாசபதி தனது 'தமிழில் குழந்தைக் கவிதைகள்' என்ற கட்டுரையில் குறிப்பிடுவர். அத்துடன் 'தமிழில் உள்ள குழந்தைப் பாடல்களிற் பெரும்பான்மை எளிமைப் படுத்தப் பட்ட முதியோர் பாடல்கள்தாம். அறவியல் நோக்கு, அதீத போதனைப் பண்பு ஆகிய இவையே சிறுவர் இலக்கியத்தின் பிரதான இயல்புகளாகக் காணப் படுகின்றன'. எனவும் குறிப்பிடுகின்றார். இவை தேவையற்றதாகக் கருதுகிறார் போல் தோன்றுகிறது.

அப்படியெனில் அவரது இந்தக் கூற்றை ஆதரிக்க முடியாதுள்ளது. இன்றைய சிறுவர்கள் நவீன தொழில் நுட்ப யுகத்தில் உள்ளனர். தொலைத் தொடர்புச் சாதனங்களின் சாதனையால் சிறுவர்கள் கற்கத் தொடங்கிவிட்டனர். சினிமா, தொலைக்காட்சி போன்றவைகளால் சிறுவர்கள் முன்னேறிவிட்டனர் பல தொலைக்காட்சி நிறுவனங்களும், வானொலி நிலையங்களும் பல்வேறு நிகழ்ச்சிக்ளைத் தயாரித்து ஒளிபரப்பும், ஒலிபரப்பும் செய்கின்றன. சிறுவர்கள் சினிமாப் பாடல்களையும், சில காட்சிகளையும் போலச் செய்து முன்னேறுகின்றனர்.

சினிமாவில் வரும் காட்சிகளைத் தாமே தயாரித்தும் அரங்கேற்றம் செய்கின்றனர். சில முன் பள்ளிகளில் சினிமாப் பாடல்களுக்கு ஏற்ப சிறார்களைப் பழக்கி இயக்கவும் செய்கின்றனர். சிறுவயதில அச்சிறார்கள் அற்புதமாக இயங்குகின்றனர். மொழியை லாவகமாகக் கையாளுகின்றனர். கணனிகளை இயக்கவும், அவற்றைப் பயன்படுத்தவும் முடிகிறது. சினிமாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களை அருமையாக இசை பிசகாமலும் பாடுவதை அவதானிக்கலாம். இவற்றைக் கையாளும் சிறார்களுக்கு இப்பருவத்தில் அறவியல் நோக்கு, அதீத போதனைப் பண்பு ஆகியவை சிறுவர் இலக்கியத்தின் இயல்புகளாக இருத்தல் அவசியமாகும்.

இவ்வாறான அதீத கற்பனைகள் நமது இதிகாச. புராணங்களில் உள்ளனவே. பழம்பெருமையைப் பறைசாற்றும் இராமாயணத்தில் எவ்வாறு குரங்குகள் பேசுகின்றனவே? சொல்லின் செல்வன் என்று அனுமானைக் கூறுகின்றார்களே? குரங்குகள் எவ்வாறு பாலம் அமைக்க முடியும்? இராவணனுக்கு எப்படி பத்துத் தலைகள் வந்தன? சஞ்சீவி மலையை அனுமான் தூக்கி வந்ததாகக் கூறப்படுகிறது. இது எவ்வாறு சாத்தியம்? சடாயு பறவைகளின் அரசன் எனக்கூறப்படுகிறது. பறவைக்குப் பேசக் கற்றுக் கொடுத்தவர் யார்? இவையெல்லாம் தேவை என்றால் சிறுவர்களுக்கு அதீத கற்பனைகளைக் கூறுவது நலம்தானே?

பல கரடுமுரடான பாடல்கள் இன்று சிறுவர்களது வாயில் ஐஸ்பழம் போன்று விளையாடுவதைக் காணலாம். 'சுப்பர் சிங்கர்''கலக்கப் போவது யார்' போன்ற நிகழ்ச்சிகளில் சிறுவர்கள் பங்கு கொண்டு புகழ்பெறுகின்றனர். இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பட்டைகிளப்புகின்றனர். அன்று நமது பெரும் புலவர்கள் பாடி வைத்த பாடல்களை பாடசாலைகளில் கற்பித்தார்கள். அவற்றில் அறம், நீதி போன்ற ஒழுக்கம் பற்றிய பாடல்களைப் பாடமாக்கிப் படித்தோம். அந்தப் பாடல்கள் பின்னர் நமக்கு உதவவில்லை என்று யாரும் கூறமுடியுமா?

பருவத்துக்கு ஏற்ற பாடல்களைத் தேர்ந்து கற்பிக்கலாம். பொருத்தமில்லாத பாடல்கள் என்று ஏதுமில்லை. நமது கவிஞர்கள் எழுதும் பாடல்கள் தரமானவையாக உள்ளன. தேர்ந்தெடுத்துக் கற்பிப்பதும், பிள்ளைகளைத் தூண்டுவதும் ஆசிரியர்களதும் பெற்றோர்களினதும் கடமையாகும். இன்று சினிமாவில் சிறுவர்களுக்குப் பொருத்தமான பல பாடல்கள் உலா வருகின்றன. அவற்றுள் கிராமியப் பாடல்கள் பல உள்ளன. கிராமியப் பாடல்கள் எல்லாக் காலங்களிலும் கிடைக்கும் அருங்கனிகள் போன்றவை. அவை எப்போதும் உதவுவன. அப்பாடல்களுக்குப் பொருத்தமான இசை அமைத்துப் பாடப்படுகின்றன. சிறுவர்கள் . அவற்றைக் கேட்டுப் பாடமாக்கிப் பாடி மகிழ்கின்றனர். உதாரணமாக ஒரு படத்தில் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பட்டம் பற பற
 கோழி பற பற
கொக்கே பற .. பற
..............................

என வருகிறது. அதனைப் பல சிறார்கள் பாடி மகிழ்வதைக் கண்ணுற்றுள்ளேன். இன்னுமொரு படத்தில்:

'குலை குலையாய் முந்திரிக்காய்
நரியே நரியே சுற்றி வா'
..............................

கண்ணான கண்ணே கண்ணான கண்ணே
என் மீது சாய வா
புண்ணான நெஞ்சில் பொன்னான கையால்
பூப்புப் போல நீவவா
ஆரார ராரோ ஆரார ராரோ
ஆரார ராரிரோ

என வருகிறது. இப்பாடல் நாட்டார். இலக்கியப் பாடலை நினைவு படுத்தினும் நல்லதொரு இசையில் பாடப்படுகிறது. அதனால் சிறுவர்கள் பாடி மகிழ்கின்றனர். இவ்வாறு இன்று சிறுவர்களுக்குப் பொருத்தமான ஏராளமான பாடல்கள் உள்ளன. அத்துடன் தாலாட்டுப் பாடல்களும், பெருந்தொகயான நாட்டார் பாடல்களும் திரையிசையில் வெளிவருகின்றன. இவ்வாறு பல பாடல்கள் திரைப் படங்களில் பாடப்படுவதால் சிறுவர் வாய்களில் ஒலித்துப் பிரபல்யமாகின்றன.

நமது நாட்டுப் புறக் கவிஞர்கள் எந்த உளவியலையும் படிக்கவில்லை. ஆனால் அவர்கள் வளர்ப்புக் கலையில் அனுபவம் உடையவர்கள். அன்பும், கருணையும், அரவணைக்கும் பண்பும் கொண்டவர்கள். அந்த அனுபவத்தால் ஓசை நயமுடைய பாடல்கள் கவித்துவத்தோடு படைத்தனர். அவர்கள் எழுதி வைக்கவில்லை. வாய்வழியாக பரவி இன்றும் நிலைத்து வாழ்கின்றன.

அழ.வள்ளியப்பாவின் குழந்தைப் பாடல்களான 'கோயில் யானை','லட்டும் தட்டும்' போன்றன குழந்தை உள்ளங்களை அறிந்த நிலையில் எழுதப்பட்டதாகக் கொள்வர்.நமது நாட்டுக் கவிஞர்களும் குழந்தை உளவியலைப் புரிந்தவர்களாகத் தரமான பாடல்களை யாத்துள்ளனர். சில கவிஞர்களின் பாடல்களை வாசகர்களின் நலன் கருதி இங்கு தருகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில் யானை

டிங் டாங் டிங் டாங்
டிங் டாங் டிங் டாங்

கோயில் யானை வருகுது
குழந்தைகளே பாருங்கள்
டிங் டாங் டிங் டாங்
டிங் டாங் டிங் டாங்

மணியை ஆட்டி வருகுது
வழியை விட்டு நில்லுங்கள்
டிங் டாங் டிங் டாங்
டிங் டாங் டிங் டாங்

ஆடி ஆடி வருகுது
அந்தப் பக்கம் செல்லுங்கள்
டிங் டாங் டிங் டாங்
டிங் டாங் டிங் டாங்

ஊரைச் சுற்றி வருகுது
ஓரமாக நில்லுங்கள்
டிங் டாங் டிங் டாங்
டிங் டாங் டிங் டாங்

டிங் டாங் டிங் டாங்
டிங் டாங் டிங் டாங்

கோயில் யானை வருகுது
குழந்தைகளே பாருங்கள்
குழந்தைகளே பாருங்கள்
குதித்து ஓடி வாருங்கள்.

கோயில் யானை வருகுது
குழந்தைகளே பாருங்கள்

டிங் டாங் டிங் டாங்
டிங் டாங் டிங் டாங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லட்டும் தட்டும்

வட்டமான தட்டு
தட்டு நிறைய லட்டு
லட்டு மொத்தம் எட்டு
எட்டில் பாதி விட்டு

எடுத்தான் மீதம் கிட்டு
மீதம் உள்ள லட்டு
முழுதும் தங்கை பட்டு
போட்டாள் வாயில் பிட்டு

கிட்டு நான்கு லட்டு
பட்டு நான்கு லட்டு
மொத்தம் தீர்ந்த தெட்டு
மீதம் காலித் தட்டு

இவை அழ.வள்ளியப்பாவின் பாடல்களாகும். இதேபோன்று நமது ஈழத்துக் கவிஞர்களான அம்பி,மா.பீதாம்பரம்,க.வீரகத்தி,வேந்தனார்,ச.அருளானந்தம், போன்றோரின் பாடல்கள் அமைந்துள்ளதை மனங்கொள்ளலாம்.

இ.அம்பிகைபாகனின் (அம்பி ) பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

அன்புப் பாலர் சேருங்கள்
அம்பிப் பாடல் பாடுங்கள்
அண்ணா அக்கா வாருங்கள்
அமுதப் பாடல் பாடுங்கள்.

மா.பீதாம்பரத்தின் பாடல் இவ்வாறு உள்ளது.

ஆல மரம் ஆல மரம்
அழ கான ஆல மரம்
பாலர் நாங்கள் ஆடல் பாடல்
பழ கநல்ல ஆல மரம்

இவை க.வீரகத்தியின் பாடல்களாகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பலூான்**

வாயில் வைத்து ஊதி
வான வெளியில் விட்டால்
பாயும் அங்கும் இங்கும்
பந்து போலே பாடுவேன்

அளவு மிஞ்சி ஊதினேன்
அது வெடித்துப் போச்சுதே
அளவு மிக்க ஆசை
அடடா அதுவே தீமை

**பந்து**

பந்து பந்து பந்து
பாலர் ஆடும் பந்து
வட்ட வட்டப் பந்து
வானை முட்டும் பந்து

அப்பா தந்த பந்து
அருமை யான பந்து
ஓங்கி ஓங்கி அடிப்போம்
ஓடி ஓடிப் பிடிப்போம்

வித்துவான் வேந்தனாரின் பாடல் இவ்வாறு உள்ளது.

காலைத் தூரக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்
பருகத் தந்த அம்மா

புழுதி துடைத்து நீரும் ஆட்டிப்
பூவுஞ் சூட்டும் அம்மா
அழுது விழுந்த போதும் என்னை
அணைத்துத் தாங்கும் அம்மா.

இவை ச.அருளானந்தத்தின் பாடல்களாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பலூான்..பலூான்**

பாலன் மாமா வருகிறார்
பலூான்கள் தூக்கி வருகிறார்
கோலம் போட்ட பலூான்களை
கொண்டு வந்து காட்டுறார்

தலையில் பாம்பாய் ஆடுது
சத்தம் போட்டுக் காட்டுறார்
விலையில் பலதைக் காட்டுறார்
விரைந்து பலூானை வாங்கட்டாம்

கையில் மூன்று புடலங்காய்
கழுத்தில நாலு கத்தரி
பையில் நிறைய பலூாண்டாம்
பணத்தைத் தந்து வாங்கட்டாம்

சிவப்பு மஞ்சள் கருநீலம்
சிறந்த ஊதா செம்மஞ்சள்
உவக்கும் பச்சை நீலமும்
உள்ள பலூான் இருக்குதாம்

மேற்காட்டிய பாடல்கள் வாசகரின் பார்வைக்காகத் தரப்பட்டன. இவற்றைச் சிறுவர்கள் பாடும்போது அவர்களுக்குத் தெரிந்த பொருட்கள் மனக்கண் முன் வந்து நிற்கும். நம்மவர்கள் இன்று சிறுவர் பாடல்களில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ளனர். இதற்கான காரணம் யாதெனில் நமது பேராசிரியர்களும். சிறுவர் இலக்கியங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்ற பேரவாக் கொண்டோரினதும் வழிகாட்டல்கள்களுமே காரணம் எனலாம். சிறப்பாக பேராசிரியரும் சிறந்த ஆய்வாளருமான கலாநிதி செ.யோகராஜாவும், அவர் தொகுத்த 'ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம்' நூலில் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ள அறிஞர் பெருமக்களுமே ஆகும். அவர்களுக்கு நன்றி.

ஈழத்தில் பல தரமான கவிஞர்கள் நூல்களை வெளியிட்டுள்ளனர். அழ.வள்ளியப்பா குழந்தைகளுக்காக நூல்களை எழுதினார். அவர் ஒரு தொகுப்பாகப் பல ஆண்டுகளுக்குப் பின்னரே வெளியிட்டார். நமது ஈழத்துக் கவிஞர்கள் ஆசிரியர்களாகச் சேவையில் ஈடுபட்டவர்கள். தங்கள் மாணவர்களின் தேவைக்காக எழுதித் தொண்டாற்றியவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழ.வள்ளியப்பாவுக்குப் பல பத்திரிகைகள் கைகொடுத்தன. சில பத்திரிகைகளின் ஆசிரியராகவும் கடமையாற்றியவர். அவருக்கு சிறுவர் இலக்கியத்தில் ஈடுபட வாய்ப்புக்கள் அதிகம் இருந்தன. ஆனால் நமது சிறுவர் இலக்கிய கர்த்தாக்களுக்கு வாய்ப்பு வசதிகள் இல்லையென்றே கூறலாம். அப்படி இருந்தும் நம்மவர்கள் சிறுவர் இலக்கியத்தில் ஈடுபட்டமையை நினைந்து பெருமை கொள்ள வேண்டும்.

நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் பாடல்கள் தொகுக்கப்பட்டுச்' சிறுவர் செந்தமிழ்' என்னும் தனி நூலாக வெளிவந்துள்ளது. இலங்கையின் 'தேசிய கீதத்தை' எழுதிய முத்தமிழ் புலவர் மு.நல்லதம்பி கொழுப்பு சாஹிராக் கல்லூரியில் கடமையாற்றினார்.

அப்போது தமது மாணவர்களுக்காக சிறுவர் பாடல்களை எழுதினார். அவை தொகுக்கப் பெற்று'இளைஞர் விருந்து' என்ற நூலாக வெளிவந்தது. வித்துவான் வேந்தனார் அருமையான சிறுவர் பாடல்களை யாத்துள்ளார். அவரது பாடல்கள் தொகுக்கப் பட்டு 'கவிதைப் பூம்பொழில் என்னும் நுலாக வெளிவந்தது. எம்.சுபைர் 'மலரும் மனம்' என்ற நூலை வெளிட்டார். இ.அம்பிகைபாகன் 'அம்பிப் பாடல்' என்ற நூலை வெளியிட்டார்.

ஈழத்தில் சிறுவர் இலக்கியங்களை கவிஞர்கள் தனி நூல்களை வெளியிட்டு வருகின்றனர். யாழ்ப்பாணன் என்பார் 'பாவலர் கீதம்' என்ற நூலை வெளியிட்டுள்ளார். அனு. வை.நாகராஜன் 'சிறுவர் பாடல்கள்' நூலை வெளியிட்டுள்ளார். வெ. விநாயகமூர்த்தி 'பாலர் பாமாலை'என்ற நூலை வெளியிட்டார். கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பேராசிரியராகக் கடமையாற்றிய செல்வி. சௌந்தரம் சந்தன நங்கைகந்தப்பு, தமிழ்நாட்டுக் கவிஞர்களின் சிறுவர் பாடல்களையும், ஈழத்துக் கவிஞர்களின் சிறுவர் பாடல்களையும் திரட்டி 'சேர்ந்து பாடுவோம்' என இசை அமைத்து வெளியிட்டனர். மட்டக்களப்பு தேனமுத இலக்கிய மன்றம் 41 கவிஞர்களின் சிறுவர் பாடல்களைத் திரட்டி 'கனியமுது' எனத் தொகுத்து நூலாக வெளியிட்டனர்.

சாரணாகையூம் 'சிறுவர் பாடல்கள்' என்ற சிறுவர் பாடல் நூலினை எழுதி வெளியிட்டார். எம். சி.எம். சுபைர் 'குழந்தைப் பாடல்கள்' என்ற சிறுவர் பாடல்கள் அடங்கிய நூலை எழுதி வெளியிட்டார்.இவர்கள் இருவர் நூல்களில் இருந்து சில பாடல்களை மூன்றாந்தர ஆசிரியர் வழிகாட்டல் நூலில் எடுத்தாளப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு வெளியீடாக 'நமது செல்வம்' என்ற நூலை வெளியிட்டனர். மந்திரக் கண்ணாடி நூல் தில்லை நடராசா எழுதி வெளியிட்டார். 'செத்துப் போன சின்னத்தம்பி' 'ஜாதகக் கதைகள்' என்ற மொழிபெயர்ப்பு நூலை கதிரேசன் என்பவரால் வெளியிடப்பட்டது.

தேசிய கல்வி நிறுவகத்தின் கண்டி மத்திய நிலையத்தில் 1999 – 2002 காலப் பகுதியில் கல்விமாணிப் பட்டக் கற்கை நெறியில் கற்றவர்களின் சிறுவர் பாடல்களைத் தொகுத்து 'முத்துப் பரல்கள்' என்ற பெயரில் எம்.ஜே.நஜிபுல்லா வெளியிட்டார். கலாநிதி.ஹோய்ம்ஜி இனோட்டாவின் சமுத்திர உலகம் -**The ocean world** – என்ற நூலை எஸ்.கே.விக்னேஸ்வரன் மொழிபெயர்க்க மார்கா நிறுவனம் வெளியிட்டது.

கண்டியைச் சேர்ந்த கு.இராமச்சந்திரன், க.நவசோதி ஆகியோர் சிங்கள மொழி, ஆங்கில மொழிகளில் உள்ள சிறந்த சிறுவர் பாடல்களைத் தமிழில் மொழிமாற்றம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததை அறியக் கிடக்கிறது. கனக. செந்திநாதன் தமிழ் நாட்டின் 13கவிஞர்களின் சிறுவர்பாடல்களையும், 12 ஈழத்தின் கவிஞர்களின் சிறுவர் பாடல்களையும் ஈழநாடு பத்திரிகையில் 'சிறுவர் கவிநயம்' என்ற தொடர் கட்டுரையாக வெளியிட்டார்.

வேந்தனார் சிறுவர்களின் பட்டறிவு,சொற்களஞ்சியம். வயது, வகுப்பு போன்ற எல்லைகளுக்குள் நின்று பல சிறுவர் பாடல்களை யாத்தார்.'மாம்பழம்','அக்கா''பொன். இராமநாதன்' ஆகிய சிறுவர் இலக்கியப் படைப்புகளைத் தந்துள்ளார்.

அடிப்படை மொழித்திறன் விருத்திக்கு எழுத்தறிதல், சொல்லறிதல், பொருளறிதல், எண்ணக் கருவாக்கம் உருவாக்கல் போன்றவை விளங்குகின்றன. இவற்றை முன்நிறுத்தி தமிழவேள் க.இ.க.கந்தசாமி 'பாலர்மலர்' நூலை வெளியிட்டார். பன்மொழிப் புலவர் த.கனகரத்தினம் 'சிறுவர் பாடல்' நூலை வெளியிட்டார். கவிஞர் த.துரைசிங்கம் சிறுவர் இலக்கியத்தில் தடம் பதித்தவர். சிறுவர் கதை, பாடல். கட்டுரை எனப் பல நூல்களை எழுதி வெளியிட்டவர். சிறுவர் இலக்கியத்துக்காக இலங்கை அரச இலக்கிய விருதுகளைப் பலமுறை பெற்றவர். சிறுவர் இலக்கியங்கள் பற்றிய நுர்ல்களையும் எழுதியுள்ளார்.

முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். சிறந்த புலமை மிக்கவர். கொழும்பு சாஹிராக் கல்லூரியில் இருபத்தியெட்டு ஆண்டுகள் தமிழாசிரியராகச் சேவைசெய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தேசிய கீதத்தைத் தமிழில் மொழி மாற்றம் செய்தவர். அத்துடன் இலங்கையின் சுதந்திர விழா மரதன் ஓட்டப் பாடல் போட்டியில்முதல் பரிசினைப் பெற்றார். சிறுவர் களுக்காகப் பல்வேறு பாடல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவர் எழுதிய பாடல் ஒன்று இப்படி உள்ளது.

### கோழிக் குஞ்சே வா

குஞ்சே குஞ்சே வா வா வா
கோழிக் குஞ்சே வா வா வா
அஞ்சா திங்கே வா வா வா
அரிசி பொறுக்க வா வா வா

பற்றைக் குள்ளே மறைவினிலே
பருந்துக் கஞ்சிப் பதுங்கிடவே
கற்றுத் தந்ததார் சொல்வாய்
கலங்கா தென்முன் வா வா வா

காகம் பற்றும் பூனை கவ்வும்
கள்ளப் பாம்பு கவர வரும்
சோகம் கொண்டு பதறாதே
தொடர்ந்து காப்பேன் வா வா வா

உன்தா யுன்னைச் சிறகுள்ளே
உருகி யணைக்கும் சீர்கண்டேன்
உன்தாய் போலும் தாயுண்டோ
உவந்து காப்பேன் வா வா வா

பண்டிதர் த.சச்சிதானந்தன் ஈழகேசரிக் காலத்தில் சிறந்த சிறுகதை, நாவல்களை எழுதியவர். சிறந்த கவிஞராகவும் திகழ்ந்தவர். இவரது உணர்ச்சிமிக்க கவிதைகள் சுவையுடையனவாக இருக்கும். சந்தக் கவிதைகளைப் படைப்பதில் வல்லவர். அவரது சிறுவர் பாடல்கள் பாடுவதற்கு இனிமையாக இருக்கும். நமது தோட்டத்தில் விளையும் மரக்கறி, பயிர்களைக் கொண்டு வெருளியை இவ்வாறு உருவாக்கியுள்ளார்.

### காய்கள் கட்டிய வெருளி

கந்தன் செய்த தோட்டத்தில்
    காய் கனிகள் அதிகமாம்
வந்து ஆடு மாடுகள்
    வளர்ந்த வற்றைக் கடிக்குமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்கள் ஒன்று கூடியே
காக்க வெருளி கட்டின
வாய்கள் திறந்து பேசின
வழி வகுத்துக் கொண்டன

சாம்பல் நீற்றுப் பூசினி
தலைக்கு வருவேன் என்றது
பாம்பு போன்ற புடலங்காய்
பக்கக் கைகள் என்றது.

பானை போன்ற பூசினி
பருத்த வயிறு என்றது
ஆனை மிள காய்களும்
அழகு மூக்காய் ஆகின.

வெண்டிக் காய்கள் தாங்கள்தாம்
விரல்கள் என்று தொங்கின
நொண்டிக் கால்கள் ஆயின
நுனி வளர்ந்த கரும்புகள்.

கனிந்த நிறத் தக்காளி
கன்னம் என்று நின்றது
நனைந்த பயற்றங் காய்களும்
நாலு மயி ராயின

முறுக்கு மீசை இல்லை என்று
முணு முணுத்துக் கொள்ளவே
நறுக்கி வைத்த அறுகம்புல்
நானி ருப்பேன் என்றது

கண்ணில் லாத வெருளி என்ற
காய்கள் கவலை கொண்டன
அண்ணன் நாவல் பழவனார்
அதற்கு வந்து குந்தினார்

மாடு வந்து பார்த்தது
மனிதன் மீசை கண்டது
நாடு காடு தாண்டியே
நாலு காலிற் பாய்ந்தது.

கனக. செந்திநாதன் ஈழத்தில் சிறுகதை, நாவல் எழுதுவதில் ஈடுபட்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த இரசனை விமர்சகராக விளங்கியவர். சிறுவர் இலக்கியத் துறையில் ஈடுபாடு உடையவர். தமிழ் நாட்டின் 13 கவிஞர்களின் சிறுவர்பாடல்களையும், 12 ஈழத்தின் கவிஞர்களின் சிறுவர் பாடல்களையும் ஈழநாடு பத்திரிகையில் 'சிறுவர் கவிநயம்' என்ற தொடர் கட்டுரையாக வெளியிட்டார்.

யாழ்- குரும்பசிட்டியைச் சேர்ந்தவர். பாட்டி அழுகின்றாள் என்ற சிறுவர் பாடலையும் தந்தவர்.

**பாட்டி அழுகின்றாள்**

சிறிய பூச்சி பிடிக்கவே
பெரிய பல்லி ஊர்ந்தது

பெரிய பல்லி பிடிக்கவே
கரிய பூனை பதுங்கிற்று

கரிய பூனை பிடிக்கவே
வெள்ளை நாயும் பாய்ந்தது

அல்வாயூர் மு.செல்லையா: இலங்கை வானொலி கவிதைப் போட்டியை நடத்தியது. அப்போட்டியில் 'புதிய வண்டு விடுதூது' என்ற கவிதையை எழுதி முதற்பரிசான தங்கப் பதக்கத்தை அல்வாயூர் மு.செல்லையா பெற்றார். சிறந்த கவிரான செல்லையா சிறுவர்களுக்காகப் பல நூல்களை எழுதியுள்ளார். சிறுவர் விரும்பும் இயற்கைப் பொருள்கள் இவரது கவிதைகளின் பாடுபொருளாக இருக்கும். ஒரு குழந்தை சந்திரனைப் பார்த்து தாயிடம் வினா கேட்கிறது. அதனை இப்படிக் கவிஞர் தருகிறார்.

**சந்திரன்**

அம்மா வெளியே வா அம்மா
அழகாய் வெளியே பாரம்மா
சும்மா இருந்த சந்திரனைத்
துண்டாய் வெட்டின தாரம்மா?

வட்டத் தோசை சுட்டது போல்
வானில் இருந்த சந்திரனை

துட்டச் சிறுவன் யாருடைத்தான்?
சொல்வாய் உண்மை தோன்றிடவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டிப் பயலவன் வெட்டிவிட்டு
மற்றப் பாதியை எங்கெறிந்தான்?
கிட்ட மினுங்கும் கட்டியெல்லாம்
வெட்டிய மிச்சத் துண்டுகளோ?

பல சிறுவர் நூல்களை எழுதியுள்ள மு.செல்லையாவின் வளர்பிறை என்ற சிறுவர் பாடல் நூல் சிறுவர் முதல் பெரியோர் வரை படித்து இன்புறும் வகையில் அமைந்துள்ளது எனப் பாராட்டப் படுகிறது.

அனு.வை. நாகராஜன் சிறுவர் இலக்கியத் துறையில் அதிகம் ஈடுபாடு கொண்டவர். சிறந்த கவிஞர். மதுரகவி என்று அழைக்கப்பட்டவர். அவர் இன்று இல்லை. அமரராகிவிட்ட அனு.வை.நாகராஜன் தேடலும் பதிதலும், சிறுவர் சிந்தனைக்கதைகள், சிறுவர் கவிதையில் புதிய சிந்தனைகள், சிறுவரும் அவர்களி-ன் அறிவுசார் சாதனங்களும்,சிறுவர் பழமொழிக்கதைகள் போன்ற நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

அவரது சிறுவர் பாடல் இவ்வாறு உள்ளது.

**சட்டை**

பட்டுப் புதுச் சட்டை
பள பளக்கும் சட்டை
இஸ்டம் போல நாமும்
இட்டுக் கொள்ளும் சட்டை

அப்பா துணி வாங்க
அம்மா தைத்தசட்டை
இப்ப தைத்த சட்டை
இனிய பட்டுச் சட்டை

நாளை மறு நாளை
நாங்கள் கோவில் போகும்
வேளை தன்னில நானும்
விரும்பிப் போடு வேனே

கண்ணன் என்னைப் பார்பான்
கம்பீ ரமாய் நானம்
வண்ண நடை போட்டு
வடிவு காட்டு வேனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரு தைத்த தென்றே
அனை வருமே கேட்பர்
பேரைச் சொல்ல மாட்டேன்
பிரிய அம்மா என்போன்.

## வெற்றிவேல் விநாயகமூர்த்தி

வெ.விநாயகமூர்த்தி திருக்கோயிலைச் சேர்ந்தவர். ஆசிரியராக, அதிபராகச் சேவையாற்றி ஓய்வு பெற்றவர். சிறுவர் இலக்கியத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர். பாடல்களையும். கதைகளையும் எழுதி வெளியிட்டவர். பல நூல்களுக்கு ஆசிரியராக உள்ளார். அவரது 'பாலர் பாமாலை' என்று நூலில் பல நல்ல பாடல்கள் உள்ளன என்பர்.
உதாரணத்துக்கு ஒரு பாடல்:

### எண் பாட்டு

ஒன்றும் ஒன்றும் இரண்டு
ஊதிப் பறக்கும் வண்டு
இரண்டும் ஒன்றும் மூன்று
எங்கள் விரலைப் போன்று

மூன்றும் ஒன்றும் நாலு
முன்னால் செல்வான் வேலு
நாலும் ஒன்றும் ஐந்து
நாம் அடிப்போம் பந்து

ஐந்தும் ஒன்றும் ஆறு
அம்மா தருவாள் சோறு
ஆறும் ஒன்றும் ஏழு
ஆச்சி குடிப்பாள் கூழு

ஏழும் ஒன்றுமன் எட்டு
எனது சட்டை பட்டு
எட்டும் ஒன்றும் ஒன்பது
எண்ணத் தெரியும் ஐம்பது

ஒன்பதும் ஒன்றும் பத்து
ஓடிப் போகிறான் முத்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் த.துரைசிங்கம்

ஈழத்தில் சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் கசணிமான பங்கு கவிஞர் த.துரைசிங்கம் அவர்களுக்கு உண்டு. ஆசிரியராக, அதிபராக. கல்விப் பணிப்பாளராகச். சேவை செய்து ஓய்வு பெற்றவர். ஓய்வின் பின்தான் கவிஞர் துரைசிங்கம் சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் அதிகம் ஈடுபாட்டோடு உழைக்கிறார். சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள், சிறுவர் கட்டுரைகள், வினா விடைகள் என எழுதிக் குவிப்பவர். சிறுவர் பாடல்களுக்காகப் பலமுறை இலங்கை அரசின் அரச இலக்கிய விருதுகளைப் பெற்றவர்.

சிறுவர் இலக்கிய வளர்ச்சி பற்றியும், எழுத்தாளர்கள் பற்றியும் ஆய்வுகள் செய்து ஆவணமாக்கியுள்ளார். தமிழ், சைவசமயம் போன்ற பாடப்பரப்புகளில் ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். பண்டிதர் த. துரைசிங்கம் பாடசாலை மாணவர்களுக்கு ஏற்றவகையில் இலக்கண நூல்களையும் எழுதியுள்ளார். அவரது 'கதைப் பாடல்' என்ற சிறுவர் நூல் பலராலும் பாராட்டப் பட்டதாகும்.

### எங்கள் பாடசாலை

பாலர் நாங்கள் படித்திடும்
  பாட சாலை பாருங்கள்
பாடம் நாமும் படித்திட
  பாட சாலை வாருங்கள்

பாலர் நாங்கள் கூடுவோம்
  பரந்த வெளியில் ஆடுவோம்
பாலர் சுத்தம் பேணுவோம்
  பலரும் புகழ வாழுவோம்

குப்பை கூளம் கூட்டியே
  குறித்த குழியில் கொட்டுவோம்
எப்பொ ழுதும் சுத்தமாய்
  இருக்க நாங்கள் பழகுவோம்.

## வானொலி மாமா அமரர் வ.இராசையா

வானொலி மாமாவாக வலம்வந்தவர்தான் அமரர் வ.இராசையா. அவர் சிறந்த கவிஞரும் சிறுவர் இலக்கிய ஆர்வலருமாவார். அவர் இலங்கை வானொலியில் சேவையாற்றும் போது வானொலி அண்ணாவாக, வானொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமாவாக அருமையாகக் கதை , கவிதை, பாடல், நாடகம் போன்ற துறைகளில் நிகழ்ச்சிகளைத் தயாரித்து சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு உதவினார். இச்செயற்பாடு சிறுவர் மத்தியில் புதியதொரு திருப்பு முனையாக அமைந்தது.

மனிதரை மதிக்கும் பண்பினை அவரிடமிருந்து பலர் கற்றுக் கொள்ள வேண்டும். நல்ல சிறுவர் இலக்கியங்களைத் தேடி அவற்றைப் பத்திரிகைகளில் எழுதுவார். சந்தணக் கிண்ணம் புதிய பூக்கள் என்பன அவரால் புனையப் பெற்றவையாகும்.
அவரது ஓரு சிறுவர் பாடல் இவ்வாறு உள்ளது.

**புதுவித மனிதர்**

நாங்கள் புதுவித மனிதகுலம்
இயந்திர வடிவில் பிறந்தஇனம்

றோபோ என்பது எங்கள் பெயர்
மின்வலு அதுவே எங்கள் உயிர்.

இரத்தமும் தசையும் எமக்கில்லை
இருதயம் என்பது எமக்கில்லை

கணினி என்கிற பெயரினிலே
அதிசய மூளை நமக்குண்டு

கணினி தருகின்ற வேலைகளைக்
கச்சிதமாய் நாம் செய்கின்றோம்

இரும்பைக் கடைந்து வெட்டுகிறோம்
எரி வாயு வினால் ஓட்டுகிறோம்

அழகாய் வர்ணம் தீட்டுகிறோம்
ஆணிகள் எடுத்துப் பூட்டுகிறோம்

பிளாஸ்ரிக் பொருட்கள் ஆக்குகிறோம்
வேண்டாப் பொருட்களை நீக்குகிறோம்

பொருள்களைச் சரையாய் சுற்றுகிறோம்
பொதிகளை வண்டியில் ஏற்றுகிறோம்

களைப்பும் சோர்வும் இல்லாமல்
உழைக்கும் மனிதர் நாங்கள்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் 'சண்டியன் ஓநாய்','சந்தணக் கிண்ணம்','புதிய பூக்கள்' ஆகியன சிறந்த சிறுவர் இலக்கியப் படைப்புகளாகும். அத்துடன் அவர் சிறுவர் இலக்கியங்களைப் படித்து நடுநிலை நின்று திறனாய்வுகளை எழுதி உற்சாகப் படுத்துவார்.

கவிஞர் வாகரைவாணன் (செ.அரியரத்தினம்) சிறந்த கவிஞராகவும் மொழியியல் வல்லுநராகவும் ஆய்வாளராகவும் விளங்குகிறார். வரலாறுகளைத் தேடி ஆராய்ந்து உண்மைகளை எழுதிவருகிறார். மட்டக்களப்பு வரலாறு, பனிச்சங்கேணி அரசி போன்ற பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். சிறுவர் இலக்கிய கர்த்தாவாக வலம் வருகிறார். சிறுவர்களுக்காகப் பல கதைகளையும், பல சிறுவர் பாடல் நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

**மரம்**

நிலத்தில் காலை ஊன்றி
நிற்கும் அந்த மரந்தான்
பலத்த காற்றைக் கண்டும்
பயமே கொள்வ தில்லை

தலையின் மீது பூக்கள்
தங்கை அவளைப் போல
இலைகள் நீள மாகும்
எங்கள் கைகள் போல

சின்னச் சின்ன மொட்டு
செவியில் தோடு போல
பென்னம் பெரிய காய்கள்
பிடுங்கித் தின்ன லாமே

வட்ட மான பழங்கள்
வாயை ஊறச் செய்யும்
எட்டிப் பிடுங் லாமோ?
ஏற வேண்டும் தம்பி.

மழை பொழியச் செய்யும்
மரம் வளர்க்க வேண்டும்
நிழல் மரங்க ளாலே
நிலம் குளிர்ந்து போகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'போது' என்ற தரமான இலக்கியச் சிற்றிதழை நடத்தினார். சிறந்த ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இன்றும் தொடர்ந்து எழுதி வருகிறார்.

கவிஞர் துரையர் என அழைக்கப் படும் சு.துரைசிங்கம் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். சிறுவருக்கான பல ஆக்கங்களைப் படைத்துள்ளார். 'வயல் செய்வோம்', 'நட்பே உயர்வு', 'பாலன் வருகிறான்', 'தோட்டத்தில் ஆடு' போன்றன துரையரின் ஆக்கங்கள் ஆகும். அவர் ஒட்டிசுட்டான் தமிழ் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றும் போது அவரது சிறுவர் பாடல் நூல் வெளியீட்டு விழாவில் நான் கலந்து கொண்டேன். அவரது ஒரு பாடல் இவ்வாறு உள்ளது.

**ரோசாவும் நேருவும்**

வட்ட ரோசாப் பூவேநீ
வாடி வதங்கி இருப்பது மேன்
இட்ட முள்ள நேருவையே
இழந்த துடிப்பின் சோகமதோ?

கட்டுக் கடங்கா சோகத்தால்
கண்ணீர் வடிக்கும் பாலரையே
விட்டு நேரு சென்றதுமேன்
விளம்பு மலரே இப்போது.

நேரு எம்மைக் கண்டதுமே
நேரில் வந்து அணைப்பரே
பாரில் நாங்கள் தவித்திடவே
பறந்தார் எங்கே சொல்மலரே.

நேருத் தாத்தா போலேநாம்
நேர்மை யுடனே வாழ்ந்துவிடின்
யாரும் எம்மை வெறுப்பாரோ
யாமும் அவரபோல் நடந்திடுவோம்.

பேராசிரியர் சி. மௌனகுரு நாடறிந்த நாடக விற்பன்னர். சிறுவருக்காக நிறைய நாடகங்கள் தயாரித்து நெறிப்படுத்தியவர். சிறந்த கவிஞரும் ஆவார். நாட்டுக் கூத்தை உயிராக மதிப்பவர். சிறுவர்களுக்கான பாடல்களை இயற்றியுள்ளார். சிறுவர்களை இட்டு அவர் காணும் கனவு இவ்வாறு அமைந்து உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னச் சின்னக் குருவிகள்

சின்னச் சின்னக் குருவிகள்
சிறுவர் சிறுமிக் குருவிகள்
வண்ண வண்ணச் சட்டை போடும்
வாயா டிக்குரு விகள்

அம்மா சொல்லைக் கேட்டு நடக்கும்
அன்பு நெஞ்சக் குருவிகள்
அநீதி கண்டு கோபம் கொள்ளும்
அதி உயர்ந்த குருவிகள்

நாளை இந்த ஈழநாட்டை
நடத்தப் போகும் குருவிகள்
ஈழநாட்டின் புகழை உலகில்
ஏற்றப் போகும் குருவிகள்.

நீலாவணன் என்ற புனைபெயரைக் கொண்ட சின்னத்துரை . சிறந்த கவிஞராகத் திகழ்ந்தவர். அவர் தனது கவிதைகளை இராகத்தோடு பாடுவார். துறைநீலாவணையைச் சேர்ந்தவர். ஆசிரியராகச் சேவைசெய்து ஓய்வு பெற்றவர். பல்வேறு கவிதை நூல்களை எழுதியவர். சிறுகதை,கட்டுரை என இலக்கியச் சேவையில் ஈடுபட்டவர்.

சிறுவர் பாடல்களை எழுதி சிறுவர் இலக்கியத்துக்கு உரமானவர். அவரது பாடல் ஒன்று பேராசிரியர் கலாநிதி செ.யோகராஜா தொகுத்த ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியத்தில் இடம்பெற்றுள்ளது. அதனை இங்கே உங்களுக்காகத் தரப்படுகிறது.

## கடற்கரைக்குப் போனோம்

கடற் கரைக்குப் போனோம்
கரையில் நின்று பார்த்தோம்
அடிக்கும் அலை கண்டோம்
ஆனந்த மேகொண் டோம்

கத்தரிக் கோல் போன்ற
காலி ரண்டை ஏந்தி
கொரத்துக் கொத்தாய் நண்டு
கோலம் போடக் கண்டோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகைப் பூப் போலே
மண்ணில் சிப்பி, சங்கு
கொலவ்ளை யாகக் கண்டோம்
கூட்டி அள்ளிக் கொண்டோம்

தோணி யொன்று கடலில்
துள்ளித் துள்ளி நெளிந்தே
மீன் பிடிக்கப் போக்கும்
மெத்தப் பய மாகும்

தலையில் சால்வை கட்டி
தாம்பு கையில் பற்றி
வலை இழுக்கும் தோழர்
வாயில் வரும் பாட்டு

சூரை வாளை காரல்
சூடை சாளை சீலா
பாரை பாலை மீன்கள்
பட்ட தந்த வலையிலே

எங்க ளுக்கும் மீன்கள்
இரண்டு மூன்று தந்தார்
கொண்டு வீடு வந்தோம்
குழம்பு வைத்துத் தின்றோம்.

திமிலைத் துமிலன் என்ற கிருஸ்ணபிள்ளை சிறந்த கவிஞரும்,சிறுவர் இலக்கிய கர்த்தாவும் ஆவார். அவர் மட்டக்களப்பு திமிலை தீவில் பிறந்தவர். மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். தமிழகம் நடத்திய குழந்தை பாடல் போட்டியில் பங்கு பற்றித் தங்கப் பதக்கம் பெற்றவர். உலகக் காவியமான 'கலேவெலா' என்ற நூலை தமிழில் மொழிமாற்றம் செய்தபோது அதன் கவித்துவம். கவிதை நடை போன்றவை கட்டுக்குலையாது இருப்பதை திமிலைத்துமிலனே செவ்வை பார்த்தார். அவரது தவளைக் கூத்துச் சிறார்களைக் குதூகலப் படுத்துவதாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவளைக் கூத்து

டும் டும் மழை மழை டும் டும்
கும் கும் தவளைகள் கும் கும்

சல்லரி நான்கு மத்தள மேழு
தவிலும் சேர்ந்தே கும் கும்

மெல்லென வீங்கும் புல்லாங் குழலும்
வீணையும் சேர்ந்தே கும் கும் கும்

குப்பை மிதந்திடும் பள்ளத்தி லேயொரு
கூத்து நடக்குது தெய் தெய் தெய்

செப்பு நெருஞ்சியும் வட்டத் தகரையும்
சீலை விரிக்குது மெய் மெய் மெய்

பச்சைத் தேரை பிடில் வாசிக்க
பனை மரத் தேரை குழலூத

மொட்டைத் தவளை நாட்டிய மாட
மோசங்கு கேட்குது ஞொய் ஞொய் ஞொய்

கொட்டும் மழையும் தாளம் போடக்
குளிரும் காற்றும் கவி பாடிட

பொட்டல் தரையில் தவளைகள் சேர்ந்தே
போடுது கூத்து தெய் தெய்.

சிறந்த கவிஞரான திமிலைத் துமிலன் நல்ல சிறுகதை, நாவல் போன்றவற்றிலும் சிறந்தவராக விளங்குகின்றார்.

திமிலை மகாலிங்கம் திமிலைத் துமிலனின் தம்பியாவர். 'புள்ளிப் புள்ளி மானே' என்ற சிறுவர் பாடல் நூலைத் தந்தவர். அந்நூலுக்கு வடக்கு கிழக்கு மாகாணப் பண்பாட்டுத் திணைக்களத்தினால் அரச இலக்கிய விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டது. மட்டக்களப்பில் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவராகத்திகழ்கின்றார். அத்துடன் அவர் 'கனி அமுதம்' என்ற சிறுவர் பாடல் நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவச வாகனம்**

கவச வாகனம் வருகிறது
கவன யீனமாய்த் திரியாதீர்
அவசர மாகப் போகிறது
அபாயம் ஏதோ நடக்கிறது

ஆமை போலே இதன்தோற்றம்
அதற்கு நடுவே போர்வீரன்
தேவை வந்தால் படபடென்று
திசைகள் நான்கும் வெடிபாயும்

திமிலைக் கண்ணன் திமிலைத் துமிலனின் தம்பியாவார். சிறுவர் பாடல்களையும், சிறுவர் கதைகளையும் தொகுத்துள்ளார். அவரது பாடல் ஒன்று அடிமை வாழ்வு. குருவியின் வாழ்க்கையைச் சித்தரிக்கிறது.

**அடிமை வாழ்வு**

வானம் பாடிக் குருவியொன்று
வயலில் முட்டை விட்டதடா
கானம் பாடிப் பறந்ததடா
கவலை யற்று வாழ்ந்ததடா.

ஏனோ ஒருநாள் ஒரு சிறுவன்
எண்ணி யேதும் பாராது
நானே உன்னை வளர்க்கின்றேன்
நல்ல உணவு தருகின்றேன்

தீனைத் தின்று கொழுத்திடலாம்
தினமும் மகிழ்ச்சி பட்டிடலாம்
வான் மழைக்குத் தப்பிடலாம்
வறுமை யின்றி வாழ்ந்திடலாம்

என்று ஆசை காட்டியவன்
இருந்த குருவி முட்டையெலாம்
கொண்டு வீட்டில் வைத்தவுடன்
குருவி அடையும் காத்ததடா

பூனை ஒன்று வந்ததடா
புதுமை யிதனைக் கண்டதடாத
நானே உன்னை உண்கின்றேன்
நல்ல உணவு என்றதடா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவி பறக்கப் பார்த்ததடா
 கூடு முட்டித் தடுத்ததடா
வருவோர் போவோர் ஆசைவழி
 வலிந்து சாகும் வாழ்விதடா.

என்றே குருவி தவித்ததடா
 இரக்க மற்ற பூனையதோ
தின்று ஆசை தீர்த்ததடா
 தெரிய அடிமை வாழ்விதடா.

வித்துவான் கமலநாதன் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியின் அதிபராகச் சேவையாற்றி ஓய்வு பெற்றவர். குழந்தைகளின் விருப்பை அறிந்தும் இனிய சந்தங்களைத் தெரிந்தும் எளிமையான சொற்களைக் கொண்டும் கமலநாதன் சிறுவர் பாடல்களை இயற்றியுள்ளார். அவரது புவனாவின் பூனைக் குட்டி என்ற பாடல் இவ்வாறு உள்ளது.

### புவனாவின் பூனைக் குட்டி

புவனா வளர்த்த பூனைக் குட்டி
 துள்ளி ஆடுதே - அதைப்
பார்த்திருந்த எலிக ளெல்லாம்
 துள்ளி ஓடுதே.

சின்னச் சின்னக் காலை வைத்து
மெல்லப் போகுதே – சோறு
தின்ன வந்த எலியை எல்லாம்
கொல்லப் போகுதே.

வட்ட வட்டக் கண்ணை அது
வெட்டிப் பார்க்குதே – சட்டி
பெட்டிக்குள் இருந்த எலிகள்
எட்டிப் பார்க்குதே.

தமிழ்மணி அகளங்கன் சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் தனது பங்களிப்பை அளித்துக் கொண்டு வருகிறார். சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள், சிறுவர் கட்டுரைகள், சிறுவர் நாடகங்கள் எனப் பலதுறைகளிலும் தடம் பதித்துள்ளர். அகளங்கனின் 'செந்தமிழும் நாப்பழக்கம்' என்ற சிறுவருக்கான கட்டுரை நூல் சிறுவர்களின் பேச்சுத் திறனை மேம்படுத்துவதற்காக தந்துள்ளார். அந்த நூல் பல சிறார்களுக்கு பேச்சு வன்மையை ஏற்படுத்தப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்துணையாக இருக்கிறது. அவரது சிறுவர் கதைகளில் வன்னியின் இயற்கை வனப்புக்களும். வாழ்வியல் நுட்பங்களும் சிறுவர்கள் ஊடாக வெளிப்படுத்துகிறார்.

அவரது சிறுவர் பாடல்கள் மிகச் சிறந்தனவாக உள்ளன. 'பந்து அடிப்போம்','சின்னச் சிட்டுகள்','சிரிக்க விடுங்கள்','சுட்டிக் குருவிகள்', என்பன அகளங்கனின் சிறந்த படைப்புகளாகும்.

## சிரிக்க விடுங்கள்

சிரிக்க விடுங்கள் - எங்களைச்
சிரிக்க விடுங்கள்

சிறுவர் நாங்கள் பேதம் இன்றிச்
சேர்ந்து மகிழ்ந்து பாடி ஆடிச்
சிரிக்க விடுங்கள் - எங்களைச்
சிரிக்க விடுங்கள்

அடிமை களாய் வீட்டுக் கூலி
ஆளாய் எம்மை ஆக்க வேண்டாம்
அடி தடிகிகுள் எம்மைச் சேர்த்து
ஆயு தத்தால் அழிக்க வேண்டாம்

சாதி பேதச் சாக் கடைக்குள்
தள்ளி எம்மை வீழ்த்த வேண்டாம்
சமய பேதப் போர்கச் களத்தில்
தலை உடைக்க அனுப்ப வேண்டாம்.

சிரிக்க விடுங்கள் - எங்களைச்
சிரிக்க விடுங்கள்

## ஒற்றுமைப் பாட்டு

ஒற்றுமை யாய்க் கூடுவோம்
ஒன்றாகவே ஆடுவோம்
உலகம் எங்கள் கையில் என்று
உரிமை கொண்டு பாடுவோம்
காற்றும் எங்கள் ஆணைகேட்கும்
கடலும் எங்கள் பாதம் நக்கும்
வேற்றுக் கிரகம் கூட எங்கள்
விழி அசைவைப் பார்த்து நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றிருந்த மாந்தர் இன்று
நெறியை நன்கு போற்றியே
ஏற்றம் மிக்க மானுடத்தின்
எலும்பு நிமிரப் பாடுவோம்.

எறும்பு போல சுறுசுறுப் பாய்
என்றும் வாழப் பழகுவோம்
இரும்பு போல உறுதியான
இதயம் கொண்டு நிமிருவோம்.

யுத்தம் அற்ற உலகை ஆக்கும்
யுக்தி பெற்ற சிறுவர நாம்
இரத்த வெறிப் பேய்கள் அற்ற
இனிய உலகை ஆக்குவோம்.

**மண்டூர் மு.சோமசுந்தரம்பிள்ளை**

கவிஞர் மு.சோமசுந்தரம்பிள்ளை இயற்கை வனப்புமிக்க அழகான மண்ணடூரைச் சேர்ந்தவர். கவிஞர்களுக்கு கற்பனையை ஊட்டி அழகு பார்க்கும் ஊர். ஈழத்தில் முன்னணிக் கவிஞர்களில் ஒருவர் சிறந்த கவிஞராக விளங்கியவர். மேடையில் கவிதையை இரசனையோடு பாடுவார். ஆசிரியராக, அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். மரபுக் கவிதை பாடுவதில் வல்லவர். பல கவிதை நூல்களை எழுதி வெளியிட்டவர். சிறுவர் இலக்கியம் படைத்தவர். கவிஞர் மு.சோமசுந்தரம் பிள்ளையின் சிறுவர் பாடல் கற்பனை வளம் மிக்கது. பேராசிரியர் செ.யோகராஜா தொகுத்த ஈழத்துச் சிறுவர் பாடல்களஞ்சியம் நூலில் ஒரு பாடல் உள்ளது. அதனை உங்களுக்காகத் தருகிறேன்.

**மின்மினி**

மின்னி மின்னிப் பறந்து போகும் மின்மினி – உன்
மேனியிலே வெளிச்ச மேது மின்மினி
துன்னும் இருள் வேளையிலே மின்மினி – உன்
சோதி உடல் தோன்றுதல்லோ மின்மினி
(மின்மினி...)
பட்டப் பகல் வேளையிலே மின்மினி – உன்
பளபளக்கும் மேனி யெங்கே மின்மினி
விட்டு விட்டுச் சுடருகின்றாய் மின்மினி – உன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளை யாட்டுத் தோழரெங்கே மின்மினி
(மின்மினி...)

தங்கத்திலே பதிக்க நல்ல முத்துநீ – ஒளி
தந்து சிரித்தோடுகின்றாய் மின்மினி
அங்க மெல்லாம் பளபளக்கும் மின்மினி – உன்
அழகினிலே மயங்கி விட்டேன் மின்மினி
(மின்மினி...)

மண்டூர் தேசிகன் மு.சோமசுந்தரம்பிள்ளையின் மகன். தந்தையைப் போலவே தேசிகனும் பிரபலமான இலக்கியவாதி. சிறுவர் இலக்கியங்களுக்காகப் பல்வேறு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற்றவர் இலங்கை கல்வி அமைச்சின் தேசிய நூர்லக அபிவிருத்திச் சபையினால் அவரது நூலினைத் தேர்ந்தெடுத்துப் பிரசுரிக்கும் நிதியை வழங்கியது. ஆசிரியராக. அதிபராகக் கடமையாற்றி இளவயதிலேயே இயற்கை எய்திவிட்டார். அவரது இழப்பு இலக்கிய உலகினுக்குச் சிறப்பாகச் சிறுவர் இலக்கிய உலகினுக்குப் பேரிழப்பாகும்.

பேராசிரியர் செ.யோகராஜா தொகுத்த ஈழத்துச் சிறுவர் பாடல்களஞ்சியம் நூலில் ஒரு பாடல் உள்ளது. அதனை உனங்களுக்காகத் தருகிறேன்.

**மாட்டு வண்டில்**

வண்டில் அதோ வண்டில்
மாடு இழுக்கும் வண்டில்
எருத்து மாட்டு வண்டில்
இரண்டு சில்லு வண்டில்.

வெள்ளை மாட்டு வண்டில்
மெல்லச் செல்லும் வண்டில்
நெல்லு மூட்டை ஏற்றியே
நிறைந்து போகும் வண்டில்.

புகை எழுப்பா வண்டில்
புனித மான வண்டில்
வயல் வெளிக்குச் சென்று
வைக்கோல் ஏற்றும் வண்டில்.

இரைச்சல் இல்லா வண்டில்
எங்கும் போகும் வண்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளும் குத்தாச் சில்லு
உள்ள நல்ல வண்டில்.

பண்டிதர் து.தெட்சணாமூர்த்தி 'பால் நிலா','குயிலோசை','உறவுகள்' ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். மு.பொன்னம்பலம் மிகச்சிறநத இலக்கியவாதியாவார். அவர் பன்முக ஆளுமையாளர். 'நான் அரசன்','செவ்வாய் மனிதன்,' போன்ற ஆக்கங்களை தந்துள்ளார்.

புலவர் பார்வதிநாதசிவம் இலகு நடையில் தேர்ந்தெடுத்த சொற்களைக் கொண்டு சிறுவர் இலக்கியங்களைப் படைத்துள்ளார். அவரின் 'மழலை மலர்கள்,'மகாஜனன்'என்பன சிறந்த படைப்புகளாகும்.

மூத்த கவிஞர்களில் தில்லைச் சிவன் முக்கியமான இடத்தினை வகிப்பவர். மரபுக் கவிதைகள் எழுதுபவர். சிந்தாமணி அவரது கவிதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்து வந்தது. அவரது சிறுவர் பாடல்கள் புதுமையான விடயங்களைத் தாங்கி வந்தன. அவற்றுள் ஒன்று இவ்வாறு உள்ளது.

மரதன் ஓட்ட மெயிலின் பின்னால்
குதிரை கோச்சு மெயில் பெற்றோம்
குதிரை வேகம் குறைவு என்றே
கொண்டு வந்தார் மெயில் ரயில்

சீச்சி எங்கள் அவசரத்தை
தெரிந்து கொள்ளாச் சுடுமூஞ்சி
கோச்சி விட்டு விமானத் தபால்
போட்டோம் விரைந்து போகவே.

விமானம் வீட்டு முற்றத்திலே
விசில் அடித்தா மெயில் தரும்?
ஞானத் தாலே இருந்த இடத்திலே
நாங்கள் செய்தி அறிகிறோம்

கண்கள் இமைக்கும் நேரத்தில்
கணினி தரும் 'ஈமெயில்'
மண்ணின் இந்தச் சாதனையை
மனோ வேகம் என்பாரோ?

கலாபூஷணம் தாமரைத்தீவான் சோ.இராசேந்திரம் அற்புதமான கவிஞர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியாரக. அதிபராகச் சேவையாற்றி ஓய்வு பெற்றவர். சிறந்த கவிஞரான தாமரைத் தீவான் இதுகால வரை நாற்பது நூல்களை எழுதிவெளியிட்டுள்ளார். 'அரும் பா' கவிஞரின் நாப்பதாவது நூலாகும். அந்த நூலில் இருநூறு தலைப்புகளில் பல்வேறு கவிதைகளைத் தரிசிக்கலாம். அவரது கவிதைகளை வெறிற்றாஸ் வானொலி ஒலிபரப்பியது. சிறுவர்களுக்காக ஏறத்தாழ 12 சிறுவர் பாடல் நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். நகைச்சுவையோடு பாடல்களை எழுதுவார். திருக்குறளை அப்படியே ஒப்புவிப்பார். தமிழின் புகழ் பாடும் கவிஞர். சிறார்களுக்காகக் கட்டுரைகள் பல எழுதியுள்ளார். மாணவர்களுக்காக உரையாடல் பலவற்றையும் எழுதியுள்ளார்.

அவரது உரையாடல்கள் நகைச்சுவை நிறைந்ததாக அமைந்திருக்கும். பள்ளிச் சிறார்கள் மேடையில் அவற்றை அரங்கேற்றும் போது பார்வையாளர்களின் சிரிப்பொலி வானை முட்டும். அத்துடன் அவர்களின் சிந்தனையைத் தூண்டிவிடும்.சிறுவர் பாடல்களுடன் கதைகளும், நாடகங்களும் எழுதியுள்ளார். அவரது ஆக்கங்களில் மண்வாசனை கமழும். அவரது பல ஆக்கங்கள் வன்செயல் அனர்த்தங்களால் அழிந்து விட்டன. எஞ்சியிருந்த சிலவற்றை இன்று அவ்வப்போது நூலாக்கித் தருகிறார். கவிதை அரங்குகளில் கவிஞரின் வருகைக்காகப் பெரிய கூட்டம் காத்திருக்கும். கவிதை அரங்கு முடியும் வரை கூட்டம் கலைந்து செல்லாது.

அவரது 'சிறுவிருந்து' என்ற சிறுவர் பாடல் நூலில் இருந்து ஒரு பாடலும், சிட்டுப் பத்து என்ற சிறுவர் பாடல் நூலில் இருந்து ஒரு பாடலும் இவ்வாறு உள்ளன.

**கற்பகம்**

என்னைக் கொஞ்சம் பாருங்கள்,
  என்ன வேண்டும் சொல்லுங்கள்!
பொன்னை அள்ளித் தருபவள்
  பூமி மீது வேறுயார்?

சின்னக் கட்டுப் பெட்டியா,
  தெளித் தெடுக்கும் சுளகதா?
பின்னும் வண்ணப் பாய்களா,
  பிள்ளைக் கேற்ற விசிறியா?

வீட்டுக் கான மரங்களா,
  விறகுக் கான துண்டமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏட்டுக் கான ஓலையா,
இனிமைக் கண்டு –கட்டியா?

குடிக்க நல்ல பாணியா,
கொதுப்பவிடும் பனாட்டு – மா?
கடித்திடும் கிழங்கு மா,
கற்ப கத்தில் ஏதில்லை?

சிட்டுப் பத்து என்ற சிறுவர் நூலில் இருந்து
பார்த்து...

மயிலைப் பார்த்து மந்தியார்
மரத்தில் நடனம் ஆடினார்!
குயிலைப் பார்த்துக் கோழியார்
கொக்க ரித்துத் திரிகிறார்!

புலியைப் பார்த்துப் பூனையார்
போடு கின்றார் வரிகளை!
எலியைப் பார்த்து எறும்பரும்
எடுத்து வைப்பர் மீசையை!
ஆமை பார்த்து முயலரும்
அதிக முட்டை இடுவரோ?
ஊமை பார்த்து யாவரும்
உதடு மூடிக் கொள்வரோ?

குதிரை மானைப் பார்த்ததும்
கொம்பு வைக்கப் போகுமோ?
எதுவும் இருந்த மாதிரி
இருந்து கொள்ளல் நல்லதே!

ஆரையூர்அமரன் மட்டக்களப்பு ஆரைம்பதியைச் சேர்ந்தவர். சிறுவர் இலக்கியத்தில் நாட்டங் கொண்டவர். பல சிறுவர் பாடல்களை எழுதியவர். ஆரையூர் அமரனின் சிறுவர் பாடல் அம்புலிமாமாவில் வெளிவந்தது. அழ.வள்ளியப்பாவின் பாராட்டைப் பெற்ற கவிஞர்களில் ஒருவராகத்திகழ்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதி பாட்டு

பாட்டு நல்ல பாட்டு – சின்னப்
பாலர் பாடும் பாட்டு
பாட்டி என்னை வீட்டில் - தினம்
பாடச் சொல்லும் பாட்டு

பாலும் பழமும் சேர்த்து – அதில்
பாகும் தேனும் வார்த்து
பாப்பா என்னைப் பார்த்து – பாடிப்
பருகத் தந்த பாட்டு

பாப்பா பாப்பா என்று – கவி
பாரதி பாடிய பாட்டு
பாடப் பாடக் கேட்டு – எங்கள்
பாட்டி மகிழும் பாட்டு

ஜின்னாஹ் சரிபுதீன் மருதமுனையைச் சேர்ந்தவர். புலவர்மணி சரிபுத்தீனின் மகனாவார். கொழும்பில் மருத்துவராகத் தொழில் புரிகின்றார். சிந்தாமணி அவரது கவிதை உலகினுக்கு களமமைத்துக் கொடுத்தது. கவிதை, சிறுகதை, நாவல் எனப் பல்துறைகளில் தடம் பதித்தவர். சிறுவர் இலக்கியத்திலும் கரிசனைகொண்டவர். இலங்கையில் காவியம் படைப்பதில் தலைசிறந்தவர். பல காப்பியங்களைப் படைத்துப் புகழீட்டியவர். காப்பியக்கோ எனப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டவர்.

அவரது சிறுவர் இலக்கியப் பாடல் ஒன்று இவ்வாறு உள்ளது. அதனைக் கீழே காணலாம்.

### இரும்பு மூளைப் பெட்டி

கணனி என்னும் கருவியினைக்
காட்டு வேன்நான் வாதம்பி
கவனமாக அக்கா சொல்லைக்
கேட்டு மனங் கொள்ளுவாய்

சதுர மாக இருக்கு மிந்த
திரையினில் தான் அனைத்துமே
தெரியு மிங் கே பாரிதனைச்
சொல்வார் மௌஸ் என்றடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலியைப் போல இருக்குதக்கா
எதற்கு இது கணினியில்
பலகை ஒன்று2ம் இருக்கிறதே
பங்கு அதற்கு என்னவோ?

நினைத்த தனைத் திரையில் பதிக்கத்
தேவை இவை விரல்களில்
துணையி னோடு அனைத்தனையுமே
செய்ய முடியும் அறிகுவாய்!

பக்கத்தில் குந்தி இருக்கும்
பெட்டி எதற்குக் கூறக்கா
மிக்க பயன் கொண்ட கணினி
மூளை இது தானடா?

பயனிதனால் என்ன நமக்கு
புரியும் படி சொல்லக்கா
பணன்கள் கோடி கணினியினால்
படித்துப் படித்துப் புரிந்துகொள்!

ஆலங்கேணி இயற்கை அழகு மிளிரும் அற்புதக் கிராமம். அங்கொரு 'கேணி' உள்ளது. அக்கேணியிலிருந்து இருபுறமும் சமதூரத்தில் இரண்டு ஆலைமரங்கள். ஒன்றின் கீழ் கோயில். மற்றதின் கீழ் பாடசாலை. சுற்றிவர உப்புநீர்ச் சிற்றாறுகள் ஊர்ந்து வரும். அந்தக் கிராமத்தைப் பார்கின்றவர்களும் கவிதை பாடுவார்கள். அங்கு பல இலக்கியவாதிகள் உள்ளனர். கவிமணி அம்.கௌரிதாசன் தபால் அதிபராகச் சேவை செய்தவர். மேடைக்கவிதை அரங்குகளில் கணீரென்ற குரலில் சந்தக் கவிபாடும் அற்புதக் கவிஞர் அவர். தான் எழுதிய கவிதைகளைப் பாடமாகச் சொல்வார். பல கவிதைப் போட்டிகளில் பங்கு கொண்டு பரிசுகளைப் பெற்றவர். பல கவிதை நூல்களுக்குச் சொந்தக்காரர். சிறுவர் பாடல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள் ஒன்று 'மழலைப் பா' என்ற சிறுவர் நூலில் நல்ல பாடல்கள் உண்டு.

அவற்றில் ஒன்று கீழே உள்ள ஊஞ்சல் என்ற பாடலாகும்.

ஆலைமரக் கிளையில் போட்ட
அழகு ஊஞ்சல் ஆடுவோம்
காலை மாலை நேர மெல்லாம்
களித்து நன்றே ஆடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி தங்கை அனைவருமே
தாளம் போட்டு ஆடுவோம்
அம்மா, அப்பா கண்டு மகிழ
ஆனந் தமாய் ஆடுவோம்

பழைய நாட்டுப் பாடல் பாடி
பரவ சமாய் ஆடுவோம்
இளைய மைந்தர் இலட்சி யங்கள்
இனிது வெல்லும் ஆடுவோம்.

ஈச்சையூர் தவா என்ற புனை பெயரில் எழுதியவர் ச.தவராசா. அவர் அதிபராகதி/ஈச்சந்தீவு விபுலானந்த வித்தியாலயத்தில் சேவை செய்து ஓய்வு பெற்றவர். இன்று நம்மிடையே இல்லை. பல சிறுவர் ஆக்கங்களையும். கவிதைகளையும் எழுதியுள்ளார். அவரின் 'பாரதி பாமஞ்சரி' என்ற சிறுவர் நூலில் அருமையான பாடல்கள் உள்ளன. பல கவிதை அரங்குகளில் கவிதை பாடி பாராட்டுப் பெற்றவர்.

யோக. யோகேந்திரன். யோகா யோகேந்திரன் ஆசிரியராக, அதிபராகச் சேவை செய்து ஓய்வு பெற்றவர். திருக்கோயிலைச் சேர்ந்தவர். ஆசிரியர்களாகச் சேவை செய்வது ஒரு வரம். ஆசிரியர்களாகச் சேர்ந்தவர்கள் அனைவரும் அந்தச் சேவையைப் புனிதமாகக் கருதுகிறார்களா என்பது அவர்களுக்குத்தான் தெரியும். யோகா யோகேந்திரன் தனது தொழிலைப் பூஜீப்பவர். சிறார்களைப் புரிந்து கற்பிப்பவர். அதனாலேயே சிறுவர் இலக்கியத்திலும் மிளிர்கின்றார்.

பாடல், சிறுகதை, கவிதை எனப் பல்துறை சார்ந்த இலக்கியங்களைப் படைக்கின்றார். அவரது பாடல் பின்வருமாறு அமைந்துள்ளது.

**கீரைகளை உண்போம்**

கீரை வகையைத் தினம் உண்போம்
சீராய்ச் சேர்த்து நாம் உண்போம்
விரும்பி நாமும் கீரை யு ண்டால்
இரும்புச் சத்து கிடைத் திடுமே.

பொன்னாங் காணி சிறு கீரை
புத்தம் புதிதாய் முருங்கையிலை
ஞானக் கீரையாம் தூதுவளை
ஞாபக சக்திக்கு வல்லாரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்தை ஆற்றும் மாம்பாங்சான்
தேகம் குளிரப் பசளிவகை
அகத்திக் கீரை நோய்போக்கும்
அதிகம் விரும்பி உண்போமே.

தினமும் நாமொரு கீரைவகை
உணவில் சேர்ப்பதால் நன்மையுண்டு
மலிவாய்க் கிடைக்கும் கீரைகளால்
பொலிவாய் சத்துக்கள் பெறலாமே

ஆலங்கேணி தந்த கவிஞர்கள் பலர். அவர்களுள் மு.சுந்தரம், ஆலையூரன் க.தங்கராசா, கேணிப்பித்தன் ச.அருளானந்தம். அம். கௌரிதாசன் ஆகியோர் சிறந்தவர்களாக விளங்குகின்றனர். ஆலையூரன் க.தங்கராசா ஆசிரியராக, அதிபராக, கல்விப்பணிப்பாளராகச் சேவை செய்தவர். அவரது சிறுவர் பாடல்களில் சிந்தனையை வளர்க்கும் செய்திகள் நிறைந்திருக்கும். வீரகேசரி, தினக்குரல் போன்ற தேசிய நாளிதழ்களில் சிறுவர்களுக்கான கதைகளையும் . பாடல்களையும் எழுதியுள்ளார். 'குழந்தை உலகம்' நல்லதொரு சிறுவர் பாடல்களைக் கொண்ட நூலாகும்.

**கோழிக் குஞ்சு**

'கோழிக் குஞ்சே கோழிக் குஞ்சே
கோழிக் குஞ்சாரே
தோளில் உன்னைத் தூக்க வாராய்
கோழிக் குஞ்சாரே

சின்னச் சின்னக் கால்கள் உள்ள
கோழிக் குஞ்சாரே
தின்ன உனக்குத் தீனி தாறன்
கோழிக் குஞ்சாரே'....

என்று அவரது பாடல்கள் செல்கின்றன.

கவிஞர் க. யோகானந்தன் இயற்கை அழகு பொங்கும் சம்பூரில் பிறந்தவர். ஆசிரியராகச் சேவையில் ஈடுபட்டவர். இன்று அதிபராகக் கடமையாற்றுகிறார். சிறந்த கவிஞரான க.யோகானந்தன் 'உண்மை என்றும் உயிர்பெறும்' என்ற கவிதை நூலை எழுதியவர். அதற்காக 2006 இலங்கை அரச இலக்கிய (சாஹித்ய விருது) விருது பெற்றவர். சிறுவர்களுக்காக நிறையவே எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறார். அவர் 'மழலைக்கோர் பாட்டு' என்ற சிறுவர் பாடல் நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

**சிறிய குருவி**

சிறிய சிறிய குருவியே
சிறகு விரிக்கும் குருவியே
ஊசிச் சொண்டை நீட்டியே
உணவு ஊட்டும் குருவியே

பட்டுச் சட்டை யார்தந்தார்
பறக்கச் சிறகு யார்தந்தார்
மெட்டுப் போட்டு யார்தந்தார்
மெல்லிசை கூட்டிப் பாடுகிறாய்

திருமதி. ஜெனிரா தௌபீக் அமான் ஆசிரியையாகக் கடமையாற்றுகிறார். திருகோணமலை கிண்ணியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சிறுகதை, கவிதை. கட்டுரை என எழுதிவருபவர். இதுவரை ஏறத்தாழ எட்டு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள் ஆறு சிறுவர் இலக்கியங்களாகும். இவற்றிலும் ஐந்து சிறுவர்களுக்கான பாடல்களைக் கொண்ட நூல்களாகும்.

வானம் என்னும் அரங்கிலே
வறுத்து எடுத்த பொரியினை
விதைத்து வைத்தது யாரது?
விளக்கம் ஒன்று தாருங்கள்

சூரியக் கதிரின் சூட்டிலா,
சோளப் பொரிகள் பொரித்தன?
காற்று மெல்ல தொட்டதாலா
கண்கள் சிமிட்டும் தாரகை?

எட்டி எடுத்து உண்பதற்கு
ஏணி ஒன்றைத் தாருங்கள்
குட்டித் தம்பி கேட்கிறான்
கொடுக்க எம்மால் முடியுமா?

மல்லிகைப் பூ என்று எண்ணியே
மதிதான் கொண்டு சென்றதோ
வெள்ளை நிறத்துப் பூக்கள் தான்
வெள்ளி என்று ஆனதோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிண்ணியாவைச் சேர்ந்த திருமதி. பாயிஸா அலி அவர்கள் சிறந்த ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். இவர் இதுவரை இரு சிறுவர் பாடல் நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். 'தங்கமீன் குஞ்சுகள்' என்ற சிறுவர் நூல் அருமையான சிறுவர் பாடல்களைக் கொண்டது. எனப் பாராட்டப் பட்டது. அவரது சில பாடல்களை ஆரம்பக் கல்விப் பாடநூலில் சேர்த்துள்ளனர்.

சித்தி அமரசிங்கம் மனதால் ஒரு குழந்தையே. தனது மனைவியின் பெயரைத் தன் பெயரின் முன் சேர்த்து 'சித்தி அமரசிங்கம்' என்று பயன்படுத்துபவர். எந்த எழுத்தாளனைச் சந்தித்தாலும் அவரது நூலை வாங்கி விற்றுக் கொடுத்து உதவும் உள்ளங் கொண்டவர். 'ஈழத்து இலக்கியச் சோலை' என்ற வெளியீட்டகத்தை நிறுவி பலருடைய நூல்களை வெளிக் கொண்டு வந்தவர். சிறந்த நடிகனாகவும் நாடக எழுத்தாளராகவும் திகழ்ந்தவர். குங்குமம் என்ற சஞ்சிகையையும் நடத்தினார். அவரது 'இராவண தரிசனம்' சிறந்த நாடக நூலாகும். சிறுவர்களுக்கான பாடல்களை எழுதி வெளியிட்டுள்ளார் 'அச்சாக் குட்டி' என்ற அவரது சிறுவர் நூலில் சிறுவர்களுக்கு ஏற்ற நல்ல பாடல்கள் உள்ளன.

அறிஞர் வேலாயுதம் அவர்களின் மைந்தன் வே.தங்கராசா. அவர் சிறந்த ஆசிரியராக, அதிபராகச் சேவைசெய்து ஓய்வு பெற்றவர். தம்பலகாமத்தில் கலை, இலக்கியத் தொண்டாற்றியவர்களின்வாழ்க்கை வரலாற்றை ஆவணப் படுத்தியுள்ளார். சிறுவர் இலக்கியம் படைப்பதைத் தனது பேறாகக் கருதுபவர். 'ஆண்டவனைக் கண்டதுண்டா'? என்ற சிறுவர் பாடல் நூலினை எழுதி வெளியிட்டுள்ளார். சிறுவர்களின் சிந்தனையைத் தூண்டும் பாடல்களை அந்நூலில் தந்துள்ளார்.

## உயர்ந்த வாழ்க்கை

கதிரவனைப் பாருங்கள்
காலை மாலை வருகிறான்
பெருகும் ஒளியினைத் தருகிறான்
புவியில் உள்ளோர் வாழவே

வெட்டிக் கொத்திக் கிளறினும்
வெட்கம் சிறிதுமை இன்றியே
பெட்டி நிறையக் காய்கனி
பூமி அன்னை தருகிறாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரப் பறக்கும் மேகங்கள்
உயிர்கள் அனைத்தும் வாழவே
பொழியும் மழையை மண்ணிலே
பயிர்கள் செழித்துப் பயன்தரும்

கரைந்து உண்ணும் காக்கையார்
கருத்து ஒன்றை நமக்குத்தான்
விரைந்து சொல்ல முயல்கிறார்
விரும்பி அதனை ஏற்போமே

பகுத்து உண்டு வாழ்வதே
பார் புகழும் அறமதாம்
கொடுத்து உதவி வாழ்கின்ற
கொள் வழியே உயருவோம்

செ.ஞானராசா. திருகோணமலை அன்புவழிபுரத்தில் வாழ்கிறார். அதிபராகச் சேவை செய்கிறார். திரு.செ.ஞானராசா ஒரு பிறவிக் கவிஞன். மேடையரங்குகளில் கணீர் என்ற குரலில் கவிதை பாடுவார். அவரது கவிதைகளில் சமுதாயத்தைச் சூழ்ந்துள்ள அவலங்கள் கனலாகப் பறக்கும். சிறுவர் பாடல்களில் நல்ல கருக்களைக் காணலாம். சிறுவர்களுக்கான கதைகளில் இயற்கையழகு இழையோடும். அவரது 'சிறுவர் பா அமுதம்' என்ற சிறுவர் பாடல்கள் அடங்கிய நூல் கல்வி அமைச்சின் நூலக அபிவிருத்திச் சபையின் பரிசினைப் பெற்றது. 'பாவைப் பிள்ளை','பாடி மகிழ்வோம்' என்பன அவரது ஏனைய சிறுவர் பாடல் நூல்களாகும்.

### குருவிக் குஞ்சு

குருவிக் குஞ்சு கூட்டிலே
குடி இருக்கும் காட்சியை
அருமைத் தம்பி தங்கையே
அருகில் வந்து பாருங்கோ.

பஞ்சு மெத்தை போலவே
படுத்து உறங்கும் வீட்டினை
குஞ்சு வாழ அமைத்தது
குருவித் தாயின் திறனலவோ?

தாயின் நினைப்பு உள்ளது
தந்தை உழைப்பு நல்லது
வாயில் இரையைக் கவ்வியே
வந்து ஊட்டி மகிழுதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.செ.ஞானராசா 'பருந்தும் கோழிக்குஞ்சும்.' என்ற சிறுவர் கதை நூலையும் எழுதியுள்ளார்.

திருமதி. சுகிலா ஞானராசா திரு. ஞானராசாவின் துணைவியாராவார். பாடசாலை அதிபராகச் சேவை செய்கிறார். வேண்டிய நேரத்தில் சிறுவருக்கான பாடல்கள் கிடையாத போது தானே பாடல்களை எழுதிக் கற்பிப்பதாகக் கூறுவார். சிறுவர்களுக்காகப் பாடல்கள் எழுதுவதில் வல்லவராகத் திகழ்கிறார். 'சின்னச் சிட்டுக் குருவி' என்ற சிறுவர் பாடல் நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

**சிட்டுக் குருவி**

சின்னச் சிட்டுக் குருவியே
சிறகடித்துப் பக்கம் வா
அன்னந் தண்ணி இல்லாமல்
அலைந்து திரிதல் வேண்டாமே

பஞ்சுப் போர்வை உன்மேனி
பார்த்துப் பொறுக்கு உன்தீனி
பஞ்சம் இல்லை உன்வாழ்வில்
பாடி மகிழ்வாய் நம்காவில்

வட்டம் இட்டு வருவாயா
வந்தென் கையில் அமர்வாயா
தொட்டுப் பார்க்க ஆசைதான்
தொடமுன் பறந்து போவாயா ?

திருமதி.ராணி சீதரன் சிறந்த ஆசிரியராகப் பணியாற்றி இன்று திறந்த பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகச் சேவை புரிகிறார். சிறந்த சிறுகதை எழுத்தாளர். கட்டுரையாளர். திருகோணமலையை வாழ்விடமாக்கக் கொண்டவர். சிறுவர் பாடல்களை எழுதி வெளியிட்டவர்.

**உணவு**

நெல்ல ரிசிச் சோறு
நல்ல சத்து உள்ளது

மெல்லப் பிசைந்து உண்ணவே
மெதுவாய்த் திடமும் சேருமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பம் பாலப் பமாம்
அருகு கருகி இருக்குமாம்

## கவிஞர் ஏ.எம்.ஏ. றசூல்

இலக்கிய மணம் வீசும் கிண்ணியா மண்ணிலிருந்து சிறுவர் இலக்கியம் செய்யும் படைப்பாளிகள் சிலரிலிருந்து ஒருவராக கவிஞர் ஏ.எம்.ஏம். றசூல் அவர்கள் விளங்குகின்றார்.

அவரின் "குதூகளிக்கட்டும்" என்னும் சிறுவர் பாடல் தொகுதி வெளிவந்தது. இந்நூலில் கல்விச் சுற்றுலா, அறிவு, வானொலி, சட்டை, விமானம், சைக்கிள், கணனி என சிறுவர் அறிவுத் தேடலுக்கான பாடல்களைத் படைத்துள்ளார்.

பாட்டி தந்த சட்டை
பூக்கள் நிறைந்த சட்டை
மாமா தந்த சட்டை
மாங்காய்ப் பூச் சட்டை

**கணினி**

அஞ்சாமல் படிக்கலாம் கணினி
ஆளுமை வளர்த்திடும் கணினி -
அலுவலகம் எங்குமே கணினி
ஆவனப்படுத்தும் கணினி
உலகத் தகவலறிய கணினி
பல்வேறு பயன் பெற கணினி

அன்பு காட்ட வேண்டும் என்று அடையாளப்படுத்தும் பாடல் இது.

அம்மாவுக்கு அன்பு காட்டுங்கள்
அப்பாவுக்கு அன்பு காட்டுங்கள்
அம்மம்மாவுக்கும் அன்பு காட்டுங்கள்
அப்பப்பாவுக்கும் அன்பு காட்டுங்கள்
குழந்தைகளுக்கும் அன்பு காட்டுங்கள்
குரவருக்கும் அன்பு காட்டுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி. மனோ பற்குணம். ஆசிரியராகப் பணிபுரிந்து, பின்னர் திருகோணமலைக் கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். சிறுவர்களுக்காக பாடல்களை எழுதி வெளியட்டவர். அவரது பட்டாம் பூச்சி என்ற சிறுவர் பாடல் இவ்வாறு உள்ளது.

**பட்டாம் பூச்சி**

பட்டாம் பூச்சி பற பற
பாடிப் பாடிப் பற பற
சிட்டாய் நீயும் பற பற
சிற கடித்துப் பற பற

பூ மேலே பற பற
பூரிப் போடு பற பற
காலைத் தேடிப் பற பற
கல கலப்பாய் பற பற

நிறம் கற்கப் பற பற
நீலம் மஞ்சள் சிகப்பு ஊதா
கறுப்பு வெள்ளை நாவலென
காட்டித் தரவே பற பற

ஒன்றாய்ச் சேர்ந்து பற பற
ஒற்று மையாய் பற பற
நன்றாய் பார்க்க பற பற
நாம் படிக்கசப் பற பற

கிண்ணியாவைச் சேர்ந்த எம்.எம்.ரி. சஜாத் சிறுவர்களுக்காகச் சிறுவர் இலக்கியங்களைப் படைத்து வருகிறார். திருகோணமலை சீனக்குடாவில் அமைந்துள்ள பிறிமா மா ஆலையில் மின் இணைப்பாளராகச் சேவை செய்கிறார். அவர் சிறந்த கவிஞன். தனது இலக்கியஆற்றலால் பல பரிசுகளும், பாராட்டுக்களும் பெற்றவர். பல்வேறு பட்டங்களுக்குச் சொந்தக் காரராகத் திகழ்கின்றார். இதுவரை ஏறத்தாழ நான்கு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள் இரண்டு கவிதை நூல்களாகும். இரண்டு சிறுவர் பாடல் நூல்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது 'செல்லமே' என்ற சிறுவர் பாடல் நூலுக்குத் தேசிய சாஹித்ய விருது கிடைத்துள்ளது. 'ஓய்வு கிடைப்பது அரிது. அப்படிக் கிடைக்கும் நேரத்தில் இலக்கிய முயற்சியில் ஈடுபடுகிறேன்' என்று எம்.எம்.ரி. சஜாத் கூறுவார்.

சின்னச் சின்னக் குயில்கள் - தோகை
சிலிர்த்து ஆடும் மயில்கள்
வண்ண வண்ணக் கிளிகள் - அள்ளி
வீசும் கிள்ளை மொழிகள்

மான்கள் துள்ளி ஓடும் - மரக்
கிளையில் குயில்கள் பாடும்
பூவில் வண்டுகள் மொய்கிகும் - நறுந்
தேனைச் சுவைத்து நிற்கும்

காலைத் தென்றல் வீசும் - தேன்
கனியில் அணில்கள் கீசும்
மாலைப் பொழுது மறையும் - காகம்
மயங்கி கூட்டில் உறையும்.

வந்தது தென்றல் காற்று – அது
வசந்த கால ஊற்று
எந்த இதய நாற்று – அவன்
இசைக்கும் இனிய பாட்டு!

சஜாத்தின் பாடல் படிப்பதற்கு ஓசை நயத்தைக் கொடுக்கும். சிறார்களுக்குப் பொருத்தமான எளிய நடையில் உள்ளன.

வி. என். எஸ். உதயச்சந்திரனின் 'பாட்டும் படமும்' என்ற சிறுவர் பாடல் நூல் சிறுவருக்கு ஏற்ற வகையில் எழுதப்பட்டுள்ளது. அவரின் 'மரத்தடி நிழலில்' என்ற உரையாடல் நூல் அற்புதமான படைப்பாகும் எனக் கூறுவர்.

## பீ.ரீ. அஸீஸ்

கிண்ணியாவைச் சேர்ந்த பி.ரி. அஸீஸ் பொதுச் சுகாதார வெளிக்கள அலுவலராகச் சேவை செய்து ஓய்வு பெற்றவர். இயற்கையாகவே நாட்டார் பாடல்களைப் பாடவல்லவர். அவரது நாட்டர் இலக்கியச் சேவைக்காகப் பல நிறுவனங்களால் பாராட்டப்பட்டவர். பல பரிசுகளும், பாராட்டுக்களும் பெற்றவர். அவர் இதுவரை ஏறத்தாழ பத்து நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். சிறுவர் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர். நாட்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களில் ஆர்வம் உடையவர். நாட்டார் இலக்கியங்களைத் தேடிச் சேகரித்து ஆவணப்படுத்துவதில் ஈடுபாடு காட்டுபவர். அவர் எழுதி வெளியிட்ட சிறுவர் இலக்கியங்கள் பல கிழக்கு மாகாண சாஹித்திய மண்டலப்பரிசுகளைப் பெற்றுள்ளன. 'சிறுவர் பாடல்கள்','சின்னப் பாப்பா''தாலாட்டுப் பாடல்கள்' ஆகியன குறிப்பிட்டுக் கூறக்கூடியன. அவரின் பாடல் ஒன்று இவ்வாறு அமைந்துள்ளது.

**பறவைகள் கூட்டம்**

பறவை யாவும் ஒன்றாகப்
பாடிப் பாடிப் பறக்குது
சிறகு விரித்து அழகாக
வானில் வட்டம் போடுது!

உணவு தேடிச் சென்றதில்
இருக்கு மிடம் கண்டது
மனதில் இன்பம் பொங்கவே
உண்டு மகிழ்ந்து செல்லுது!

உறவு பேணி அவைகள்
ஒன்றா யிருந்து மகிழுது
குறைவு இன்றி வாழ்க்கையில்
குதூகலமாய் இருக்குது!

சுதந்திரமாய் அவைகள் திரியும்
அழகு ரொம்ப ஆனந்தம்
நாளைக் கென தேவையின்றி
வாழும் வாழ்க்கை சந்தோசம்!

பறவை போல சந்தோச
வாழ்க்கை எமக்கு கிடைக்குமோ?
நிறைவாய் மனதில் அன்புதான்
நித்தம் எம்மைச் சேருமோ?

கருணை யோகன் யாழ்ப்பாணம் கரணவாயைச் சேர்ந்தவர். கவிதை எழுதி இலக்கிய உலகில் உள்நுழைந்தவர். சிந்தாமணி அவரது கவிதைகளுக்கு இடமளித்து பிரபல்யமாக்கியது. சிறுவர் இலக்கியத்தில் நிலையான பரீச்சையம் உடையவர். ஆய்வுத்துறையில் தடம் பதித்து சிறுவர் இலக்கியங்கள் பற்றிய தேடல்களைச் செய்பவர். கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராக அரிய சேவையினைச் செய்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி செ.யோகராஜா சிறுவர் இலக்கியங்களின் செல்நெறிக்கு வழிகாட்டும் கட்டுரைகளை எழுதுபவர்.

சிறுவர்களுக்கான பாடல்களை எழுதியவர். அவரது பாடல் ஒன்று 'ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம்'என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. அத்தொகுப்பினைக் குமரன் புத்தக இல்லம் வெளியிட்டுள்ளது.

**ஆமை அண்ணா**

ஆமை அண்ணா ஆமை அண்ணா
ஓடி வாருங்கோ!
அடுத்த றோட்டில் வெடிச் சத்தம்
ஓடி வாருங்கோ!

ஆமி மாமா வாறாரே
ஓடி வாருங்கோ!
'ஐ டென்ரி காட்' எங்கே
தேடி வாருங்கோ!

கருணை யோகன் என்ற புனை பெயரோடு இலக்கிய உலகினுக்குள் நுழைந்தவர் இன்று ஆய்வுத்துறையில் ஈடுபட்டு கலை இலக்கியத்துக்கு உரமான தேடல்களை முன்வைத்து வருகின்றார். கலாநிதி.செ.யோகராஜா கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியாகச் சேவையாற்றியவர். பல்வேறு தேசிய நாளிதழ்களிலும், ஞானம் போன்ற முன்னணி சஞ்சிகைகளிலும் சிறுவர் இலக்கியங்கள் பற்றி ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

பேராசிரியர் கலாநிதி க.கைலாசபதி,பேராசிரியர் கா.சிவத்தம்பி போன்ற பல்வேறு அறிஞர் பெருமக்கள் சிறுவர் இலக்கியங்கள் பற்றி எழுதிய கட்டுரைகளையும் தனது கட்டுரைகளையும் சேர்த்து 'ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம்' என்ற பெயரில் தொகுத்தார். அதனைக் குமரன் புத்தக இல்லம் வெளியிட்டுள்ளது. இத்தொகுப்பு பல்வேறு தரப்பினருக்கும் அரும் பொக்கிஸமாக உள்ளது. அத்துடன் 'சிறுவர் பாடல் களஞ்சியம்' என்ற சிறுவர் பாடல் தொகுதியையும் தொகுத்துள்ளார்

இந்நூலையும் குமரன் புத்தக இல்லமே பிரசுரித்து வெளியிட்டுள்ளது. .

ச.அருளானந்தம் சிறுவர் இலக்கியம் படைப்பவர்களில் முக்கிய இடத்தில் இருப்பவர். சிறுவர் பாடல். சிறுவர் கதை. சிறுவர் நாவல். எனப் பலதுறைகளில் தடம் பதித்துள்ளார். சிறுவர் பாடல்களில் பல புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகளில் ஈடுபட்டுழைப்பவர். இற்றைவரை சிறுவர் பாடல்கள் நிறைந்த 20 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள் உள்ள பாடல்களில் சில கீழே உள்ளன.போ மழையே என்பது ஒன்றாகும்.

போ மழையே போ

எங்கள் வீடு குலைந்து போச்சு
இருந்த தெல்லாம் அழிஞ்சி போச்சு

போ மழையே போ

அம்மா போட்ட கோலம் போச்சு
அப்பா நட்ட செடிகள் போச்சு

போ மழையே போ

செய்து வைத்த காகிதக் கப்பல்
சித்திரத் தேரும் சிதைந்து போச்சு

போ மழையே போ

வெள்ளம் ஆறாய் பாய்ந்து ஓடுது
வீதி வளவு குளமாய் ஆச்சு

போ மழையே போ

அறுவடை முடிந்து நெற்கதிர் நனைந்து
பெறுமதி இல்லாப் பொருளாய் ஆச்சுது

போ மழையே போ

சிறுவர்கள் அதிகம் விரும்புவது அவர்கள் வாழும் வீடு. அதனையிட்ட ஒரு பாடல் இவ்வாறு உள்ளது.

## அழகு பொங்கும் வீடு

அழகு பொங்கும் வீடு – எங்கள்
அப்பா தந்த வீடு
பழகி வாழும் வீடு - எம்மை
பாது காக்கும் வீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல யன்னல் கதவும் - சுற்றி
நாலு பக்கம் உண்டு
மெல்லக் காற்று வந்து – எங்கள்
மேனி தொட்டுப் போகும்

அப்பா வெளியில் போனால் - எங்கள்
ஆட்சி நடக்கும் வீடு
கள்ளத் தீனி எடுத்து – நாங்கள்
களித்து உண்ணும் வீடு

வெள்ளைச் சுவரின் மேலே – எம்
வண்ணப் படங்கள் ஓடும்.
அப்பா தந்த செல்வம் - எங்கள்
அம்மா வாழும் இல்லம்.

## ஒலி நாடாக்களில் சிறுவர் பாடல்கள்

நவீன இலத்திறன் உலகில் புதுமைகள் புகுவது விந்தையல்ல. சிறுவர் பாடல்களை பால முறைகளில் வெளியிட்டு வருகின்றனர். ஒலிப்பதிவு செய்து ஒலிநாடா, இறுவட்டு, ஒளிப்படம் - விடியோ போன்னவற்றில் பதிந்து வெளியிடுகின்றனர்.இலங்கை வானொலியில் திருமதி. வித்தியா ஸ்ரீரங்கநாதன் கர்நாடக இசையில் சிறுவர் பாடல்களை வெளியிட்டுள்ளார். தேசிய கல்வி நிறுவகம் சிறுவர் பாடல்களுக்கு இசையமைத்து ஒலிநாடாவில் பதிந்து வெளியிட்டுள்ளது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொன்னம்மாவும் ஒலிநாடாவில் சிறுவர் பாடல்களைப் பதிந்து வெளியிட்டுள்ளார். எம்.எச்.எம்.ஸம்ஸ் 'வண்ணத்துப் பூச்சி' என்ற சிறுவர் பாடல்களை ஒலிப் பதிவு செய்து வெளியிட்டுள்ளார்.

திருகோணமலையில்,வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு முன்பள்ளி ஆசிரியர்களைச் சிறுவர் பாடல்களை எழுதத் தூண்டி அவற்றைத் திருத்தி வடிவமைத்தும் வேறு சிறுவர் பாடல்களைத் திரட்டியும் இசையமைத்தும் இறுவட்டுக்களாக வெளியிட்டுள்ளது.

திருகோணமலைக் கல்வி வலயத்தில் இசைத்துறை பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்த திருமதி தேவிகாராணி முருகுப்பிள்ளை பல சிறுவர் பாடல்களைத் திரட்டி இசையமைத்து **ITN-** 'ஐரிஎன்' சுயாதீனத் தொலைக்காட்சிச் சேவையில் ஒளிபரப்பச் செய்தார். ச.அருளானந்தத்தின் பல பாடல்கள் **ITN-**ஐரிஎன. சேவையில் இவ்வாறு ஒளிபரப்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலையில், வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு முன்பள்ளிக் கல்விக்கென ஒரு அலகினைத் தொடங்கி அதனூடாக முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கியது. அவர்களின் வாண்மை விருத்திக்காக 'புன்சிரிப்பு' என்ற மாதாந்தச் செய்தி மடலாக ஒரு சஞ்சிகையை வெளியிட்டது. இச்செய்தி மடல் தமிழ். ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளிவந்தது. இம் மடலின் ஊடாக முன்பள்ளி ஆசிரியர்களது ஆக்கத் திறனை வளர்க்கப் பல திட்டங்களை அறிமுகம் செய்தது. முன்பள்ளி ஆசிரியர்களை சிறுவர் பாடல்களையும், சிறுவர் கதைகளையும் எழுதத் தூண்டியது.

முன்பள்ளி ஆசிரியர்கள் எழுதி அனுப்பும் ஆக்கங்களைச் செவ்வை பார்த்து அவற்றைப் புன்சிரிப்பு மடலில் பிரசுரித்தது. அதற்குப் பொறுப்பாக ச.அருளானந்தம் இருந்தார். உதவிப் பணிப்பாளராக ஜெயா தம்பையா கடமையாற்றினார். 1998ல் தொடங்கப்பட்ட 'புன்சிரிப்பு' தொடர்ந்து 2002 வரைவெளிவந்தது. ச.அருளானந்தத்தின் பின் ஜெயா தம்பையா வடமாகாணத்துக்குச் செல்லும் வரை புன்சிரிப்புப் பூத்தது. பின்னர்காணாமல் போய்விட்டது.

## சிறுவர் பாடல்கள் எழுதி வெளியிட்டோர் பட்டியல்

ஈழத்தில் சிறுவர் பாடல்களை முதலில் எழுதி வெளியிட்டோரில் முன் நிற்பவர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் எனக் கூறுவர். அவ்வகையில் சிறுவர் பாடல்களை எழுதியவர்கள் ஏறத்தாழ 151 பெயர்களின் பட்டியலைத் திரட்டித் தருகிறேன்.இவர்கள் அனைவரினதும் ஆக்கங்களில் ஒன்றையேனும் தருவதற்கு விருப்பமே. ஆனால் இந்தநூல் விரிவடைந்து விடும். அதனால் சிலரின் பெயர்களை மட்டும் இந்நூலில் தருகிறேன்.

(1)நவாலியூர் சோமசுந்தரப் புலவராவார் (2) மா.பீதாம்பரம் (3) சி.அகிலேச சர்மா (4) வித்வான் க.வேந்தனார் (5) த.சச்சிதானந்தன, (6) தில்லச்சிவன், (7) கனக. செந்திநாதன், (8) யாழ்ப்பாணன், (9) சோ. தியாகராசா, (10) செ.கதிரேசபிள்ளை (கதிரேசன்), (11)அம்பி. குறமகள், (12) வ.இளையதம்பி, (13)தம்பு உபாத்தியாயர், (14) வெற்றிவேல் விநாயகமூர்த்தி, (15)ஜே.எஸ்.ஆழ்வாப்பிள்ளை, (16)த.கனகரத்தினம், (17) என்.எஸ்.முருகேசு, (18) சி.தங்கசாமி, (19) ஆரையூர்அமரன், (20) ஜெ.கே.சின்னத்தம்பிஜயர், (21)கே.கே.செபஸ்தியாம்பிள்ளை, (22) வை.இளையதம்பி, (23) சி.கார்த்திகேசு (சேந்தன்). (24) துறையூர் செல்லத் துரை, (25)வளவை வளவன், (26) மறைமுதல்வன் , (27) நமுனுகுல ராஜேஸ் (28) அ.சிறில், (29)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்.தம்பிப்பிள்ளை, (30) க.அழகரத்தினம், (31) குறமகள், (32) பா.மகாலிங்கசிவம், (33) மு.செல்லையா, (34) முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி, (35) அனு.வை.நாகராசன், (36) வ.இராசையா, (37) பா.சத்தியசீலன் (38) பண்டிதர்.க.வீரகத்தி. (39) (40) கேணிப்பித்தன்

ச.அருளானந்தம், (41) எம்.சி.எம். சுபைர( 42) எச்.எம்.எஸ்.ஷம்ஸ், (43) வெண் சங்கு வேல், (44) செல்வி.பாலதேவி, (45) கலியுகன், (46) சி.யோகேஸ்வரி, (47) ஆ.காமாட்சி, (48) வேலு, (49) ந.கிருஸ்ணராசா, (50) பி.பி.அந்தோனிப்பிள்ளை, (51) வன்னியூர் அறமகள், (52) கண்டி எம்.இராமச்சந்திரன் (53) ஏ.பி.வி.கோமஸ், (54) க.இ.க.கந்தசாமி (தமிழவேள்), (55) செல்வி .கு.உதயகுமார், (56) கோசுதா, (57) வித்துவான். எஸ்.இ.கமலநாதன், (58) கோப்பாய் சிவம், (59) திமிலைத்துமிலன், (60) திமிலை மகாலிங்கம். (61) திமிலை கண்ணன், (62) ச.அமிர்தநாதர், (63) இ.சிவானந்தன். (64) த.துரைசிங்கம். (65) சு.துரைசிங்கம், (66) யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியில் மாணவன்-6ம் வகுப்பு) செல்வன். தர்மேந்திரா, (67)ஜெனீரா தௌபீக். (68) பாயிஸா அலி, (68) அலிஅக்பர், (69) ஏ.எச.எம்.தௌபீக், (70) மனாப் றசூல், (71) ஏ.எம். அஸீஸ், (72) கவிஞர் ஹகார், (73) எம். எம்.ரி. சயாத் (சிறுவர் இலக்கியத்துக்கு சாஹித்ய மண்டலப் பரிசு பெற்றவர்) (74) பி.ரி. அஸீஸ்

(75) ஆலங்கேணி அம்.கௌரிதாசன், (76) நீலாவணன், (77) தாமரைத்தீவான். (78) ஆலையூரன். க.தங்கராசா, (79) தம்பலகாமம் வே.தங்கராசா (80) ஆரையம்பதி ஆ.தங்கராசா, (81) ஈச்சையூர்தவா, (82) ராஜம் புஸ்பவனம், (83) சிதம்பரபத்தினி, (84) பி.பி.அந்தோனிப்பிள்ளை, (85) வித்துவான். சி.குமாரசாமி (86). ஜே.கே.சீனித்தம்பி, (87) கல்வயல். குமாரசாமி, (88)அகளங்கன். (89) எஸ். ஞானராசா, (90) சித்தி அமரசிங்கம். (91) தம்பி தில்லைமுகிலன். (92) வாகரைவாணன். (93) யசோதா பாஸ்கரன். (94) அம்பி. (95) ச.வே.பஞ்சாட்சரம், (96) ச.பஞ்சாட்சர சர்மா , (97) மயிலங்கூடலூர், பி.நடராசன்(ஆடலிறை) (98). செ.குணரத்தினம், (99)மட்டுநகர் முத்தழகு, (100) கருணை யோகன், (101) மூனாக்கானா, (102) மாவை.வரோதயன், (105) பஸீல் காரியப்பர், (106) கவிஞர்.ஏ.இக்பால், (107) செம்பியன் செல்வி (மலர்சின்னையா), (108) மஹ்றூப்கரீம், (109) றகுமான் ஏ.ஜபார். (110) கவிஞர்.லிங்கதாசன், (111) சு.வில்வரத்தினம், (112) சபா.ஜெயராசா, (113) வைரமுத்து சுந்தரேசன், (114) மருத மைந்தன், (115) ஜின்னாஹ், (116) யோகா யோகேந்திரன், (117) ஆழியாள், (118) இரத்தினம் அப்புத்துரை, (119) மு.பொன்னம்பலம், (120) மொழிவரதன், (121) வி.என்.எஸ்.உதயச்சந்திரன்,

(122)ஆன் ரூபினி பிரான்சிஸ்,(123) ஜூட் திலீபன் பிரான்சிஸ், (124) மண்டூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.சோமசுந்தரம்பிள்ளை,(125) மண்டூர் தேசிகன், (126) ஈழத்துப் பூராடனார், (127)நாகூர்..ஏ. பாவா, (128) யாழ்ஜெயம், (129)சாரணா கையூம், (130) மனோண்மணி பற்குணம். (131) ராணி சீதரன், (132) ஷெல்லிதாசன், (133) எம். இக்பால், அலி, (134) சிவபாலு, (135) (மஹாகவி) து. உருத்திரமூர்த்தி (136) வ.செல்லையா, (137) திருமதி. ஞானராசா (138) கோசுதா (139) சரணாகையூம் (140) வி. கந்தவனம் (141) ஏறாவூர் தாவூத் (142) எம்.எஸ். பாலு (143) ஆனந்தன் (144) கலியுவன். (145) கவிஞர் க.யோகானந்தன் (146) வட்டுக்கோட்டை மு.இராமலிங்கம் (147) ம. பார்வதிநாதசிவம் (148) பண்டிதர் து.தெட்சணாமூர்த்தி (149) திருமதி. சுகிலா ஞானராசா (150) அருட்தந்தை அன்புராசா (151) மணிக்கவிராயர் (152) மன்னார் அமுது அந்தோனி முத்து ஆகியோர் சிறுவருக்கான பாடல்களை எழுதியுள்ளனர்.

இந்த எழுத்தாளர்களில் சிலரின் படைப்புக்களில் ஒரிரு பாடல்களை மேலேபார்த்தோம். இப்பாடல்கள் சிறுவர் இலக்கிய வரண்முறைகளுக்குள் வருகின்றனவா என்பதை நீங்களே தீர்மானியுங்கள். இங்கு தரப்பட்டுள்ள பாடல்கள் பல'ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம்' என்ற நூலில் உள்ளன. இந்நூல் பேராசிரியர் கலாநிதி.செ.யோகராஜா அவர்களால் தொகுக்கப் பெற்றது.. அந்நூலினைக் குமரன் புத்தக இல்லம் அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

## ஈழத்தில் சிறுவர் நாவல்கள்

தமிழகத்தில் கண்ணன் வெளியீடாக பல நாவல்கள் வெளிவந்தன. ஆர்வி, தே. பார்த்தசாரதி, லெயோ யோஸப், ப.கி.மூர்த்தி போன்றவர்கள் சிறுவர் நாவல்களை எழுதியுள்ளனர். தனியார்கள் நிறையவே சிறுவர் நாவல்கள் எழுதுகிறார்கள். வாண்டுமாமாவின் கதைகள் சிறுவர்களை ஈர்ப்பன. பல நிறுவனங்கள் சிறுவர் நாவல்களை எழுதி வெளியிடுகின்றன.

ஈழத்தில் சிறுவருக்கான நாவலை க.நவசோதி (1968) எழுதி வெளியிட்டார் அதுவே ஈழத்தின் முதலாவது சிறுவர் நாவலாகத் தெரிகிறது எனக் கருதுவர். அவரைத் தொடர்ந்து பலர் எழுதிவருகின்றனர். செங்கை ஆழியான் க.குணராசா, ஓ.கே.குணநாதன், கே. எம்.எம். இக்பால், அ.அருள்பாஸ்கரன், ஆலையூரன் க.தங்கராசா, தோப்பூர் எம்.ஏ. ஜவாத். கேணிப்பித்தன் ச.அருளானந்தம் (இதுவரை அவர் ஒன்பது சிறுவர் நாவல்களை எழுதியுள்ளார்). ஆகியோர் தரமான நாவல்களை எழுதியுள்ளனர்.

ஆலையூன் க.தங்கராசா'சங்கீதன்' என்ற சிறுவர் நாவலை எழுதி வெளியிட்டுள்ளார். இலங்கை கல்வி அமைச்சின் நூலக அபிவிருத்திச் சேவைகள் சபை சிறந்த சிறுவர் நாவலாகத் தேர்ந்தெடுத்துப் பரிசாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நாவலைப் பிரசுரிக்க நிதியையும் நல்கியுள்ளது. சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எவ்வாறு எதிர்கொண்டு வெற்றி பெறுகிறார்கள் என்பதை அழகாகச் சித்தரித்துள்ளார்.

மட்டக்களப்பு அமிர்தகழியைச் சேர்ந்த கலாநிதி. ஓ.கே.குணநாதன் பல சிறுவர் நாவல்களை எழுதியுள்ளார். தேசிய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் பல பரிசுகளையும் பெற்றுள்ளார். சிறுவர் இலக்கித்துக்காக அவர் பல சாஹித்ய விருதுகளைப் பெற்றுள்ளார். அவரது கதைப் புலம் இயற்கையாகவே இருக்கும். மரம் செடி, கொடி, பறவை, விலங்கு அனைத்தும் பேசும். வாசிக்க வாசிக்க அற்புதங்கள் வெளிப்படும். அருமையான சிந்தனைகளை கதையினுள் ஓடவிடுவார்.

அதேபோல் திருகோணமலையைச் சேர்ந்த அ.அருள்பாஸ்கரன் 'உதவும் உள்ளங்கள்' என்ற நாவலை எழுதியுள்ளார். முழுக்க முழுக்க பாடசாலை மாணவியர்களை மையப்படுத்தி எழுதப் பட்டுள்ளது. ஒரு நோயுற்ற மாணவியைக் காப்பாற்ற தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவியர் எடுத்துக் கொண்ட செயற்பாடுகளையும், துயரங்களையும் இந்நாவல் அற்புதமாகச் சித்தரிக்கிறது. இந்நாவலையும் இலங்கைக் கல்வி அமைச்சின் நூலக அபிவிருத்திச் சபையே தேர்ந்தெடுத்துப் பரிசாக அந்நூலைப் பதிப்பதற்கான நிதியையும் கொடுத்துதவியது. இந்நாவலை இலங்கை வாசகர்கள் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. ஆனாலும் அந்நாவல் கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தமிழ் இலக்கிய விழாவில் சிறந்த சிறுவர் நாவலாகத் தேர்ந்தெடுத்துப் பரிசும் பாராட்டும் அளித்து ஆசிரியரைக் கௌரவித்தது.

அருள்பாஸ்கரன் ஆசிரியராகச் சேவை செய்வதால் பாடசாலைப் பிள்ளைகளின் பிரச்சினைகளை இலகுவாகக் கண்டு கொள்ள முடிகிறது. பாடசாலை மாணவர்களின் ஒற்றுமை, பாலைகளுக்கிடையில் தோன்றும் பரஸ்பர நட்பு, உதவும் பண்பு, ஆசிரியர்களின் நேயம்,விபரிக்கப் படுகிறது.

அருள்பாஸ்கரன் சிறந்த ஓவியருமாவார். அழகிய ஓவியங்கள் நூலை அலங்கரிக்கிறது. பெரும்பான்மையாக சமூகத்தில் பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளை எவ்வாறு சமூகம் முகம் கொடுத்து உதவுகிறது என்பதை விளக்குகிறது. இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடாக இருப்பதால் அவர்களிடையே நல்லிணக்கத்தையும், சாந்தி சமாதானத்தையும் பிணைக்கும் வகையில் இந்நாவல் சித்தரிக்கப் பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேணிப்பித்தன் ச.அருளானந்தத்தின் 'காட்டில் கலவரம்' ''உல்லாசப் பயணம்'' மனதில் உறுதி வேண்டும்' ஆகியவை மிகச்சிறந்த சிறுவர் நாவல்கள் என தமிழறிஞரும், சிறந்த கவிஞரும், இலங்கை வானொலியில் 'வானொலிமாமா' வாகச் சேவையாற்றிய வ.இராசையா குறிப்பிடுவார்.

'காட்டில் கலவரம்' மட்டக்களப்பைக் கதைப்புலமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. மட்டக்களப்பின் படுவான்கரைக் காடுகளின் சிறப்பு சித்தரிக்கப் படுகிறது. மட்டக்களப்பு வாவியின் அழகும் சிறப்பும் விபரிக்கப் படுகிறது. 'உல்லாசப் பயணம்' திருகோணமலையின் இயற்கைத் துறைமுகம், கொட்டியாபுரத்தின் கரையோரக் கிராமங்களையும். சிறப்பாக சம்பூர் கிராமத்தின் பண்பாட்டின் விழுமியங்களையும் சிறார்களின் துணிகரச் செயல்களையும் விளக்குகிறது.

'மனதில் உறுதி வேண்டும்' திருகோணமலை யிலிருந்து கண்டி, பொதுவாக மலையகத்தைக் கதைக் களமாகக் கொண்டு எழுதப் பெற்றது. கலஹாவில் பாடசாலைப் பிள்ளைகளின் அருஞ்சேவை சித்தரிக்கப் படுகிறது. இந்நாவலையும் இலங்கை கல்வி அமைச்சின் நூலக அபிவிருத்திச் சபை தேர்ந்தெடுத்து அச்சிடும் நிதியை வழங்கியது. ச.அருளானந்தம் ஒன்பது சிறுவர் நாவல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

கே.எம்.எம்.இக்பால் மூதூரில் பிறந்து கிண்ணியாவைப் புக்ககமாகக்கொண்டு வாழ்கிறார். ஆசிரியராகவும், ஆசிரிய ஆலோசகராகவும் சேவைசெய்து ஓய்வு பெற்றவர். சிறந்த ஆசிரியராக விளங்கும் இக்பால் சிறுவர்களுக்கு அரிய கட்டுரை நூல்களை எழுதியுள்ளார். அவர் 'பாட்டி சொன்ன நீதிக் கதைகள்' என்ற சிறுவர் நூலை எழுதி வெளியிட்டுள்ளார். 'புத்தாசுகமா' என்ற சிறுவர் நாவலை எழுதி வெளியிட்டார். அந்நாவலும் பல பரிசுகளைப் பெற்றுள்ளது.

அத்துடன் 'காட்டு ராசா', 'மரணத்தின் விளிம்பில்', 'விடிவெள்ளி' ஆகிய சிறுவர் நாவல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

மேற்காட்டிய எழுத்தாளர்கள் அனைவரும் சிறப்பாகத் தாங்கள் வாழும் பிரதேசங்களினதும், பொதுவாக ஈழத்தினதும் மண்வாசனையையும், இயற்கை அழகையும் சித்தரித்துள்ளார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கட்டுரைகள்

பாடல், கதைகள் போன்றே கட்டுரையும் மொழியினை வளர்க்க உதவுகிறது. உரைநடையினை வளர்த்தெடுத்த பெருமை நல்லூர் தந்த ஆறுமுக நாவலரையே சாரும்.கட்டுரை எழுதுவது ஒரு கலை என்று கூறுவார்கள். அதற்கெனச் சில விதிமுறைகள் உண்டு. அவற்றைப் புரிந்து கொண்டு எழுதுதல் வேண்டும். எழுத எழுதத்தான் நல்லநல்ல கட்டுரைகளை எழுதலாம். இதற்கு நல்ல பயிற்சி வேண்டும். கட்டுரைத்தல் என்பது உறுதியாகச் சொல்லுதல், தெளிவாகக் கூறுதல் என்று பொருள்படும். எண்ணங்களை ஒரு கட்டுக் கோப்புடன் கூறுதல் அல்லது முறைப்பட ஒழுங்குபடுத்தி அமைத்தல் கட்டுரையாகும். எழுதுபவர் தமது கருத்துக்களையும் எண்ணங்களையும் ஒழுங்கு படுத்த வேண்டும். அப்படி ஒழுங்குபடுத்தி எழுதுவதுதான் கட்டுரையாகும். எழுதுபவர் தமது எண்ணங்கள் அனுபவங்கள், செய்திகள் கற்பனைகள், அறிவியல் அரசியல் சார்ந்த விடயங்களை உள்ளடக்கியதாகக் எழுதுவார்கள்.

பாடநூல்கள் வகுப்பு, வயது, அறிவு, அனுபவம், ஆகியவற்றைக் கருத்தில் கொண்டே எழுதப் பெறுகின்றன. பல நூல்களைப் படிப்பதால் ஏற்படும் அறிவு, ஆழம் அத்துடன் பிற அறிஞர்களுடன் உரையாடுவதால் பெற்றுக் கொள்ளும் அறிவும், அவர்களது மனதில் பதிந்து உரிய சந்தர்ப்பங்களில் அவற்றை நினைவு கூர்ந்து கட்டுரைகளில் பயன்படுத்த வேண்டும்.

கட்டுரை எழுதுபவர்கள் நன்றாக வாசிக்க வேண்டும். வாசித்ததை நன்றாக யோசிக்க வேண்டும். யோசித்ததை எழுதவேண்டும். அப்படி எழுதும்போது கட்டுரையின் தலைப்புக்கு ஏற்ப கற்பனையையும் சேர்த்து எழுதவேண்டும். வாசிப்பதால் நமது அறிவு விசாலமாகிறது. எழுதுவதால் நல்ல சிந்தனை பிறக்கிறது. 'எழுது ஏனென்றால் எழுதும்போது நீ சிந்திக்கின்றாய்' என்று சான்றோர்கள் கூறுவர். எழுதும்போது நமது சிந்தனையைத் தெளிவு படுத்திக் கொண்டு எழுதுதல் வேண்டும் எனக் கூறுவர்.

'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்' என்று நமது சான்றோர் கூறியுள்ளனர். முயற்சியுள்ளவர்கள். மொழியில் ஆற்றல் உள்ளவர்களாக உயர்வடைவார்கள்.

இவற்றைக் கருத்தில் கொண்டு நோக்குமிடத்து நமது ஆசிரியர்கள் அனைவரும் ஒரு வகையில் கட்டுரையாளர்களே. அவர்களின் முயற்சியினாலன்றோ நமது சிறார்கள் கட்டுரைகளை எழுதுகிறார்கள். நமது சிறுவர்களுக்காக பாடங்களிலும், தேவையை அறிந்தும் கட்டுரைகளைப் பலர் எழுதுகிறார்கள். பலர் தேர்வுகளை முன்னிலைப் படுத்தி வினா – விடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றைத் தயாரித்து வெளியிடுகின்றனர்.

மொழி விருத்தியினைக் கருத்தில் கொண்டு கட்டுரை நூல்களை எழுதுகின்றனர். அந்த வகையில் சிறுவர்களுக்காக எழுதுவோர்கள் உள்ளனர். பத்திரிகைகளுக்குப் பல்வேறு கட்டுரைகளையும் எழுதுகின்றனர். அதிகமாக சிறார்களுக்குக் கல்வி சார்ந்த கட்டுரைகளையும், வரலாறு சார்ந்த இலக்கியக் கட்டுரைகளையும் பலர் எழுதுகின்றனர்.

ஈழத்தில் உரைநடைக் கட்டுரைகள் எழுதியவர்களாகப் பின்வருவோர் நினைவுக்கு வருகின்றனர்:
(1) கவிஞர். துரைசிங்கம் (2) கே. எம்..எம் இக்பால்(3) யசோதராபாஸ்கரன் (3)அகளங்கன் (4)ஆலையூரன் க.தங்கராசா (5) எஸ். எதிர்மன்னசிங்கம்.(6) கேணிப்பித்தன் ச.அருளானந்தம் (7) ஜெனீரா தௌபீக் அமான்(7)மொழிவரதன் மகாலிங்கம் போன்றோரும் வேறு பலரும் விளங்குகின்றனர்.

## சிறுவர் நாடகங்கள்

சிறுவர் நாடகங்கள் இன்றும் குழந்தை நிலையிலேயே உள்ளது. ஒரு சிலரே சிறுவர் நாடகங்களில் ஈடுபட்டுள்ளனர். முதன்முதலில் சிறுவர் நாடகமாக 'சிறுவர் சல்லாப நாடகம்' என்ற பெயரில் தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவரே மேடை ஏற்றினார் என்பர். பேராசிரியர் சி. மௌனகுரு டொன் பொஸ்கோ பாடசாலையில் 'தப்பி வந்த தாடி ஆடு' என்ற நாடகத்தை மாணவரைக் கொண்டு தயாரித்து அரங்கேற்றினார்.1979ல் சண்முகலிங்கனின் ' கூடி விளையாடு பாப்பா' என்ற சிறுவர் நாடகத்தை தாசீஸியஸ் பெரியவர்களைக் கொண்டு அரங்கேற்றினார்.

பிரேமிளா சிவசேகரம் 'சிறுவர்களுக்கான நாடகங்கள்','பாட்டும் கூத்தும்' நூல்கள் வெளிவந்துள்ளன. பொ.சத்தியநாதன் தர்கா நகர் கல்வியியல் கல்லூரியில் சிறுவருக்கான நாடகங்களை அரங்கு முறைகளில் தயாரித்து அரங்கேற்றி வெற்றி பெற்றுள்ளார். வி .என்.எஸ் உதயச்சந்திரன் வானொலி சிறுவர் மலரில் சிறுவர் நாடகங்களை எழுதி நடிப்பித்தார். அந்நாடகங்களை சிறுவர் நாடகங்கள் என நூலாகவும் வெளியிட்டுள்ளார்.

உதயச்சந்திரனின் 'மரத்தடி நிழலில்' என்ற உரையாடல் நூல் அற்புதமான படைப்பாகும்.

அவரின் 'பாட்டும் படமும்' என்ற சிறுவர் பாடல் நூல் சிறுவருக்கு ஏற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் எழுதப்பட்டுள்ளது எனப் பாராட்டப் படுகிறது.

வ.இராசையா, முத்து இராதாகிருஸ்ணன், அ.அருள்பாஸ்கரன், பிரேமிளா சிவசேகரம், பொ.சத்தியநாதன், வி.என்.எஸ். உதயச்சந்திரன், பால சுகுமார், தற்போது லண்டனில் வாழும் தாசீஸியஸ்,தாமரைத் தீவான், ச.அருளானந்தம் க.அன்பழகன்,கிண்ணியா அ.முத்தலிப், எம்.ஐ.எம்.தாஹீர்,போன்றோர் சிறுவர் நாடகங்களை எழுதியும், நெறிப்படுத்தியும் உள்ளார்கள்.

இலங்கைப் பல்கலைக் கழகங்களும், கல்வியியல் கல்லூரிகளும் 'கவின் கலைக்கு' மதிப்பளித்துக் கற்கை நெறிகளைத் தொடங்கியமை 'நாடகமும் அரங்கியலும்'கற்கை நெறிக்கு உயிர்ப்பை அளித்துள்ளது. அதன் பயன் பாடசாலைகளில் திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ளது. கல்வியியல் கல்லூரிகளில் பயிற்சி பெற்று வரும் ஆசிரியர்களின் முயற்சியினால் பாடசாலைகளில் சிறுவர் நாடகங்கள் முக்கிய இடத்தினைத் தக்க வைக்கின்றன. இதற்கான தீனியை தமிழ் மொழித்தினம் நல்கின்றது. தமிழ் மொழித்தினப் போட்டிகளில் சிறுவர் நாடகங்களில் நவீன உத்திகளைக் கையாண்டு நாடகத்துக்கு உயிர்ப்பினைக் கொடுக்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள் நாடகங்களை எழுதித் தாமே நெறியாண்டு நடித்து அரங்கேற்றியதை நான் நேரில் கண்டிருக்கிறேன். அவ்வாறான நாடகங்களுக்கு நடுவராகச் சென்று மதிப்பீடு செய்துமுள்ளேன். மாணவர்களின் ஆற்றலை வளர்க்கத் தமிழ்மொழித் தினம் உறுதுணையாக இருக்கிறது. அந்த நிகழ்ச்சித் திட்டத்தைத் தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்து நடத்த உறுதுணையாக இருக்க வேண்டும்.

அமரர் வ.இராசையா வானொலி மாமாவாக வலம்வந்தவர்தான் அமரர் வ.இராசையா. அவர் சிறந்த கவிஞரும் சிறுவர் இலக்கிய ஆர்வலருமாவார். அவர் இலங்கை வானொலியில் சேவையாற்றும் போது வானொலி அண்ணாவாக, வானொலி மாமாவாக அருமையாகக் கதை , கவிதை, பாடல், நாடகம் போன்ற துறைகளில் நிகழ்ச்சிகளைத் தயாரித்து சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு உதவினார். இச்செயற்பாடு சிறுவர் மத்தியில் புதியதொரு திருப்பு முனையாக அமைந்தது. மனிதரை மதிக்கும் பண்பினை அவரிடமிருந்து பலர் கற்றுக் கொள்ள வேண்டும். நல்ல சிறுவர் இலக்கியங்களைத் தேடி அவற்றைப் பத்திரிகைகளில் எழுதுவார்.

பேராசிரியர் சி. மௌனகுரு நாடறிந்த நாடக விற்பன்னர். அவரது கந்தன் கருணை என்ற கூத்து அற்புதமானது. அவர் ஆடும் போது நாமும் சேர்ந்து ஆடுவது போலிருக்கும். சிறுவருக்காக நிறைய நாடகங்கள் தயாரித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிப்படுத்தியவர். சிறந்த கவிஞரும் நடிகரும் ஆவார். நாட்டுக் கூத்தை உயிராக மதிப்பவர். சிறுவர்களுக்கான பாடல்களை இயற்றியுள்ளார். சிறுவர்களைக் கொண்டு 1986களில் யாழ்ப்பாணத்தில் டொன் பொஸ்கோ பாடசாலையில் 'தப்பி வந்த தாடி ஆடு' என்ற நாடகத்தைத் தயாரித்து ஊக்குவித்தவர். அவர் எழுதிய 'நம்மைப் பிடித்த பிசாசுகள்' பல பாடசாலைகளில் அரங்கேற்றம் செய்யப் பட்டுப் பாராட்டுப் பெற்றது. பல சிறுவர் பாடல்களையும் எழுதியுள்ளார்.

சண்முகலிங்கன் சிறந்த சிறுவர் நாடகங்களை எழுதியும். நெறியாள்கை செய்தும் உள்ளார். 1979ல் சண்முகலிங்கனின் 'கூடி விளையாடு பாப்பா' என்ற சிறுவர் நாடகத்தை தாசீஸியஸ் பெரியவர்களைக் கொண்டு அரங்கேற்றினார்.

பிரேமிளா சிவசேகரம் 'சிறுவர்களுக்கான நாடகங்கள்','பாட்டும் கூத்தும்' நூல்கள் வெளிவந்துள்ளன.

முத்து இராதாகிருஸ்ணன்,முத்து இராதாகிருஸ்ணன் சிறந்த ஓவியரும், சிறுவர் நாடகங்களை எழுதி, நெறிப்படுத்தியும் வருகிறார். ஆசிரியராக, கல்விப் பணிப்பாளராகச் சேவையாற்றுகின்றார். தற்போது வவுனியா தெற்குக் கல்வி வலயத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றுகிறார். சிறுவருக்கான நூல்களை எழுதியுள்ளார். இதுவரை ஒன்பது நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். நல்ல மனிதராக வலம் வரும் முத்து இராதாகிருஸ்ணன் திருகோணமலை, வவுனியா ஆகிய இடங்களில் சிறுவர் நாடகங்களை அரங்கேற்றி உள்ளார். இதுவரை பத்து சிறுவர் நாடக நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

அ.அருள்பாஸ்கரன், நாடகங்களை எழுதி மாணவர்ளை நெறிப்படுத்தி அரங்கேற்றியுள்ளார். பேராசிரியர் சி.மௌனகுரு எழுதிய 'தப்பி வந்த தாடி ஆடு' 'நம்மைப் பிடித்த பிசாசுகள்' என்ற நாடகங்களை சிறந்த ஒப்பனையுடன் நெறிப்படுத்தி அரங்கேற்றி வெற்றி கண்டார். கொழும்பு விபுலானந்தாக் கல்லூரி, 'ரவர் மண்டபம்' ஆகிய இடங்களில் அரங்கேற்றிப் பாராட்டுப்பெற்றார். அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டிகளை முன்னாள் தமிழ் பிரிவுப் பணிப்பாளர் அல்பிரட் அவர்களுக்கு உதவியாக இருந்து வெற்றிகரமாக நடத்தி முடித்தவர்.

'நாங்க நெட்டை மரங்களல்ல' 'மனிதப் பிசாசுகள்' ஆகிய நாடகங்களை எழுதிப் பாடசாலை மாணவர்களைக் கொண்டு அரங்கேற்றினார். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தும் 'திருகோணமலை சிறுவர் சித்திர கூடம்' சிறுவர்களின் ஓவிய ஆற்றலை வளர்ப்பதுடன் அவர்களை நாடகத்திலும் ஆற்றல்பெற வழிசமைக்கிறது.

திருகோணமலை சிறுவர் சித்திர கூடம்' சிறுவர் நாடகப் பட்டறைகளையும் நடத்துகிறது. அதற்கு வளவாளர்களாக க.அன்பழகன், ச.அருளானந்தம் ஆகியோர் உதவுகின்றனர். சிறுவர் சித்திர கூடம் ஆண்டுதோறும் நடத்தும் சித்திரக் கண்காட்சியின் போது சிறுவர் நாடகங்களும் அரங்கேற்றம் பெறுவது வழக்கமாக உள்ளது.

இரா.இரத்தினசிங்கம் சேனையூர் மத்திய கல்லூரியில் அதிபராகச் சேவை செய்து ஓய்வு பெற்றவர். படிக்கும் போது நாடகங்களில் நடித்தவர். ஆசிரியராகச் சேவை செய்யும் போது ஆலங்கேணி மகாவித்தியாலயத்தில் ச.அருளானந்தம் எழுதிய பொதுவேலிப் பனை என்ற நாடகத்தை நெறியாள்கை செய்து போட்டியில் வெற்றி பெற்றவர். சேனையூர் மத்திய கல்லூரியில் விழுது என்ற நாடகத்தை எழுதி நெறிப்படுத்தினார். தமிழ்த் தினப் போட்டிகளில் பலமுறை சேனையூர் மத்திய கல்லூரி மாணவரை நெறிப்படுத்தி வெற்றி பெறச் செய்தவர். குகை வாசல் என்ற பெயரில் இசை நாடகத்தை எழுதி நெறிப்படுத்தி போட்டியில் வெற்றி பெறச் செய்தவர். பல ஆசிரியர்களுக்குத் தமிழ் மொழித்தினம் சிந்திக்கவும், சிறுவர் நாடகங்களை எழுதி நெறிப்படுத்தவும் களம் அமைத்துக் கொடுத்து உதவுகிறது.

பொ.சத்தியநாதன் தர்கா நகர் கல்வியியல் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமை யாற்றுகிறார். அங்கு பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கு நாடகத்தில் ஈடுபாட்டினை ஏற்படுத்தினார். சிறுவருக்கான நாடகங்களை அரங்கு முறைகளில் தயாரித்து அரங்கேற்றி வெற்றி பெற்றார்.

பால சுகுமார்,கிழக்குப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகவும். அழகியல் கலை பண்பாட்டியல் கற்கை நெறித் துறை தலைவராகவும் சேவையாற்றியவர். சேனையூர் மகாவித்தியாலயத்தில் கற்கும் போது இந்நாடகங்கள் பலவற்றில் நடித்தவர். ஆசிரியராகச் சேவை செய்யும்போது பல நாடகங்களை எழுதி மாணவர்களைக் கொண்டு நடிப்பித்து வெற்றி கண்டவர். கிழக்குப் பல்கலைக் கழகத்தில் சிறுவர் நாடகங்களை பல்கலைக் கழக மாணவர்களிடை பிரபல்யப் படுத்தினார்.

நாடகங்கள் பற்றி பல நூல்களை எழுதியுள்ளார். சிறுவர்களுக்கான நாடகங்களை எழுதி வெளியிட்டுள்ளார். நாடகப் பட்டறைகளை நடத்தி பலரையும் ஊக்குவித்தவர். இன்று வெளிநாட்டில் வசிக்கிறார். இலக்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகளில் ஈடுபட்டு உழைத்து வருகிறார்.

தாமரைத் தீவான், சிறுவர் நாடகங்களை எழுதி, மாணவர்களைக்கொண்டு நடிப்பித்து அரங்கேற்றி வெற்றி பல கண்டவர். அவரது நாடகங்கள் தனித்துவமானவை. நகைச்சுவை ஊடாக சீர்திருத்தக் கருத்துக்களைப் புகுத்திவிடுவார். உரையாடல் மூலம் பல அற்புதமான விடயங்களை விளக்குவார்.

கலாபூஷணம் செ.விபுணசேகரம் கட்டைபறிச்சானைச் சேர்ந்தவர். ஆசிரியராக, அதிபராக உதவிக் கல்விப் பணிப்பாளராகச் சேவையாற்றி ஓய்வு ற்றெவர். இசைத் துறையில் ஆர்வமிக்கவர். இசைக்கருவிகளை வாசிப்பதில் வல்லவர். தனது சிறுவர் நாடகங்களுக்கு வேண்டிய இசையினைத் தானே இசைத்து வெற்றிகரமாக நாடகத்தை நகர்த்திச் செல்வார். சிறப்பாக சிறுவர்களுக்கான இசை நாடகங்களை இயற்றி நெறிப்படுத்தி அரங்கேற்றியுள்ளார். காத்தவராயன் கூத்தினைச் சுருக்கிக் குறிப்பிட்ட நேரத்துக்குள் விறுவிறுப்பாக்கி சபையோரைக் கவர்ந்து விடுவார்.

சிறுவர்களுக்கான பாடல்களை எழுதி, இசையமைத்து மாணவர்களைப் போட்டிகளில் வெற்றி பெறச் செய்துள்ளார். நாடகம், பாடல். கட்டுரை என எழுதி மாணவர்களை இன்றும் வழிப்படுத்தி வருகின்றார். இந்த இலைமறை காய்களை வெளிக்காட்ட வேண்டிய அவசியத்தை நமது சமூகம் கரிசனை காட்ட வேண்டும்.

க.அன்பழகன் பண்பாட்டுப் பணிப்பாளராகக் கடமையாற்றுகிறார். அழகியல் பட்டதாரியான இவர் உணர்வு பூர்வமானதும் வீச்சானதுமான சிறந்த கவிதைகளையும் எழுதவல்லவர். கவிஞர் அன்பழகன் 'மீண்டும் எழுவோம்' என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டவர். கல்வி அமைச்சின் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறைகளில் சிறுவர் நாடகங்களைப் பழக்கி அரங்கேற்றம் செய்பவர். கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சில் கடமையாற்றும் போது வில்லுப் பாட்டு. நாடகங்கள், போன்ற அனைத்து நிகழ்ச்சிகள் அடங்கிய விழாக்களைத் திறம்பட நடத்தியவர்.

தற்போது மூதூர் பிரதேச செயலகத்தின் பண்பாட்டலுவல்களின் அலுவலராகக் கடமையாற்றுகிறார். அவரது சிறுவர் நாடகங்கள் சிந்திக்க வைப்பன. 'ஒற்றுமையே பலம்' என்ற சிறுவர் நாடகம் இனநல்லுறவை வலுப்படுத்த வல்லது. இனங்களுக்கிடையே ஒற்றுமையை உறுதி செய்யும் விதத்தில் எழுதப்பட்டது. 'காட்டுக்குள் திருவிழா' சிறுவர்களைக் குதூகலிப்பில் ஆழ்த்தி நடிக்கச் செய்யும். அத்துடன் ஆழ்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களையும் கொண்டமைந்தது சிறுவர் அரங்கச் செயற்பாட்டில் ஈடுபாடு கொண்டவர் என்பதை அவரது நாடகங்கள் புலப்படுத்தும்.

ச.அருளானந்தம் ஆசிரியராகக் கடமையாற்றும் போது பல்வேறு நாடகங்களை எழுதி பாடசாலை மாணவர்களைக் கொண்டு நடிப்பித்து வெற்றி கண்டவர். அவரது மாணவர்கள் பலர் ஆசிரியர்களாக சேவை செய்கிறார்கள். அவர்கள் பலர் இலக்கியத்தில் ஈடுபாடு உடையவர்களாக விளங்குகின்றனர். சேனையூரில் 'பழிக்குப் பழி', நான் சாமியாராக இருக்க மாட்டேன்' 'யமதரிசனம். 'ஒன்று படுவோம்', 'மணிமேகலை', 'புரட்சித் துறவி', 'மந்தரையின் சூழ்ச்சி' 'சூதாட்டம்', 'ஜூலியஸ் சீசர்' போன்ற நாடகங்களை எழுதி. நெறியாண்டு வெற்றி கண்டவர். தமிழ் மொழித்தினத்தில் சேனையூர் மகாவித்தியாலயம் நாடகப் போட்டியில் பல தடவைகளில் வெற்றி வாகை சூடியது.

இந்நாடகங்களை ஆலங்கேணி, கண்டி – கலஹா. வவுனியா போன்ற இடங்களில் அப்பகுதி பாடசாலை மாணவர்களைக் கொண்டு நடிப்பித்து வெற்றி ,கண்டவர். 'இருந்தென்ன போயென்ன' என்ற நாடகத்தை எழுதி வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மொழித்தின விழா மலரில் பிரசுரித்தார். அந்நாடகத்தை கொழும்பு இரத்மலானை இந்துக் கல்லூரி மாணவர்கள் நடித்து வானொலியிலும் ஒலிபரப்புச் செய்தார்கள்.

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகவும். அழகியல் கற்கை நெறித் துறை தலைவராகவும் சேவையாற்றிய பால.சுகுமார் இந்நாடகங்களில் பலவற்றில் நடித்தவர். ஆலங்கேணியில் 'தலைவிரிகோலம்' 'ஒற்றுமை", "சொள்ளல்", 'நெற்றிக் கண்' 'பொதுவேலிப் பனை' போன்ற நாடகங்களை எழுதி, நெறிப்படுத்தி அரங்கேற்றம் செய்தார்.

சேனையூர் மத்திய கல்லூரியில் இவரது நாடகங்களில் பாலசுகுமார். நாகேஸ்வரன். கிருஸ்ணகுமார். இரத்தினசிங்கம், மாரிமுத்து, ராகினி, இன்னும் பலர் நடித்தனர். ஆலங்கேணி மகாவித்தியாலயத்தில் சச்சிதானந்தன், சிறிகந்தராசா, செல்வராசா, விஜயகுமார், யோகமங்களம். செல்வராணி,ராதா, திருச்செல்வம். சிவகுமார்,செல்வநாச்சியார், முத்துலிங்கம், கமலா, இன்னும் பலர் நடித்தனர்.

## கிண்ணியா அ.முத்தலிப்

ஈழத்தில் தமிழ்மொழித் தினம் நடைமுறைக்கு வந்த பின் பாடசாலைகளில் தமிழ் மொழியில் சிறுவர்களுக்கு நாட்டம் அதிகமாயிற்று. ஆசிரியர்கள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர்கள், சமூகத்தில் உள்ள ஆர்வலர்கள் சிறுவர்களுக்கான நாடகங்கள் எழுதுவதில் ஈடுபாடு கொண்டு உதவினர். தங்கள் ஆற்றலை வளர்த்ததோடு சிறுவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கும் உறுதுணை நின்றார்கள். ஆர்வமுள்ளவர்கள் மட்டுந்தான் இவ்வாறான நிகழ்ச்சிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

அவ்வாறு ஈடுபாடு கொண்டு உழைத்தவர்தான் முத்தலிப் அவர்கள். அவர் ஆசிரியராக, அதிபராகச் சேவை செய்து ஓய்வு பெற்றவர். இரண்டு மாணவர்கள் பிரச்சினைப் பட்டு விட்டார்கள். சிறிய சண்டையும் நடந்தது. ஒரு மாணவன் அதனைப் பெரிது படுத்தி வீட்டில் கூறிவிட்டான். தந்தை கோபத்தோடு மற்ற மாணவர் வீட்டுக்கு வந்து தந்தையோடு சண்டையிடுகிறார். பின்னர் விதானையார் வீட்டுக்கு வந்து முறையிட்டு நீதி கேட்டு நிற்கிறார்.

விதானையார் முறைப்பாடு கூறியவருடன் வருகிறார். வழியில் சிறுவர்கள் சேர்ந்து விளையாடுகிறார்கள். சண்டையிட்ட சிறுவர் இருவரும் சந்தோசமாக விளையாடுவதை விதானையார் கண்டு பெற்றார் இருவருக்கும் காட்டி அறிவுரை கூறுகிறார். இதனை எழுதித் தயாரித்தவர் அ.முத்தலிப் ஆவார். அந்நாடகத்தில் வரும் காட்சிகள் இயற்கையாக இருந்தன. மீனவ சமூகத்தினர் வாழ்வு சித்தரிக்கப் பட்டிருந்தது. மின்சார வசதிகள் அற்ற அந்தக் காலத்தில் பெற்றமக்ஸ் உதவியுடன் நிகழ்த்திச் சாதனை படைத்தார். கிராமியப் பாடல்கள் மேடையில் பாத்திரங்கள் ஊடாகப் பரவ விடுவார். பல நாடகங்களை எழுதி நெறிப்படுத்திச் சிறுவர் நாடகங்களுக்குக் கிண்ணியாப் பிரதேசத்தில் உயிரூட்டினார்.

கிண்ணியா எம்.ஐ.எம்.தாஹீர் தரமான சிறுகதை எழுத்தாளன். 'பச்சைப் பாவாடை' சிறுகதைத் தொகுப்பு அருமையானது. சிறுவர் இலக்கியங்களில் நாட்டமும்,ஈடுபாடும் கொண்டு உழைத்தவர். எம்.ஐ.எம்.தாஹீர் அவர்கள். ஆசிரியராக, அதிபராகச் சேவை செய்து ஓய்வு பெற்றவர். அவர் மூதூர் மத்திய கல்லூரியில் கடமையாற்றும் போது அற்புதமான சிறுவர் நாடகங்களை எழுதி, நெறிப்படுத்தி பாடசாலையில் நாடக வளர்ச்சிக்கு உழைத்தார். தமிழ் மொழித்தினப் போட்டிகளில் தாஹிரின் நாடகங்கள் முக்கிய பங்கினை வகிக்கும். அக்காலத்தில் நாடகங்கள் கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பரிவுகளாக நடைபெற்றது. மாணவர்கள் பலர் பங்கு பற்றி தங்கள் ஆளுமையை வளர்த்துக் கொண்டனர்.

அதேபோல் ஆசிரியர் பலரும் எழுதத் தொடங்கினர். சிறுவர் நாடகங்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டார். ஆனால் அந்த நூலில் ஒரு பிரதியேனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இல்லை. அவர் மறைந்தது போலவே அவரது நூல்களும் மறைந்து விட்டன.

ஈழத்தில் சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் ஊடகங்களின் பங்கு கணிசமானளவு இருந்தது. முன்னர் அதிக பக்கங்களை ஒதுக்கி சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் பங்கு கொண்ட நாள். வார இதழ்கள் இன்று வாரத்தில் ஒரு நாளில் மட்டும் சிறு பகுதியை ஒதுக்கித் தமது பங்கினைச் சுருக்கிக் கொண்டன. எனினும் ஒரு சில பத்திரிகைகள் இன்றும் தமது பங்களிப்பை நல்கி வருகின்றன. வீரகேசரி, தினக்குரல். தினகரன் போன்ற தேசிய பத்திரிகைகள, தமது வார இதழ்களில் ஒரு பக்கத்தையேனும் ஒதுக்கிச் சிறுவர் இலக்கியங்களை இன்றும் வளர்க்கின்றன.

சிறுவர்களுக்காகப் பல சஞ்சிகைகள் வெளிவந்தன. ஆனால் அவை இன்று இல்லை. அவ்வாறான இதழ்களுக்கு நமது மக்கள் ஆதரவை நல்கவில்லை. குரும்பச்சிட்டியைச் சேர்ந்த அமரர் மு.க. சுப்பிரமணியம் வெற்றிமணி என்ற பெயரில் சிறுவர்களுக்காக சஞ்சிகை ஒன்றினை நடத்தினார். 1968 ஆண்டளவில் வெற்றி மணி பாடசாலைகளில் மாணவர் கைகளில் தவழ்ந்தது. வெற்றிமணியில் சிறுவர்களது ஆக்கங்கள் வெளிவந்தன. பல ஆசிரியர்களையும் உற்சாகப் படுத்தி எழுதத் தூண்டினார். கேணிப்பித்தன் ச.அருளானந்தம்,அனு.வை.நாகராஜன், பா.சத்தியசீலன் போன்றோர் வெற்றிமணியில் சிறுவர் பாடல்களை எழுதினர்.

பாட்டி எங்கள் பாட்டி
பாட்டுப் பாடும் பாட்டி
கூட்ட விரலை பார்த்துக்
கொடுப்புள் சிரிக்கும் பாட்டி

கையில் தடியை எடுப்பார்
காலில் செருப்பைத் தொடுப்பார்
பையைச் சுருட்டி எடுப்பார்
பாட்டி கடைக்குப் போவார்

கூப்பன் கடையில் நிற்பார்
குறித்த பொருளை பார்ப்பார்
ஆப்பிடும் பொருளை திணிப்பார்
அப்புறம் தலையில் சுமப்பார்

சோம்பல் இல்லா எம்பாட்டி
சமையல் செய்தால் நாவூறும்
ஆம்பல் பூக்கும் அவர்முகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துக்கும் பாட்டி துணையாவார்.

அன்பின் இருப்பிடம் எம்பாட்டி
அறிவின் பிறப்பிடம் எம்பாட்டி
இன்பம் பெருகும் நினைத்தாலே
எங்கள் பாட்டி இனியவரே.

தம்பி கேளடா..!

தம்பி கேளடா தலைவன் நீயடா
நம்பி இருப்பது நாளை உலகடா!
தும்பி போலிரு சுழன்று உழைத்திடு
துணிவு பெற்றுநீ துயரைப் போக்கிடு!

போன்ற சிறுவர் பாடல்களை கேணிப்பித்தன் ச.அருளானந்தம் எழுதினார். பல பாடசாலை மாணவர்கள் எழுதினார்கள். திரு.மு.க. சுப்பிரமணியம் பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்களுக்கு அறிவுரையும். பரிசுகளும் வழங்கி எழுதத் தூண்டினார். அவரது இந்த மகத்தான செயலை தமிழ் கூறும் நல்லுலகம் நன்றியோடு போற்றும்.

சிறுவர்களுக்காகப் பல்வேறு சஞ்சிகைகள் இருந்தால் நமது சிறார்கள் எழுதுவதில் கரிசனை காட்டுவார்கள். இன்று அவர்கள் கையடக்கத் தொலைபேசி போன்ற நவீன ஊடகத்துறைச் சாதனங்களைப் பயன்படுத்தி நலிவடையாது இருப்பார்கள்.

காட்டூன் படங்களும், ஏனைய காணொளிகளும் திரையில அசையும் போது நமது விழித்திரைகளும் அசையும். இதனால் பார்வை குன்றும் எனவும் கூறப்படுகிறது. கையடக்கத் தொலைபேசிகளில் பல்வேறு விளையாட்டுகள் உள்ளன. இவ்விளையாட்டுக்கள் சிறுவர்களைச் சோம்பேறிகளாக ஆக்கிவிடுகின்றன உடல் உழைப்புக்கு இடமில்லை.

ஆடவும் பாடவும் ஓடியாடி விளையாடவும் தெரியாதவர்களாக நமது சிறுவர்கள் உள்ளனர். உடலுறுதியற்ற இளஞ்சமூகம் உருவாகி வருகிறது. இவற்றை மாற்றியமைக்க அனைவரும் முன்வரவேண்டும்.

சிறுவர் இலக்கியங்கள் பற்றிய தேடல்களில் பலர் முனைந்துள்ளனர். நம்மிடம் உள்ள சிறுவர் இலக்கிய நூல்களைப் படித்து விட்டு தங்களது சிந்தனைகளையும் சேர்த்து எழுதுகிறார்கள். அவர்களது அந்த நல்முயற்சிகளால் ஓரளவு சிறுவர் இலக்கியங்களின் செல்நெறியில் திருப்புமுனை தோன்றியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுகின்றவர்கள் தமது உள்ளங்களில் உதயமாகும் கருவூலங்களையே எழுதுகின்றனர். பேராசிரியர. கா.சிவத்தம்பி, பேராசிரியர் க.கைலாசபதி,பேராசிரியர். செ.யோகராஜா. கவிஞர் ஏ. இக்பால். கவிஞர் த.துரைசிங்கம். எஸ்.சிவலிங்கராசா, செ.கணேசலிங்கன், கனக.செந்திநாதன். கல்வயல் வே. குமாரசாமி. வே. செவ்வேட்குமரன், கே.எஸ்.அருணந்தி. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை. கவிஞர்.இ.முருகையன், மயிலங்கூடலூர் பி.நடராஜன், மு.பொன்னம்பலம், சோ. பத்மநாதன், செ.யோகநாதன், இ.அம்பிகைபாகன் தம்பு.சிவா. எஸ். எதிர்மன்னசிங்கம். மெட்ராஸ்மயில், ச.அருளானந்தம் இன்னும் சிலர் சிறுவர் இலக்கியங்கள் பற்றி எழுதுகின்றனர்.

இவர்களின் கட்டுரைகள் பல அரிய கருத்துக்களைக் கூறினாலும், சிறுவர் இலக்கியங்களின் திருப்புமுனைகளை மாற்றியமைப்பதற்கு வேண்டிய வழிவகைகளை விளக்கவில்லை என்றே கூறலாம். எனினும் கலாநிதி.செ.யோகராஜா அவர்களின் கட்டுரைகளில் காத்திரமான கருத்துக்களைக் காணலாம். சிறப்பாகக் கூறின் இன்று சிறுவர் இலக்கியங்கள் ஒரு வளர்ச்சிப் படியை நோக்கி நகர்வதற்கு இவர்களின் பங்கு உறுதுணையாகியுள்ளது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது ஆய்வுக்குத் துணைநின்றவை:

- கூகுல் இணையதளம்
- தமிழ் இலக்கிய வரலாறு – டாக்டர். மு.வ.
- தமிழ் இலக்கிய வரலாறு – டாக்டர் பூவண்ணன்
- திருகோணமலை கிராமியப் பாடல்கள். ச.அருளானந்தம்
- ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம். தொகுப்பு- கலாநிதி.செ.யோகராஜா, குமரன் புத்தக இல்லம்.
- ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம்- தொகுப்பு கலாநிதி. செ.யோகராஜா. குமரன் புத்தக இல்லம்
- இலங்கை கிராமிய விளையாட்டுக்கள் - ச.அருளானந்தம்.
- முன்பள்ளிக் கல்வித் தத்துவம். ச.அருளானந்தம்
- குழந்தை உளவியல் - ச.அருளானந்தம்
- முன்பள்ளிக் கல்விக் கற்றல் செயற்பாடுகள் ச.அருளானந்தம்.
- தாயகஒலி. சஞ்சிகை. ஆசிரியர் தம்பு.சிவா
- இந்நூலில் பெயர் சுட்டிய ஆசிரியர்களின் நூல்கள்.

A. KUGHAN
72, 2nd LANE
ANANDAPURI
TRENCO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிற சிறுவர் நூல்கள்

| இல. | நூலின் பெயர் | நூலின் வகை |
|---|---|---|
| 01 | இன்பக் கனிகள் | சிறுவர் பாடல் |
| 02 | பாட்டுப் பாடுவோம் | சிறுவர் பாடல் |
| 03 | காகமும் தம்பியும் | சிறுவர் பாடல் |
| 04 | பாடி ஆடுவோம் | சிறுவர் பாடல் * |
| 05 | கடலும் காவிரியும் | சிறுவர் பாடல் |
| 06 | சின்னச் சின்னப் பாட்டு | சிறுவர் பாடல் |
| 07 | மனதுக்கினிய பாட்டு | சிறுவர் பாடல் * * |
| 08 | ஆனந்தமான பாட்டு | சிறுவர் பாடல் |
| 09 | சகோதரராய் வாழ்வோம் | சிறுவர் பாடல் |
| 10 | இசையோடு அசைவோம் | சிறுவர் பாடல் * |
| 11 | தம்பிக்கொரு பாட்டு | சிறுவர் பாடல் |
| 12 | அறிவைத் தரும் பாடல்கள் | சிறுவர் பாடல் * * |
| 13 | இனிக்கும் பாடல்கள் | சிறுவர் பாடல் |
| 14 | அறிவொளிப் பாடல்கள் | சிறுவர் பாடல் |
| 15 | தங்கைக்கொரு பாட்டு | சிறுவர் பாடல் |
| 16 | ஆடிப்பாடும் பாடல் | சிறுவர் பாடல் * |
| 17 | பாங்குடன் பயில்வோம் | சிறுவர் பாடல் |
| 18 | ஆடி மகிழ்வோம் | சிறுவர் ஆடலும் பாடலும் |
| 19 | தெரிந்துகொள்வோம் | சிறுவர் பாடல் |
| | ஆடத் தூண்டும் பாடல் | அச்சில் |
| | | |
| | **சிறுவர் கதைகள்** | |
| 01 | பூஞ்சிட்டுக்கள் | சிறுவர் கதைகள் |
| 02 | சின்னத் தேவதைகள் | சிறுவர் கதைகள் * |
| 03 | கண்ணனும் இராமனும் | சிறுவர் கதைகள் * |
| 04 | தங்க மாம்பழம் | சிறுவர் கதைகள் |
| 05 | சிறகு வைத்த கதைகள் | சிறுவர் கதைகள் |
| 06 | சாதனையாளர் | சிறுவர் கதைகள் * |
| 07 | அற்புதமான வானம் | சிறுவர் அறிவியல் கதைகள் |
| 08 | பார்த்தேன் கதைகள் | சிறுவர் கதைகள் * * |
| 09 | மலைத்தேன் கதைகள் | சிறுவர் கதைகள் |
| 10 | சுவையான கதைகள் | சிறுவர் கதைகள் |
| 11 | சின்னச் சின்ன சிறுவர் கதைகள் | சிறுவர் கதைகள் * |
| 12 | சந்திரன் கதைகள் | சிறுவர் கதைகள் * |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | நூலின் பெயர் | நூலின் வகை |
|---|---|---|
| 13 | நிலாவில் நிம்மதி | சிறுவர் கதைகள் |
| 14 | சிந்தனைக் கதைகள் | சிறுவர் கதைகள் |
| 15 | முனிராஜன் கதைகள் | சிறுவர் கதைகள் |
| | சுவைத்தேன் கதைகள் (அச்சில்) | சிறுவர் கதைகள் |
| | | |
| | **வாழ்க்கை வரலாறு** | |
| 01 | வித்தகன் விபுலானந்தன் | சிறுவர் இலக்கியம் - சரிதை |
| 02 | கரம்பொன் தனிநாயகம் | சிறுவர் இலக்கியம் - சரிதை |
| 03 | சாதனைப் பெண்கள் | வாழ்க்கை வரலாறு |
| | | |
| | **சிறுவர் கட்டுரை நூல்கள்** | |
| 01 | பேனாவினால் பேசுவோம் - 1 | சிறுவர் கட்டுரைகள் |
| 02 | பேனாவினால் பேசுவோம் - 11 | சிறுவர் கட்டுரைகள் |
| 03 | எழுதுவோம் வாசிப்போம் | சிறுவர் கட்டுரைகள் |
| 04 | மலரும் மொட்டுக்கள் 3,4,5,6 | சிறுவர் கட்டுரைகள் |
| 05 | மனங்கவரும் மொட்டுக்கள் | சிறுவர் கட்டுரைகள் |
| 06 | அவிழும் மொட்டுக்கள் | சிறுவர் கட்டுரைகள் |
| 07 | தமிழ்த்தேன் துளிகள் | சிறுவர் கட்டுரைகள் |
| | | |
| | **சிறுவர் நாவல்** | |
| 01 | பளிங்குத் தீவு | சிறுவர் நாவல் |
| 02 | பயங்கொள்ளலாகாது பாப்பா | சிறுவர் நாவல் * |
| 03 | காட்டில் கலவரம் | சிறுவர் நாவல் |
| 04 | உல்லாசப் பயணம் | சிறுவர் நாவல் |
| 05 | மனதில் உறுதி வேண்டும் | சிறுவர் நாவல் * |
| 06 | அந்த மாணவர் உலகம் | சிறுவர் நாவல் |
| 07 | துணிச்சல் மிக்க சுந்தரி | சிறுவர் நாவல் |
| 08 | சுனாமி தந்த உறவு | சிறுவர் நாவல் |
| 09 | மகாவலியின் மைந்தன் | சிறுவர் நாவல் |
| | | |
| | **சிறுகதைத் தொகுதி** | |
| 01 | அந்த ஆவணி ஆறு | சிறுகதைகள் - தொகுதி |
| 02 | வம்பிப் பூ | சிறுகதைகள் - தொகுதி |
| 03 | கேணிப்பித்தன் கதைகள் | சிறுகதைகள் - தொகுதி |
| 04 | ஏன் வந்தாய்? | சிறுகதைகள் - தொகுதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | நூலின் பெயர் | நூலின் வகை |
|---|---|---|
| 05 | கும்பத்துமால் | சிறுகதைகள் - தொகுதி |
| 06 | எல்லாரும் விசரர்கள்தான் | சிறுகதைகள் - தொகுதி |
| | | |
| | **நாவல்** | |
| 01 | வாக்கினிலே இனிமை வேண்டும் | நாவல் - பரிசு பெற்றது |
| 02 | கனவு மெய்ப்பட வேண்டும் | நாவல் - பரிசு பெற்றது |
| 03 | நெருங்கின பொருள் கைப்பட வேண்டும் | நாவல் - பரிசு பெற்றது |
| 04 | நினைவு நல்லது வேண்டும் | நாவல் |
| 05 | நல்லதோர் வீணை | நாவல் |
| 06 | என்னை இயக்கும் சக்தி நீ | நாவல் |
| | | |
| | **கவிதைத் தொகுதி** | |
| 01 | கேணிப்பித்தன் கவிதைகள் | கவிதைத் தொகுதி |
| 02 | பித்தரின் உலகம் | கவிதைத் தொகுதி அச்சில் |
| | | |
| | **கல்வியியல்** | |
| 01 | முன்பள்ளிக்கல்வித் தத்துவம் | கல்வியியல் |
| 02 | முன்பள்ளிக் கற்றல் செயற்பாடுகள் | கல்வியியல் |
| 03 | முன்பள்ளி உளவியல் | கல்வியியல் |
| 04 | விளையாட்டு அல்லாத விளையாட்டு - மொழிபெயர்ப்பு | கல்வியியல் |
| | | |
| | **English** | |
| 01 | Butterflies and Children | Children Story |
| 02 | The Man and The Fish | Children Story |
| 03 | The Tree and The Parrot | Children Story |
| 04 | The Elephant and Ants | Children Story |
| 05 | The Little Spider | Children Story |
| 06 | The Crow and the Cuckoo | Children Story |
| 07 | Essays for Little Children | Children Essays |
| 08 | Essays for Kids | Children Essays |
| 09 | Let's Read and Write Essays | Children Essays |
| 10 | A New Dawn of Essays | Children Essays |
| | | |
| | | |
| | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியர் ...



திருகோணமலை மாவட்டதில் சிறுவர் இலக்கியத்தில் முன்னணியில் திகழும் கலாபூஷணம் கேணிப்பித்தன் ச.அருளானந்தம் நாடறிந்த எழுத்தாளர். சிறுவர்களுக்காகப் பாடல்கள், சிறுவர் கதைகள், கட்டுரைகள், நாவல்கள் என எழுதி வெளியிட்டுள்ளார்.இதுவரை ஆறு நூர்ல்களுக்குச் சாகித்திய விருதினைப் பெற்றுள்ளார். முன்னைநாள் வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் மேலதிகக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றபின்னும் எழுதுவதே தனது மூச்சாகக் கொண்டு செயற்படுபவர்.

கலாநிதி கேணிப்பித்தன் ச.அருளானந்தம் சிறுகதை. நாவல். எனப் பல்துறைகளிலும் ஈடுபாட்டுடன் தடம் பதிப்பவர்.இரண்டு இளைஞர் நாவல்களுக்கு அகில இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசுகளைப் பெற்றுள்ளார். அவற்றுள் 'வாக்கினிலே இனிமை வேண்டும்' என்ற நாவலும்,'கண்ணனும் இராமனும்' என்ற சிறுவர் நூலும் சிங்கள மொழியில் மொழிமாற்றம் செய்யப் பட்டுள்ளது.

'ஈழத்தில் சிறுவர் இலக்கியம்' என்ற ஆய்வுநூல் சிறுவர் இலக்கியம் பற்றி ஆராய்கிறது. இந்நூலை வாசிக்கும் போது நல்ல சிறுவர் இலக்கியங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ளலாம். இத்தகைய நூல் நம்மவர்களுக்குக் கட்டாயம் தேவை. சிறுவர் இலக்கியத்தில் பரீச்சையம் உடையவர்கள் எழுதினால் அது பயனுடையதாக இருக்கும். அவரது நூல்களை வாங்கி உற்சாகப் படுத்தி எழுதத் தூண்டுவது நமது தலையாய கடமை என்பதை நினைவில் கொண்டு நூல்களை வாங்குவோம். வாசிப்போம். பின்னர் அவற்றையிட்டு யோசிப்போம். நன்றி.



ஒ.குலேந்திரன்
முன்னைநாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்
தலைவர், சமூகக் கற்கை நிலையம்
56, மத்திய வீதி, உவர்மலை.
திருகோணமலை

ISBN : 978-955-51451-0-7
Price : Rs. 350/-

9 789555 145107

Printed by :
NISAAN PRINTERS (PVT) LTD. No. 64N, Peer Saibo Street, Colombo-12. TEL : 2439401, 4997221

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org